# தமிழரசு

ஜூன் 2022
விலை ரூ.20/–

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் : 52 இதழ் : 12

75 சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா




'கம்பீரக் கலைஞரின் கலைமிகு சிலை'



மாண்புமிகு இந்தியப் பிரதமர் **திரு. நரேந்திர மோடி** அவர்கள் 26.05.2022 அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில், பிரதமரின் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின்கீழ்ச் சென்னை, பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் ரூ. **116.37** கோடி செலவில் கட்டப்பட்டுள்ள, **1,152** குடியிருப்புகளைத் திறந்து வைத்துப் பயனாளிகளுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார்.

# முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 99ஆவது பிறந்தநாள் விழா



கோபாலபுரம் இல்லம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்
99ஆவது பிறந்தநாளையொட்டி 03.06.2022 அன்று
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
முத்தமிழறிஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து,
நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

## தமிழினத் தலைவர்

**த**மிழுக்காகவும் தமிழர் நலனுக்காகவும்
வாழ்நாளெல்லாம் போராடிய போராளி;
ஆட்சித் தேரைச் சமூகநீதிப் பாதையில்
செலுத்திய சமத்துவச் சிந்தனையாளர்;
திராவிடக் கொள்கைகளால் தமிழ்ச்
சமூகத்தைத் தட்டியெழுப்பிய பகுத்தறிவாளர்;
'உடன்பிறப்பே...' என நம்மை உளமார
அழைத்து உணர்வூட்டியத் தலைவர்!

இன்னும் ஓராண்டில் நூற்றாண்டு
காணும் தமிழ்நாட்டின் தலைமகன் – தன்
உதிரத்தால் எனைச் சமைத்த எந்தை
'தமிழினத் தலைவர்'
கலைஞரைப் போற்றினேன்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
வலைத்தளப் பதிவு



கலைஞர் நினைவிடம்



சி.ஐ.டி. நகர் இல்லம்






ஓமந்தூரார் அரசினர்தோட்ட வளாகம்

# தமிழரசு

**தமிழ்நாடு அரசு**
**செய்தித்துறையின் வெளியீடு**

திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது வருடம் : வைகாசி – ஆனி
ஜூன் 2022
மலர் : 52 விலை ரூ.20 இதழ் : 12

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
**த. ஹரிராம்**
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
**அ. மகேஸ்வரி**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
**சு. தீபா**
**எஸ். உதயா கதிரவன்**
**ச. மஞ்சுளா**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
**அ. சுகுமார்**
**மு. மணிமேகலை**
**அ. மதன்**
**கு. சுபாஷ்**

கணினி வடிவமைப்பு
**தி. ஜெய்சங்கர்**
**க.இரா. உமாமகேஸ்வரி**

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
**கோ. சந்திரசேகர்**

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.


**கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்**
**குரிமை உடைத்திவ் வுலகு.** - குறள்: 578

கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு இந்த உலகமே உரிமையுடையதாகும்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

## இந்த இதழில்...


★ “நவீனத் தமிழ்நாட்டின் தந்தை” ....5
★ வளர்ச்சி, சமூக நலனின் மரபை நிலைநிறுத்தியவர் ....8
★ சென்னை துறைமுகம்–மதுரவாயல் இரண்டடுக்கு உயர்மட்டச் சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் ....10
★ அகழாய்வுத் தொல்பொருட்கள் கண்காட்சி ....16
★ “உதகை–200” விழா ....22
★ “ஊட்டச்சத்தை உறுதி செய்” திட்டம் ....29
★ கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் தொடக்கம் ....30
★ “இளைஞர் திறன் திருவிழா” ....35
★ “காவல்துறை நம் நண்பன்” ....36
★ ‘மகசூல் பெருக்கம்–மகிழும் விவசாயி’ ....40
★ சிவகங்கையில் ரூ.119.68 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு அடிக்கல் ....52
★ முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகக் கட்டுமானப் பணிகள் ஆய்வு ....58
★ புதுக்கோட்டையில் ரூ.370 கோடியில் 48,868 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் ....59
★ “யாதும் ஊரே யாவரும் கேளிர்” ....68
★ சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் ஆதாரங்கள் ....70
★ “அனைத்தும் சாத்தியம்” மாற்றுத்திறனாளிகளுக்கான அருங்காட்சியகம் ....75


## முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு. **எம்.வெங்கையா நாயுடு** அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 28.05.2022 அன்று சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்தார்.







# “நவீனத் தமிழ்நாட்டின் தந்தை”

**“வா**ழ்விலோர் பொன்னாள்” என்று எந்நாளும் மகிழ்ந்து போற்றும் நாளாக இந்த நாள் அமைந்துள்ளது. தமிழ்நாட்டை, இந்தத் தமிழினத்தை, இந்தத் தமிழ்நிலத்தை வானுயரத்துக்கு உயர்த்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நம்முடைய நன்றியின் அடையாளமாக ‘தமிழினத் தலைவரின்’ இந்த மாபெரும் சிலை எழுப்பப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் நிலையை உயர்த்தப் பாடுபட்டவர் என்பதால்தான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குத் தமிழ்நாடு முழுவதும் சிலை எழுப்பப்பட்டு வருகிறது.

இன்று எழுப்பப்பட்டு இருக்கக்கூடிய சிலைக்கு இருக்கக்கூடிய சிறப்பு என்னவென்றுக் கேட்டால், தந்தைப் பெரியாருக்கும், பேரறிஞர் அண்ணாவுக்கும் இடையில் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய சிலை அமைந்திருக்கிறது. இது மிகமிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது!

தந்தைப் பெரியாரின் ஈரோட்டுப் பள்ளியிலே படித்தவன், பேரறிஞரின் காஞ்சிக் கல்லூரியிலே பயின்றவன் என்று தன்னைப் பற்றிக் கலைஞர் அவர்கள் அடிக்கடி குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதற்கு ஏற்பவே பெரியாருக்கும், அண்ணாவுக்கும் இடையில் தலைவர் கலைஞருடைய சிலை அமைந்திருக்கிறது.

இன்னொரு சிறப்பு என்னவென்றுக் கேட்டால், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால், இந்த ஓமந்தூரார் தோட்டத்தில் உருவாக்கப்பட்டதுதான் இந்த மாபெரும் கட்டடம். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்காகக் கட்டப்பட்ட கட்டடம் இது.

தற்போது மருத்துவமனையாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், அது கம்பீரமாகக் கலைஞர் அவர்களின் கனவுக் கோட்டையாகவே எழுந்து நிற்கிறது. அங்குதான் அவரது சிலை எழுப்பப்பட்டிருக்கிறது. சிலையைத் திறந்து வைத்திருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சி, இந்த விழா நடக்கக்கூடிய இடம் கலைவாணர் அரங்கமானது, ஒருகாலத்தில் ‘பாலர் அரங்கம்’ என்று இருந்தது. அதனை மிகப்பிரம்மாண்டமாகக் கட்டி எழுப்பிக் கலைவாணர் அரங்கம் என்று பெயர் சூட்டியவரும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

இத்தகைய சிறப்புகள் கொண்ட விழாவுக்கு மகுடம் வைப்பதைப்போல, இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. வெங்கையா நாயுடு அவர்கள் வருகை தந்து, தலைவர் கலைஞர் அவர்களின் சிலையைத் திறந்து வைத்திருக்கிறார்கள்.

நம்முடைய நட்புக்குரிய இனிய நண்பராகத்தான் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர்



அவர்கள் எப்போதும் இருந்து வருகிறார். திரு. துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியதைப்போல, 2001ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் மிகக் கொடூரமான முறையில், அன்றைய ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்ட போது, அன்றைக்குக் குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர்.நாராயணன் அவர்களும், பிரதமராக இருந்த வாஜ்பாய் அவர்களும் துடிதுடித்துப் போனார்கள். அப்போது, அன்றைய ஆட்சியாளர்களைக் கடுமையாகக் கண்டித்து, கடுமையாக விமர்சித்தவர்தான் இங்கே வந்திருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு திரு. வெங்கையா நாயுடு அவர்கள். அதே நட்பை இன்று வரையில் பேணிவரக் கூடியவராகத் தொடர்ந்து இருக்கிறார்.

தலைவர் கலைஞர் அவர்களுடைய சிலையைத் திறந்து வைக்க யாரை அழைக்கலாம் என்று நாங்கள் சிந்தித்த நேரத்தில், குடியரசுத் துணைத் தலைவர் அவர்களது முகம்தான் எங்களுடைய நெஞ்சில் தோன்றியது. அவரை நேரில் சந்தித்துக் கேட்ட நேரத்தில், மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டார். மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர் திரு.வெங்கையா நாயுடு அவர்கள், மிகச்சிறந்த ‘நாடாளுமன்ற ஜனநாயகவாதி’ என்று பெயர் எடுத்தவர். மாநிலங்களவையைக் கொந்தளிப்பான சூழலிலும் திறம்படக் கையாண்டவர்.

எனவேதான், கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில், அறுபது ஆண்டுகள் பணியாற்றியதற்கு எத்தகைய திறமை வேண்டும் என்பது மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். இன்று தலைவர் கலைஞரின் சிலையை அவர் திறப்பது மிக, மிகச் சாலப் பொருத்தமாக அமைந்திருக்கிறது. இந்திய நாட்டின் குடியரசுத் துணைத் தலைவர் என்ற மிக உயர்ந்த பதவியில் இருக்கும்போது, நம்முடைய தமிழினத் தலைவரின் சிலையைத் திறந்து வைத்திருப்பது இன்னும் பெருமைக்குரிய நிகழ்வாக இது நடந்துகொண்டிருக்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் அவர்கள் திறந்து வைத்தார்கள். தலைவர் கலைஞரின் சிலையைக் குடியரசுத் துணைத் தலைவராகிய நீங்கள் இங்கே வந்து திறந்து வைத்திருக்கிறீர்கள்.

இந்திய நாட்டின் பிரதமர்களை உருவாக்கியவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர்கள் பலரை உருவாக்கியவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்திய அளவில் நிலையான ஆட்சியை உருவாக்குவதற்கும் துணை நின்றவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டில் ஐந்து முறை முதலமைச்சராக இருந்து இந்த நவீனத் தமிழகத்தை உருவாக்கியவரும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அத்தகைய மாமனிதருக்குத்தான் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலாக 1967ஆம் ஆண்டு ஆட்சி அமைத்த நேரத்தில் கலைஞர் சொன்னார், “ஏழைக்குலத்தில் உதித்த ஒரு தமிழன் ஏறுகிறான் அரசுக் கட்டிலில்! இனி ஏழைக்கு வாழ்வு வந்தது” என்று தலைப்புச் செய்தியாக ‘முரசொலியில்’ தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள், இரண்டு ஆண்டுகள்தான் ஆட்சியில் இருக்க இயற்கை அனுமதித்தது. அதன் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்று, இந்த இயக்கத்தைத் தனது இறுதி மூச்சுவரைக் காப்பாற்றியவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

நம் தலைவர் கலைஞர் அவர்கள் பன்முகத் திறமைக் கொண்டவர்! எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், அந்தத் துறையில் கோலோச்சியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

இலக்கியமா? எத்தனை! எத்தனை! குறளோவியமும், தொல்காப்பியப் பூங்காவும், பொன்னர் சங்கரும் காலத்தால் அழிக்க முடியாத காப்பியங்கள்!

திரையுலகமா? இன்றும் பராசக்தி, மனோகரா, பூம்புகார் வசனங்கள் நாட்டிலே ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

என்னுடைய பாசமிகு நண்பர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் வருகை தந்திருக்கிறார்கள். அவருக்கு நன்கு தெரியும், நன்கு அறிவார் திரையுலகத்துக்குள் வருபவர்கள் கலைஞரின் வசனத்தைப் பேசி அதில் தங்களது திறமையை நிரூபித்து, உள்ளே நுழைந்தவர்கள் என்பதுதான் வரலாறு.

அரசியலா? ஒரு மாபெரும் அரசியல் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று ஏறக்குறைய 50 ஆண்டுகள் அதை வழி நடத்திய ஒரே தலைவர்.

ஆட்சியா? இன்றைக்கு நாம் காணக்கூடிய நவீனத் தமிழ்நாடு என்பது தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கான தொலைநோக்குப் பார்வை அவருக்கு இருந்தது. அதற்கான உள்ளார்ந்த அக்கறை அவருக்கு இருந்தது. ஏனென்றால், தமிழ்நாட்டில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடியலாக அவர் விளங்கினார். அத்தகைய மக்களின் உயர்வுக்காக எழுதினார். அவர்களுக்காகப் பேசினார். அவர்களுக்காகப் போராட்டம் நடத்தினார். அவர்களுக்காகச் சிறையில் இருந்தார். ஆட்சி, அதிகாரம் கிடைத்ததும், அவர்களுக்காகத் திட்டங்களைத் தீட்டினார். அந்தத் திட்டங்களால் உருவானதுதான் இந்தத் தமிழ்நாடு.

அதனால்தான் அவரை “Father of Modern Tamil Nadu”, “நவீனத் தமிழ்நாட்டின் தந்தை” என்று இன்றைக்கும் புகழ்ந்து கொண்டிருக்கிறோம். அவர் உருவாக்கிய கல்லூரிகளில் படித்தவர்கள், அவரால் வேலைவாய்ப்புப் பெற்றவர்கள், அவர் காப்பாற்றிக் கொடுத்த சமூக நீதியால் உயர்வு பெற்றவர்கள், இலவச மின்சாரத் திட்டத்தால் மண்ணைச் செழிக்க வைத்திருக்கக்கூடிய உழவர் பெருமக்கள், சிப்காட், சிட்கோ தொழில் வளாகங்களால் வேலைவாய்ப்பைப் பெற்றவர்கள், குடிசைமாற்று வாரியத்தால் வீடுகளைப் பெற்றவர்கள், நிலங்களைப் பெற்ற ஏழை எளியவர்கள், மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தால் நல்வாழ்வு பெற்றவர்கள், மகளிருக்குச் சொத்துரிமை தரப்பட்டதால் சொத்துகள் பெற்ற மகளிர்கள், சுயஉதவிக் குழுக்களால் வாழ்க்கைத் தரம் உயர்ந்த மகளிர்கள், பல்லாயிரக்கணக்கான நெசவாளர்கள், இலட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் எனத் தாய்த்திருநாட்டில் திரும்பிய பக்கமெல்லாம் நலத்திட்டங்கள் மூலமாகக் கோடிக்கணக்கான மக்களுக்குப் பயனளித்த வான்போற்றும் வள்ளல்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாட்டின் ஒவ்வொருவரும் அவரால் பயன்பெற்றவராக, அவர் தீட்டிய திட்டங்களால் பயன்பெற்றவர்களாகத்தான் இருப்பார்கள். அந்த வகையில், அனைத்து மக்களின் தலைவராக இருந்தவருக்குத்தான் இன்றைய நாள் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்ச் சமுதாயத்திற்காக உழைத்த எத்தனையோ பெருமக்களுக்குச் சிலைகள், நினைவகங்கள், மணிமண்டபங்கள் அமைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அவருக்கு எத்தனை சிலை அமைத்தாலும் ஈடாகாது. அண்ணா சாலையில், பெரியாருக்கும் அண்ணாவுக்கும் மத்தியில் அமைந்திருக்கும் இந்தச் சிலை ஈடு இணையில்லாதது.

இதே அண்ணா சாலையில் தந்தைப் பெரியாரின் விருப்பப்படி, திராவிடர் கழகத்தால் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சிலை வைக்கப்பட்டது. ஆனால், அது சிலரால் கடப்பாரையைக் கொண்டு இடிக்கப்பட்டது. அப்போதும் கலைஞர் அவர்களுக்குக் கோபம் வரவில்லை, கவிதைதான் வந்தது.

என்ன கவிதை எழுதினார் என்று கேட்டீர்களானால்,

**“உடன்பிறப்பே!**
**செயல்பட விட்டோர்**
**சிரித்து மகிழ்ந்து நின்றாலும்**
**அந்தச் சின்னத்தம்பி**
**என் முதுகிலே குத்தவில்லை –**
**நெஞ்சிலேதான் குத்துகிறான்,**
**அதனால் நிம்மதி எனக்கு!**
**வாழ்க வாழ்க!”**

– என்று எழுதிக் காட்டியிருக்கிறார்.

அதே தலைவர் கலைஞர், கோடிக்கணக்கான தமிழ் மக்களின் நெஞ்சங்களில் என்றைக்கும் வாழ்ந்து கொண்டேதான் இருப்பார்! அப்படி வாழப்போகக்கூடிய தலைவரின் தலைமைத் தொண்டன் ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்’ சொல்லக்கூடிய முழக்கம் என்னவென்று கேட்டீர்கள் என்றால்,

வாழ்க! வாழ்க! வாழ்கவே! தலைவர் கலைஞர் புகழ் வாழ்கவே! நன்றி கூறி விடைபெறுகிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழாவையொட்டி
கலைவாணர் அரங்கத்தில் 28.05.2022 அன்று நடைபெற்ற விழாவில்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை.



# வளர்ச்சி, சமூக நலனின் மரபை நிலைநிறுத்தியவர்

**நா**ட்டின் கூட்டாட்சித் தன்மைக்கு வலிமை சேர்த்த தலைவர்களுள் திரு. மு.கருணாநிதியும் ஒருவர் என்று குறிப்பிட்டு, அவருக்கு உயரிய மரியாதை செலுத்தினார். இந்த நடைமுறையால் வலுவான 'குழு இந்தியாவாக' நாடு வளர்ந்துள்ளது என்றும் மாண்புமிகு இந்திய குடியரசுத் துணைத்தலைவர் மேலும் கூறினார்.

அரசியலமைப்பின் முன்னுரையில் உள்ள பார்வையை நிலைநிறுத்தும் வகையில், ஒரு துடிப்பான, வளர்ந்த ஜனநாயகமாக இந்தியாவை வடிவமைக்க மக்களை மையமாகக் கொண்டிருந்த தலைசிறந்த தலைவர்கள் பட்டியலில் திரு. மு.கருணாநிதியும் இடம்பிடித்தார். "1947இல் சுதந்திரத்திற்குப் பிறகு, நமது நாட்டின் வளர்ச்சிப் பாதையை வடிவமைத்த மேன்மை வாய்ந்த பிரதமர்களையும், முதல்வர்களையும் நாம் பெற்றிருந்தோம்", மக்களின் விருப்பங்களை நிறைவேற்றவும், கொள்கைகளை வடிவமைக்கவும், திட்டங்களை உருவாக்கவும், நிறுவனங்களைக் கட்டமைக்கவும், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் மத்திய அரசு அளவில் கலைஞர் திரு. மு.கருணாநிதி உள்ளிட்ட தலைவர்களின் முயற்சிகளைக் குடியரசுத் துணைத் தலைவர் வெகுவாகப் பாராட்டினார். "அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் வகுத்துத்தந்த பாதையால் வழிநடத்தப்பட்டு, இதுபோன்ற தலைவர்கள் நமது அரசியலமைப்பின் வார்த்தைகளுக்கு அர்த்தம் காண பல்வேறு நிலைகளில் முயன்றுள்ளனர்".

மொழிவளம், இலக்கிய மற்றும் கலாச்சார பொக்கிஷங்கள், தலைசிறந்த கட்டடவியல், அபாரமான கைவினைத் திறன், அறிவியல், தொழில், வேளாண்மை சாதனைகள் போன்ற வளங்களால் துடிப்பான, தனித்துவம் வாய்ந்த திறனை ஒவ்வொரு மாநிலமும் பெற்றுள்ளது. "ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள உள்ளார்ந்த வலிமையைப் பயன்படுத்தி, இத்தகைய வியப்பூட்டும் பன்முகத் தன்மையைக் கொண்டாடி, ஒரு நாடாக நாம் வளர்ந்திருப்பதோடு, விவேகமான முன்னேற்றத்தையும் அடைந்துள்ளோம். ஒவ்வொரு மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மனிதரிடமும் ஒளிந்திருக்கும் அபரிமிதமான சக்தியைத் தட்டி எழுப்புவதன் மூலம் அரிதான ஒருங்கிணைப்பை நம்மால் ஏற்படுத்த முடியும் என்பதை உணர்ந்துள்ளோம். திரு. மு.கருணாநிதி போன்ற தலைசிறந்த தலைவர்கள் இதைத்தான் செய்ய முயன்றார்கள்".

ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் வளர்ச்சி வட்டத்திற்கு வெளியே இருப்பவர்களுக்கு அதிகாரம் அளிப்பதை திரு. கருணாநிதி தொலைநோக்குப் பார்வையாகக் கொண்டிருந்தார் என்று குடியரசுத் துணைத்தலைவர் குறிப்பிட்டார். "வளர்ச்சி




மற்றும் சமூக நலனின் மரபை நிலைநிறுத்திய முதல்வராக அவர் திகழ்ந்தார்''. ''உழவர் சந்தை'' என்ற விவசாயிகளின் சந்தை மற்றும் ஏழைகளுக்கு மருத்துவக் காப்பீடு உள்ளிட்ட திட்டங்கள் திரு. மு.கருணாநிதியின் தொலைநோக்கு அணுகுமுறையைப் பிரதிபலிக்கும் பல்வேறு திட்டங்களுள் இடம்பெற்றுள்ளதாக அவர் நினைவு கூர்ந்தார். இந்தியாவின் சக்திவாய்ந்த முதலமைச்சர்களுள் திரு. மு.கருணாநிதியும் ஒருவர் என்று குறிப்பிட்ட குடியரசுத் துணைத்தலைவர், தமிழகத்தில் தொழில் வளர்ச்சி, உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை அவர் ஊக்குவித்ததைச் சுட்டிக்காட்டினார்.

பொதுவாழ்க்கையில் தமது நீண்டநாள் பயணத்தின்போது, பல தசாப்தங்களில் கலைஞர் திரு. மு.கருணாநிதியுடன் தாம் நெருக்கமாகக் கலந்துரையாடியதை நினைவு கூர்ந்தார். தி.மு.க.வின் சக்திவாய்ந்த தலைவர், தமது அரசியல் கோட்பாடுகள், நம்பிக்கைகளில் உறுதியாக நின்றார் என்று குடியரசுத் துணைத்தலைவர் தெரிவித்தார். இதன்படி, அப்போதைய பிரதமர் திருமதி இந்திராகாந்தியால் அறிவிக்கப்பட்ட நெருக்கடி நிலைக்கு திரு. மு.கருணாநிதி தெளிவாக எதிர்ப்புத் தெரிவித்திருந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

திரு. மு.கருணாநிதியின் பன்முக ஆளுமையில் தமது ஈடுபாட்டை வெளிப்படுத்திய திரு. நாயுடு, பல்வேறு திறமைகளின் தனித்துவமான கலவையோடு ஓர் பல்துறை வித்தகர் என்று தி.மு.க. தலைவரை வர்ணித்தார். தாம் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்ற நுட்பமான அரசியல்வாதியாக இருந்ததுடன், சுமார் ஐம்பது ஆண்டுக் காலம் தமது கட்சிக்கு அவர் தலைமை தாங்கினார்'', என்றார் அவர். தமது புத்திசாலித்தனம், இலக்கிய சுவை மற்றும் கற்றறிந்த வெளிப்பாடுகளோடு பார்வையாளர்களைக் கவர்ந்திழுக்கும் தலைசிறந்த சொற்பொழிவாளராகவும் திரு. மு.கருணாநிதி இருந்ததாகக் குறிப்பிட்டார். அவர், ஆக்கப்பூர்வமான அரசியல் விவாத கலையில் சிறந்து விளங்கிய ஒப்பற்ற சட்டமன்ற உறுப்பினர் ஆவார்'', என்று குடியரசுத் துணைத்தலைவர் மேலும் கூறினார். கலை, கலாச்சாரம் மற்றும் இதழியலின்மீது திரு. கருணாநிதி கொண்டிருந்த ஈடுபாட்டினால், ''கலைஞர்'' என்ற கௌரவப்பட்டம் அவருக்கு வழங்கப்பட்டதாக திரு. நாயுடு தெரிவித்தார். ''தமிழகத்தின் வளர்ச்சிப் பாதையில் என்றும் அழியாத தடத்தை விட்டுச் சென்றுள்ள உண்மையான பன்முக ஆளுமை கொண்டவராக'' திரு. மு.கருணாநிதி விளங்கினார்.

திரு. மு.கருணாநிதியின் பல அம்சங்கள் நிறைந்த பணிகள், தமிழகத்தின் சமூக, அரசியல் வட்டாரத்தில் நீண்டகாலத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தார். ''தமது எழுத்து மற்றும் வசனங்களின் வாயிலாகத் தமிழ்த் திரைப்படத் துறையில் புதியப் பாதையை கலைஞர் திரு. கருணாநிதி வகுத்தார். அன்றாட நிகழ்வுகளின் நுண்ணறிவு மிக்க வர்ணனையாளராக, அரசியல் பகுப்பாய்வராகச் செயல்பட்டதோடு, தாம் நிறுவிய கட்சி வெளியீடான முரசொலியில் தமது விசாலமான எழுத்துக்களின் மூலம் சக்திவாய்ந்த எழுத்தாளராகவும் திரு. மு.கருணாநிதி விளங்கினார்'', என்று அவர் மேலும் குறிப்பிட்டார். நிருவாகி, சமூக ஆர்வலர், அரசியல் சீர்திருத்தவாதி, எழுத்தாளர், கவிஞர், திரைப்பட எழுத்தாளர், பத்திரிகையாளர் மற்றும் ஆசிரியர் எனக் கலைஞர் திரு. மு.கருணாநிதியின் பணிகளில் பொதுவான இழை இயங்குமானால், அது சமூக சமத்துவமும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியுமாக இருக்கும், என்றார் அவர்.

நாட்டின் வளமான கலாச்சார பாரம்பரியம், தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் ''சாம்பியனாக'' கலைஞர் திகழ்ந்தார் என்றும் குடியரசுத் துணைத்தலைவர் குறிப்பிட்டார். தமது தாய்நாடு மீதும், தாய்மொழி மீதும் திரு.மு.கருணாநிதி அளவற்ற பற்றுக்கொண்டிருந்ததோடு, செம்மொழியான தமிழில் உள்ள இலக்கியப் படைப்புகள் பற்றியும், மாநிலத்தின் பாரம்பரியக் கலாச்சார வளம் பற்றியும் உலகம் தெரிந்துகொள்ள உதவினார் என்று திரு. வெங்கையா நாயுடு கூறினார். ''மாநிலத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளின் துவக்கத்தில் இடம்பெறும் 'தமிழ்த்தாய் வாழ்த்தைத்' தமிழ்நாட்டின் இறைவணக்கப் பாடலாக 1970இல் திரு. மு.கருணாநிதி உருவாக்கினார்''.

அனைத்து நிலைகளிலும் விரைவான வளர்ச்சியைத் தமிழகம் பதிவுசெய்யும் என்றும், 'கூட்டாட்சி உணர்வு' மற்றும் 'கூட்டாட்சியில் போட்டித்தன்மை' என்ற உணர்வோடு மத்திய அரசுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் வரும் ஆண்டுகளில் இந்தியா தனது உண்மையான திறனை உணரும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். தற்போதைய முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின், தமது புகழ்பெற்ற தந்தை கலைஞர் திரு. மு.கருணாநிதியின் தொலைநோக்குப் பார்வை மற்றும் பணிகளால் வழிநடத்தப்படுவார் என்ற தமது நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் **மு.கருணாநிதி** அவர்களின் சிலைத்திறப்பு விழாவில்,
மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் திரு. **எம்.வெங்கையா நாயுடு** அவர்கள்
ஆற்றிய உரை - 28.05.2022

## சென்னை துறைமுகம் - மதுரவாயல்

# இரண்டடுக்கு உயர்மட்டச் சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல்



**மா**ண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள் 26.05.2022 அன்று சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆகியோர் முன்னிலையில், பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ்ச் சென்னை, பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் முன்மாதிரி வீட்டு வசதி திட்டமான லைட் ஹவுஸ் திட்டத்தில் ரூ.116.37 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 1,152 குடியிருப்புகளைத் திறந்து வைத்தார். மேலும், சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் வரையிலான 20.565 கி.மீ. நீளத்திற்கு ரூ.5,855 கோடி மதிப்பில் இரண்டு அடுக்கு உயர்மட்ட சாலை அமைக்கும் பணி உட்பட ரூ.28,553 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயணிகளின் பயன்பாட்டிற்காக ரூ.1,104 கோடி செலவிலான இரயில்வே திட்டப் பணிகளையும், ரூ.1,760 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற இயற்கை எரிவாயுக் குழாய் பதிக்கும் பணியினையும் தொடங்கிவைத்தார்.

### பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் முன்மாதிரி வீட்டுவசதி திட்டமான லைட் ஹவுஸ் திட்டம்

பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ்ப் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காகவும், ஆட்சேபகரமான திட்டப்பகுதியில் வசிப்பவர்களுக்காகவும், பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் உலகளாவிய புதிய வீட்டுவசதி தொழில்நுட்பமான PreCast Technologyஇல் வடிவமைக்கப்பட்ட லைட் ஹவுஸ் திட்டத்தில் அனைத்து வசதிகளுடன் ரூ.116.37 கோடி செலவில் 1,152 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

இந்த முன்மாதிரி வீட்டு வசதி திட்டத்தில் தலா 96 குடியிருப்புகள் கொண்ட 12 கட்டடத் தொகுப்புகளில் தரைத்தளம் மற்றும் ஐந்து தளங்களாகக் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்டடத் தொகுப்புகளிலும் இரண்டு மின்தூக்கி வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தளம், சூரியமின் உற்பத்தி, மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டி ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஒவ்வொரு குடியிருப்பும் தலா 406 சதுர அடி பரப்பளவில், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையலறை, குளியலறை, கழிவறை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஒவ்வொரு குடியிருப்பிற்கும் ஒன்றிய அரசின் மானியம் ரூ.5.50 இலட்சமும், மாநில அரசின் மானியம் ரூ.3.50 இலட்சம், பயனாளிகளின் பங்களிப்புத் தொகை ரூ.1.50 இலட்சம் என மொத்தம் குடியிருப்பு ஒன்றிற்கு ரூ.10.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டப்பகுதியில் ஒவ்வொரு கட்டடத் தொகுப்புகளுக்கும் பாதாளச் சாக்கடை வசதி, கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு மறுசுழற்சி முறையில் மீண்டும் பயன்படுத்த வசதி, மூன்று கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், புதைவட மின் கம்பிகள் மூலம் மின் இணைப்பு, இருசக்கர வாகன நிறுத்தங்கள், நூலகம், நியாய விலைக்கடை, அங்கன்வாடி மையம், ஆவின் பாலகம், பூங்காக்கள், மின்தூக்கி வசதி, சுற்றுச்சுவர், தெரு விளக்குகள் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.





**அடிக்கல் நாட்டப்பட்டுள்ள புதிய திட்டப் பணிகளின் விவரங்கள்**

ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வாயிலாக, சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் வரையிலான 20.565 கி.மீ. நீளத்திற்கு ரூ.5,855 கோடி மதிப்பில் இரண்டு அடுக்கு உயர்மட்ட சாலை அமைக்கும் பணி;

ரூ.14,872 கோடி மதிப்பீட்டில் பெங்களூர் – சென்னை நான்கு வழி எக்ஸ்பிரஸ் சாலை;

சென்னையில் ரூ.1,428 கோடி மதிப்பீட்டில் பல்முனையச் சரக்குப் போக்குவரத்துப் பூங்கா.







ரூ.3,871 கோடி மதிப்பீட்டில் நெரலூருவிலிருந்து தருமபுரி வரை நான்கு வழிச்சாலை;

ரூ.724 கோடி மதிப்பீட்டில் மீன்சுருட்டி – சிதம்பரம் இரண்டு / நான்கு வழிச்சாலை;

எழும்பூர், இராமேஸ்வரம், மதுரை, காட்பாடி மற்றும் கன்னியாகுமரி இரயில் நிலையங்களை ரூ.1,803 கோடி மதிப்பீட்டில் மறுமேம்பாட்டுப் பணி;

என மொத்தம் ரூ.28,553 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**இந்திய இரயில்வே துறையில் பயணிகளின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்ட முடிவுற்ற திட்டப் பணிகளின் விவரங்கள்**

தாம்பரம் – செங்கல்பட்டு இடையே ரூ.598 கோடி செலவில் 30 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள மூன்றாவது இரயில் பாதை;

மதுரை – தேனி இடையே 75 கி.மீ. நீளமுள்ள மீட்டர் கேஜ் இரயில் பாதையை ரூ.506 கோடி செலவில் அகல இரயில் பாதையாக மாற்றியமைக்கும் பணி;

என மொத்தம் ரூ.1,104 கோடி செலவிலான இரயில்வே திட்டப் பணிகளைப் பயணிகளின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் அர்ப்பணித்தார்.

**ஒன்றிய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் சார்பில் முடிவுற்ற இயற்கை எரிவாயுக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ள பணிகளின் விவரங்கள்**

எண்ணூர் – செங்கல்பட்டு பிரிவில் 115 கி.மீ. நீளத்திற்கு ரூ.849 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற இயற்கை எரிவாயுக் குழாய்கள் பதிக்கும் பணி;

திருவள்ளூர் – பெங்களூரு பிரிவில் 271 கி.மீ. நீளத்திற்கு ரூ.911 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற இயற்கை எரிவாயுக் குழாய்கள் பதிக்கும் பணி;

என மொத்தம் ரூ.1,760 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற குழாய்கள் பதிக்கும் பணியினை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் தொடங்கிவைத்தார்.




அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக சென்னைக்கு வருகைதந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களை 26.05.2022 அன்று சென்னை ஐ.என்.எஸ். அடையாறு கடற்படைத் தளத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சால்வை அணிவித்து, தமிழ் காப்பியமான சிலப்பதிகாரம் நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு புத்தகத்தை வழங்கி வரவேற்றார்.

# உறவுக்குக் கை கொடுப்போம் உரிமைக்குக் குரல் கொடுப்போம்

**மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் 26.05.2022 அன்று சென்னை, நேரு உள் விளையாட்டரங்கில் பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டித் திறந்துவைத்த விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை**

தமிழ்நாட்டில் மக்களின் பேராதரவோடு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பங்கேற்கும் முதல் அரசு விழா இந்த விழா!

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையானத் திட்டங்களைத் தொடங்கி வைப்பதற்காக வருகை தந்தமைக்காகத் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும், தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற அடிப்படையிலும் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நான் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் 5 நெடுஞ்சாலைத்துறைத் திட்டங்களுக்கும், ஒரு இரயில்வே திட்டத்திற்கும் அடிக்கல் நாட்டப்படவுள்ளது.

3 இரயில்வே திட்டங்களும், பைப்லைன் திட்டம் மற்றும் நகர்ப்புர வீட்டு வசதி திட்டத்தின்கீழ், 1,152 வீடுகளின் திறப்பு விழாவும் நடைபெறுகிறது.

இவை அனைத்தும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மிகமிக முக்கியமான திட்டங்கள்.

தமிழ்நாடு பல்வேறு வகையிலும் இந்தியாவின் முன்னணி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது.

கல்வி, பொருளாதாரம், மருத்துவம், வேளாண்மை, ஏற்றுமதி, திறன்மிகு மனித ஆற்றல் எனப் பல்வேறு வகையிலும் தமிழ்நாடு ஒரு சிறப்பான பங்களிப்பை இந்திய நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் அளித்து வருகிறது. இந்தியாவின் வளர்ச்சியில் தமிழ்நாட்டு மக்களின் பங்களிப்பு என்பது மிக மிக முக்கியமானதாக அமைந்திருக்கிறது.

மற்ற மாநிலங்களின் வளர்ச்சியைவிடத் தமிழ்நாட்டின் வளர்ச்சி தனித்துவமிக்கது.

தமிழ்நாட்டின் இந்த வளர்ச்சியானது வெறும் பொருளாதாரம் சார்ந்தது மட்டுமல்ல. சமூக நீதி, பெண்கள் முன்னேற்றம், சமத்துவம் போன்ற அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிதான் தமிழ்நாட்டின் வளர்ச்சி!

Hon'ble Prime Minister!

Tamil Nadu is a leading State, in terms of Economic growth, Excellent rural health facilities, large number of educational institutions and highly skilled human resources.

Our State is a pioneer, not only in economic and other related factors but also in social justice, equality, women's empowerment. In brief, Tamil Nadu is a State for inclusive growth.

This is what we call "THE DRAVIDIAN MODEL!"

Honourable Prime Minister…

In this Dravidian Model of governance, while taking various welfare and developmental measures, I wish to inform you, that we have largely corrected the fiscal imbalance and also re-structured the finances of the State.

நமது நாட்டின் வளர்ச்சியிலும், ஒன்றிய அரசின் நிதி ஆதாரங்களிலும் தமிழ்நாடு மிக முக்கிய பங்களிப்பைத் தருகிறது என்பது மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குத் தெரியும் என்று நான் உளமார நம்புகிறேன். சிலவற்றை எடுத்துரைக்க வேண்டுமென்றால்,

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பில், தமிழ்நாட்டின் பங்கு 9.22 விழுக்காடு!

ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 6 விழுக்காடு!

இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 8.4 விழுக்காடு!

ஜவுளித்துறை ஏற்றுமதியில் 19.4 விழுக்காடு!

கார்கள் ஏற்றுமதியில் 32.5 விழுக்காடு!

தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 33 விழுக்காடு!

ஆனால் ஒன்றிய அரசின் வரி வருவாயில் தமிழ்நாட்டுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவது 1.21 விழுக்காடு மட்டுமே.

எனவே, தமிழ்நாடு போன்ற வளர்ந்த மாநிலங்கள் நாட்டின் வளர்ச்சிக்கும், பொருளாதாரத்திற்கும் அளிக்கக்கூடிய பங்கிற்கு ஏற்ப, ஒன்றிய அரசும், திட்டங்களிலும் நிதியிலும் தனது பங்களிப்பை உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுதான் உண்மையான கூட்டுறவுக் கூட்டாட்சியாக அமையும்!

ஒன்றிய அரசும் மாநில அரசும் இணைந்து நிறைவேற்றும் திட்டங்களில் மாநில அரசின் பங்களிப்பும் மகத்தானது. எடுத்துக்காட்டாக, நெடுஞ்சாலைத் துறையில் நமது நாட்டிலேயே அதிக மூலதனச் செலவை மேற்கொள்ளும் மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழ்நாடு தொடர்ந்து விளங்கி வருகின்றது. தேசிய நெடுஞ்சாலைகளுக்காகத் தமிழ்நாட்டில் தற்போது ரூ.44,762 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய இந்த நிலையில், மாநில நெடுஞ்சாலைத்துறைக்கு இந்த ஆண்டில் மட்டும் தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ள தொகை ரூ.18,218.91 கோடி. எனவே, சாலைக் கட்டமைப்பை மேம்படுத்துவதில், உங்களோடு இணைந்து பணியாற்றுவதற்கு நாங்கள் முனைப்பாக இருக்கிறோம். மேலும் அதிக அளவிலான திட்டங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்த வேண்டும்.

இப்படி நாம் இணைந்து நிறைவேற்றும் திட்டங்கள் குறித்து, இரண்டு முக்கியக் கருத்துக்களை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

ஒன்று, இத்தகைய இணைத் திட்டங்களை ஒன்றிய அரசு தொடங்கும்போது தனது நிதிப்பங்கை அதிகமாக அளித்தாலும், காலப்போக்கில் தனது பங்கினைக் குறைத்து, மாநில அரசு செலவிட வேண்டிய நிதிப் பங்கை உயர்த்தும் நிலையைப் பார்க்கிறோம்.

இரண்டாவது, ஒன்றிய, மாநில அரசுகளின் பங்களிப்போடு, பயனாளிகளின் பங்கையும் முன்னிறுத்தி, பல திட்டங்கள் ஒன்றிய அரசால் செயல்படுத்தப்படுகிறது. இதில் அந்தத் தொகையைப் பயனாளிகள் செலுத்த முடியாதபோது, மக்களுடன் நேரடித் தொடர்பில் இருக்கிற மாநில அரசுகள்தான் பயனாளிகளின் பங்களிப்பையும், சேர்த்து செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது. இதனால் மாநில அரசின் நிதிச் சுமை அதிகரிக்கிறது.

எனவே, ஒன்றிய மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டங்களில் தொடக்கத்தில் குறிப்பிடப்படும் ஒன்றிய அரசின் பங்கானது, திட்டம் முடியும்வரை தொடர வேண்டும் என்றும், பயனாளிகளின் பங்களிப்போடு செயல்படுத்தப்படும் திட்டங்களில், அவர்கள் தமது பங்களிப்பைச் செலுத்த முடியாதபோது ஒன்றிய அரசும், மாநில அரசும் இணைந்து அதனைச் சமமாக ஏற்கவேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

தமிழ்நாட்டிற்கு மாண்புமிகு பிரதமர் அவர்கள் வருகை தந்திருக்கும் இந்த நேரத்தில், மேலும் சில முக்கியமான கோரிக்கைகளைத் தமிழ்நாட்டு மக்களின் சார்பில் முன் வைக்க விரும்புகிறேன்.

➢ தமிழ்நாட்டின் கடலோர மீனவ சமுதாய மக்களின் முக்கியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் கச்சத்தீவினை மீட்டெடுத்துத் தமிழக மீனவ மக்களின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் அவர்களின் உரிமையை நிலைநாட்ட உரிய நடவடிக்கை எடுக்க இது தகுந்த தருணம் என்பதை மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

➢ 15.05,2022 அன்று வரை தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய GST இழப்பீடு நிலுவைத் தொகையானது ரூ.14,006 கோடி. இத்தொகையை விரைந்து வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு மாநிலங்களின் வருவாயானது முழுமையாக சீரடையாமல் இருக்கக்கூடிய நிலையில், GST இழப்பீட்டுக் காலத்தை ஜூன் 2022க்குப் பின்னரும், குறைந்தது அடுத்த 2 ஆண்டுகளுக்கு நீட்டித்துத் தரவேண்டும் என்றும் நான் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

➢ பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய், உலகச் செம்மொழிகளில் இன்றளவும் சீரிளமைத் திறத்துடன் உயிர்ப்போடு விளங்கும் தமிழை, இந்திக்கு இணையான அலுவல் மொழியாகவும், உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாகவும் அறிவிக்க வேண்டும்.

➢ இறுதியாக, மருத்துவ மாணவர் சேர்க்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET) முறையைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து எதிர்த்து வருகிறது. இது குறித்துச் சட்டம் நிறைவேற்றி, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலோடு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதற்கான அனுமதியை, விரைந்து வழங்கிட மாண்புமிகு பிரதமர் அவர்களை இந்தத்தருணத்தில் தமிழ்நாடு மக்கள் அனைவரின் சார்பில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இக்கோரிக்கைகளில் இருக்கக்கூடிய நியாயத்தை மாண்புமிகு பிரதமர் அவர்கள் உணர்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

Honourable Prime Minister!

I have just listed out some of the important demands of Tamil Nadu. Like,

➢ Katchatheevu,

➢ NEET Bill,

➢ GST dues,

➢ Tamil as Official Language in Union Government Offices and in Madras High Court.

I appeal you to consider them favourably as early as possible.

Honourable Prime Minister!

Tamil Nadu is one of the most advanced States of our Indian Union.

It will continue to serve as the engine for leading and moving the country's economy forward.

Therefore, I want you to extend your fullest co-operation and support Tamil Nadu.

I request you to allot more projects and more funds to our State in the true spirit of co-operative federalism.

As the Chief Minister of Tamil Nadu, I once again reiterate my leader 'Father of Modern Tamil Nadu' முத்தமிழறிஞர் Kalaignar's quote:

"உறவுக்குக் கை கொடுப்போம்! உரிமைக்குக் குரல் கொடுப்போம்!"

We will extend a hand of friendship at the same time, we will raise our voice for our rights.

ஒன்றிய அரசின் சார்பில், தமிழகத்தில் செயல்படுத்த முன்வந்த திட்டங்களுக்கும், வரும் காலத்தில் நிறைவேற்றக்கூடிய திட்டங்களுக்கும், நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'எல்லோருக்கும் எல்லாம்' என்ற இலக்கை எய்திட அனைவரும் இணைந்து மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்துவோம்.

**" பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய், உலகச் செம்மொழிகளில் இன்றளவும் சீரிளமைத் திறத்துடன் உயிர்ப்போடு விளங்கும் தமிழை, இந்திக்கு இணையான அலுவல் மொழியாகவும், உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாகவும் அறிவிக்க வேண்டும். "**





# இலங்கைவாழ் மக்களுக்கு முதற்கட்ட அத்தியாவசியப் பொருட்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 18.05.2022 அன்று சென்னை துறைமுகத்தில், இலங்கை வாழ் மக்களுக்கு உதவிடும் வகையில் அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பி வைக்கும் நிகழ்வின் முதற்கட்டமாக 9,000 மெட்ரிக் டன் அரிசி, 200 மெட்ரிக் டன் ஆவின் பால்பவுடர் மற்றும் 24 மெட்ரிக் டன் அத்தியாவசிய மருந்துப் பொருட்களை இலங்கை நாட்டிற்குச் சரக்குக் கப்பலில் கொடியசைத்து அனுப்பி வைத்தார். இன்று அனுப்பப்பட்ட முதற்கட்ட உதவிப் பொருட்களின் மதிப்பு ரூ.45 கோடி ஆகும்.

“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்!” என்றார் இராமலிங்க அடிகளார். அதேபோல “யாதும் ஊரே யாவரும் கேளிர்!” என்ற கணியன் பூங்குன்றனாரின் பொன்மொழிக்கும் ஏற்ப நீராலும் நிலத்தாலும் பிரிந்திருந்தாலும் துன்புறும் உயிர்கள் அனைத்தும் நம் உறவினர்களே என்ற தாயுள்ளத்தோடு, இலங்கையில் தற்போது நிலவி வரும் கடும் பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுப்பொருள் தட்டுப்பாட்டில் சிக்கித் தவித்து இன்னலுறும் இலங்கை மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தமிழக மக்களின் சார்பில் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, அப்பொருட்களை வழங்க உரிய அனுமதி வழங்குமாறு 31.03.2022 அன்று டெல்லி சென்று மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்தபோது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார். மேலும், ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு இது தொடர்பாகக் கோரிக்கை வைக்கப்பட்டதுடன் 15.04.2022 அன்று கடிதமும் எழுதி நினைவூட்டினார்.

இலங்கை நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமடைந்த நிலையில் தமிழ்நாடு அரசின் சார்பில் இலங்கை மக்களுக்கு உதவி புரிந்திட, 40 ஆயிரம் டன் அரிசி, உயிர் காக்கக்கூடிய மருந்துப் பொருட்கள், குழந்தைகளுக்கு வழங்க 500 டன் பால் பவுடர் ஆகிய அத்தியாவசியப் பொருட்களை அனுப்பி வைக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து உரிய அனுமதிகளை வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசினை வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 29.04.2022 அன்று தனித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானத்தில் அறிவிக்கப்பட்டபடி, இலங்கை மக்களுக்கு உதவக்கூடிய வகையில் உணவு மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களை அனுப்பி வைக்கும் பணியினைச் சீரிய முறையில் செய்திட அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு அரசு மருந்துப்பொருட்கள் நிறுவனம், ஆவின் நிறுவனம் ஆகிய துறைகளை உள்ளடக்கிய உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது.

இதனிடையே, தமிழக அரசின் தொடர் நடவடிக்கைகளின் காரணமாக 13.05.2022 அன்று இதற்கான ஒன்றிய அரசின் இசைவு பெறப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, இலங்கைவாழ் மக்களுக்கு முதற்கட்டமாக அத்தியாவசியப் பொருட்களான அரிசி, ஆவின் பால்பவுடர் மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களை TAN BINH 99 என்ற சரக்குக் கப்பலில் அனுப்பி வைக்கும் நிகழ்வினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை துறைமுகத்தில், கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். இதில் சிறப்பு நிகழ்வாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் மாதிரித் தொகுப்பினை இலங்கை துணைத் தூதர் முனைவர் வெங்கடேசுவரன் அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.



# அகழாய்வு தொல்பொருட்கள் கண்காட்சி

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 19.05.2022 அன்று கோயம்புத்தூர், வ.உ.சிதம்பரனார் மைதானத்தில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள், அவற்றின் மாதிரிகளின் கண்காட்சி, தமிழ்நாடு அரசு ஓராண்டில் ஆற்றிய அரும்பணிகளின் தொகுப்பு ஓவிய வடிவங்களின் கண்காட்சி ஆகியவற்றைத் தொடங்கிவைத்தார்.


தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை இவ்வாண்டில் சிவகங்கை மாவட்டம் – கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளான கொந்தகை, அகரம் மற்றும் மணலூர், தூத்துக்குடி மாவட்டம் – சிவகளை, அரியலூர் மாவட்டம் – கங்கைகொண்டசோழபுரம், கிருஷ்ணகிரி மாவட்டம் – மயிலாடும்பாறை, விருதுநகர் மாவட்டம் – வெம்பக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் – துளுக்கார்பட்டி, தருமபுரி மாவட்டம் – பெரும்பாலை ஆகிய ஏழு இடங்களில் அகழாய்வு மேற்கொண்டு வருகிறது.

கீழடியில் புதைந்துள்ள கட்டடப் பகுதிகளையும், அரும்பொருட்களையும் வெளிக்கொணரும் வகையில் பெரும்பரப்பு அகழாய்வு நேர்த்தியுடன் நடந்து வருகிறது. இந்த அகழாய்வில் கிடைக்கப்பெற்றுள்ள சான்றுகளின் மூலம் வைகை நதிக்கரையில் நகரமயமாதல் கி.மு. ஆறாம் நூற்றாண்டு முதல் தொடங்குகிறது என்பது தெளிவாகிறது. இவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் தமிழர்களின் எழுத்தறிவு, வேளாண்மை, நீர் மேலாண்மை, கட்டடத் தொழில்நுட்பம் போன்ற தலைப்புகளின்கீழ், கீழடியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் மாதிரிகள் மற்றும் அவற்றின் புகைப்படங்கள் இக்கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

சிவகளை வாழ்விடப்பகுதி அகழாய்வில் கிடைக்கப்பெற்ற 'ஆதன்' என்ற தமிழி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடு, கீழடியில் ஆதன் என்ற பெயர் பொறிக்கப்பட்ட பானை ஓட்டினை நினைவூட்டுகிறது. சிவகளையில் கிடைக்கப்பெற்ற கருப்பு–சிவப்பு வண்ணக் கலயங்கள், குடுவைகள், பானை மூடிகள் போன்றவற்றில் அழகிய வடிவமைப்பில் வரையப்பெற்றுள்ள வெள்ளை வண்ண வேலைப்பாடுகளை நோக்கும்போது சிவகளைப் பகுதியில் வாழ்ந்த தமிழ்ச் சமூகம் மிகப் பழமையானதாகக் கருதப்படுகிறது. இந்த அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட நெல்லினைக் கரிமப் பகுப்பாய்வு செய்ததில் இதனுடைய காலம் கி.மு. 1155 என வரையறை செய்யப்பட்டுள்ளது. இக்காலக்கணிப்பின் மூலம் பொருநை ஆற்றங்கரையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தினரின் மேம்பட்ட பண்பாடு 3,200 ஆண்டுகள் முற்பட்டது என்பதை உமி நீங்கிய நெல்லின்வழிப் பெறப்பட்ட காலக் கணக்கீடு நிலைநிறுத்தியுள்ளது. இவற்றை விளக்கும் வகையில் தொல்பொருட்கள், முதுமக்கள் தாழிகள் மற்றும் அகழாய்வுக் குழி மாதிரி மற்றும் அவற்றின் புகைப்படங்கள் மக்களின் பார்வைக்காகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தமிழகம் மேலை நாட்டினருடனும், கீழை நாட்டினருடனும், இந்தியாவின் பிற பகுதிகளுடனும் கி.மு. எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னரே வணிகத் தொடர்பு கொண்டிருந்ததைக் கொற்கை அகழாய்வின் காலக் கணக்கீடு உறுதி செய்துள்ளது. இவ்வகழாய்வில் கிடைக்கப் பெற்றுள்ள சதுர வடிவிலான செங்கல் கட்டுமானம், துளையுடன் கூடிய வடிகட்டும் குழாய் போன்றவற்றின் மாதிரிகள் மற்றும் அவற்றின் புகைப்படங்கள் இக்கண்காட்சியில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.






ஆதிச்சநல்லூரில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் முக்கிய நோக்கம் இப்பகுதியின் தொடக்கக் காலக் குடியேற்றத்தை அறிந்து கொள்வதும், ஈமக்காட்டுப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள அக்கால மக்களின் வாழ்விடங்களை அடையாளம் காண்பதே ஆகும். தற்போதைய அகழ்வாராய்ச்சியானது நீண்டகாலக் கேள்விக்கு விடையளிக்கும் வகையில் ஆதிச்சநல்லூரின் பழங்கால வாழ்விடங்களைத் தொல்லியல் சான்றுகளின் மூலம் அடையாளப்படுத்தியுள்ளது. இக்கண்காட்சியில் இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்களின் மாதிரிகள் மற்றும் அவற்றின் புகைப்படங்கள் மக்களின் பார்வைக்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மயிலாடும்பாறை கரிம மாதிரிகளின் ஏ.எம்.எஸ். (AMS) அறிவியல் முறையில் காலக் கணக்கீடு செய்யப்பட்டதில் சுமார் 4,200 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் இரும்புக் காலப் பண்பாடு நிலவியது என உறுதி செய்யப்பட்டுள்ளது. அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பண்பாட்டுப் பொருட்கள் வாயிலாக இப்பகுதி புதிய கற்காலம் முதல் வரலாற்றுக் காலம் வரை தொடர்ந்து வாழ்விடமாக இருந்துள்ளதையும் அறியமுடிகிறது. இக்கண்காட்சி அரங்கில், மயிலாடும்பாறை அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களான ஈட்டி முனைகள், அம்பு முனைகள், இரும்பினால் ஆன கத்திகள், கோடரி, ஈமச் சின்னங்களில் வைக்கப்படும் படையல் பொருட்கள், மூன்றுகால் குடுவை உள்ளிட்ட பானைகள், கிண்ணங்கள் முதலியனவும், மக்கள் வாழ்விடப்பகுதியில் கிடைத்த வட்டச் சில்லுகள், பாசி மணிகள், சுடுமண்ணால் ஆன பொருட்களும் மற்றும் மயிலாடும்பாறை அகழாய்வின் புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கொடுமணல் அகழாய்வில் கற்குவை, கற்பதுகை, முதுமக்கள் தாழி, நெடுங்கல் போன்றவற்றை உள்ளடக்கிய சுமார் 200க்கும் மேற்பட்ட ஈமச்சின்னங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறிப்பாக 2020–2021ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில், இரண்டு பக்கங்களிலிருந்து ஏறி இறங்கும் வகையில் பலகை கற்களைக் கொண்டு அமையப்பெற்ற படிகளுடன் இருபக்கமும் கற்களால் ஆன பக்கவாட்டு சுவர்களுடன் கூடிய கிணறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்கள் மற்றும் அவற்றின் புகைப்படங்கள் மக்களின் பார்வைக்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேலும், தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனைகளை இளைய தலைமுறையினர் மற்றும் பொதுமக்களிடையே கொண்டு சேர்ப்பதற்காகச் செய்தி மக்கள் தொடர்புத்துறை மற்றும் தமிழ் இணையக் கல்விக் கழகம் இணைந்து, கல்லூரி மாணவர்களின் கைவண்ணத்தில் அரசின் முக்கியமான திட்டங்களை ஓவியங்கள் மூலமாக வெளிப்படுத்திடத் திட்டமிடப்பட்டது. கல்லூரி மாணவ மாணவியர்கள் ஆர்வமுடன் பங்கேற்று அரசின் ஓராண்டு சாதனைகளை நேர்த்தியான ஓவியங்களாக அழகுற உருவாக்கியுள்ளனர். இதன்மூலம் அனைத்துத் தரப்பினரும் அரசின் திட்டங்களை எளிதாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ள அதேவேளையில், மாணவர்களின் ஓவியத் திறன்களை மேம்படுத்திடவும் நல்லதொரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

தமிழ்நாடு அரசானது இக்கட்டான கொரோனா காலகட்டத்தில் பதவியேற்ற நாள் முதல் பல்வேறு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் பொது மக்களுக்கு நிவாரண உதவிகளையும், அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாத்தது. வடகிழக்குப் பருவ மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, மக்களைச் சந்தித்து நிவாரணம் மற்றும் துயர் துடைப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன. மேலும், மருத்துவம், வேளாண்மை, கல்வி, தொழில், உள்ளாட்சி என அனைத்துத் துறைகளிலும் மக்கள் மேம்பாட்டிற்காகத் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு புதிய திட்டங்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகள் இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



# உதகையில் மக்களோடு ...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
19.05.2022 அன்று நீலகிரி மாவட்டம்,
குன்னூர் மற்றும் உதகையில் பொதுமக்கள்
மத்தியில் ஆற்றிய உரை.

உங்கள் அன்போடு, ஆதரவோடு ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டுக் காலம் நிறைவடைந்து, இரண்டாம் ஆண்டில் நம் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீங்கள் எந்த நம்பிக்கையோடு, எந்த உணர்வோடு ஆதரித்தீர்களோ, அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக இன்றைக்கு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கடந்த 10 வருடம் என்ன செய்ய முடியுமோ அதைத்தான் ஒரே வருடத்தில் கலைஞர் அவர்கள் உருவாக்கிய நம்முடைய ஆட்சியில் செய்து முடித்திருக்கிறோம். நீங்கள் நம்பி வாக்களித்த தி.மு.க. ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. உங்களுக்கு இந்த ஆட்சி பிடித்திருக்கிறதா, இல்லையா என்று சொல்லுங்கள்.

நான் தேர்தல் நேரத்தில் உங்களிடத்தில் அளித்த வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றக்கூடிய அரசாக இந்த ஆட்சி அமைந்திருக்கிறது. குறிப்பாக மகளிருக்காக அற்புதமான திட்டங்கள் எல்லாம் நாங்கள் இந்த ஆட்சியில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். வீடு தேடி வரக்கூடிய இல்லம் தேடிக் கல்வித் திட்டம், உங்களையெல்லாம் நாடி வரக்கூடிய மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இப்படிப் பல்வேறு திட்டங்களை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். இன்றும், நாளையும் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக, நான் வந்திருக்கிறேன். ஆட்சியில் இருந்தாலும் உங்களைச் சந்திப்போம், ஆட்சியில் இல்லாவிட்டாலும் உங்களைச் சந்திப்போம். அதுதான் தி.மு.க. ஆட்சி.

தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியில் சொன்ன உறுதி மொழிகளில் பெரும்பாலனவற்றைக் கடந்த ஒரே வருடத்தில் செய்து முடித்திருக்கக்கூடிய ஆட்சிதான் நமது ஆட்சி, உங்கள் ஆட்சி.

ஒரு பெரிய கொடூரமான கொரோனா என்ற தொற்றுநோய் உலகம் முழுவதும் ஆட்டிப்படைத்தது. தேர்தல் முடிந்து, வாக்கு எண்ணிக்கை நடைபெற்று முடிவுகள் வந்தபோது நாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வருகிறோம். நாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வரும் நேரத்தில், கொரோனா என்ற அந்த கொடிய தொற்று நோய் எப்படியெல்லாம் மக்களை வாட்டி வதைத்தது என்று உங்களுக்குத் தெரியும். எத்தனை பேருடைய உயிரை இழந்து இருக்கிறோம், எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டார்கள், எவ்வளவு குடும்பங்கள் சீரழிந்தது என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். அந்த நேரத்தில்தான் நாம் ஆட்சிக்கு வந்தோம்.

ஆட்சிக்கு வந்தவுடன் முதல் வேலையாகக் கொரோனா என்ற கொடிய நோயிலிருந்து விடுபட வேண்டும் என்று முடிவுசெய்து சபதம் எடுத்துக் கொண்டு, என்னுடைய உயிரைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல் கொரோனா நோயினால் அனுமதிக்கப்பட்டு இருக்கக்கூடிய மருத்துவமனைக்கு நேரடியாகச் சென்று, நோயாளிகளைப் பார்த்து ஆறுதல் சொல்லிவிட்டு வந்தவன்தான் நான். கொரோனா நோய்த்தொற்றுப் பரவலை எப்படித் தடுத்து நிறுத்தி இருக்கிறோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.



அதைத் தொடர்ந்து பெரும் மழை, வெள்ளம் வந்துவிட்டது. அதை எப்படிச் சமாளித்தோம் என்பதும் தெரியும். இதையெல்லாம் சமாளித்து இந்த ஒரு வருடத்தில், பத்து வருடங்கள் ஆட்சியில் இருந்தால் என்னென்ன செய்திருக்க முடியுமோ, அதைவிட அதிகமான அளவிற்கு இந்த ஒரு வருடத்தில் பல திட்டங்களை, சாதனைகளைச் செய்து காட்டியிருக்கிறோம்.

அதனால்தான், அதைத் தொடர்ந்து நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல், நகராட்சித் தேர்தல், பேரூராட்சித் தேர்தல், கிராமப் பஞ்சாயத்துத் தேர்தல் என எல்லாத் தேர்தல்களிலும் மிகப்பெரிய வெற்றியைத் தமிழ்நாட்டு மக்கள் தேடித் தந்திருக்கிறீர்கள். எனவே அதற்கும் நன்றி சொல்ல நான் விரும்புகிறேன், கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்குத் தந்திருக்கக்கூடிய இந்தச் சிறப்பான வரவேற்பிற்கு என்னுடைய இதயப்பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் அளித்த இந்த அன்பான, உற்சாக வரவேற்பு என்னை மேலும் பணி செய்வதற்கு ஊக்கப்படுத்துவதாக இருக்கிறது. நான் ஆட்சிக்கு வந்து முதலமைச்சராக நீலகிரி மாவட்டத்திற்கு உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன். ஆட்சியில் இல்லாதபோது நீங்கள் அளித்த வரவேற்பும், தற்போது நீங்கள் அளித்திருக்கக் கூடிய இந்த வரவேற்பும் இன்னும் என்னை ஊக்கப்படுத்துகிறது, உற்சாகப்படுத்துகிறது. என்றைக்கும் உங்கள் அன்பிற்காக நான் கட்டுப்பட்டவன். என்றைக்கும் உங்களுடைய பாசத்திற்காக நான் கட்டுப்பட்டவன். அந்த உணர்வோடு, உங்கள் அத்தனைப் பேருக்கும் நான் மீண்டும் ஒரு முறை நன்றி, நன்றி, நன்றி என்று கூறி விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 21.05.2022 அன்று, உதகை அரசினர் கலைக் கல்லூரி மைதானத்தில், மலைகளின் அரசி “உதகை 200” என்ற புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.







# 124ஆவது உதகை மலர்க்காட்சி

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 20.05.2022 அன்று நீலகிரி மாவட்டம், உதகை அரசுத் தாவரவியல் பூங்காவில் 124ஆவது உதகை மலர்க்காட்சியினைத் தொடங்கிவைத்தார்.

கோடைக் காலத்தில் நீலகிரியின் அழகினை ரசிக்க வரும் இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை உற்சாகப்படுத்தும் வகையில் கோடை விழாக்கள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட உதகை மலர்க்காட்சி திடலில் வண்ண மலர்களான டுலீப், சிம்பிடியம், புரோட்டியா, கேலா லில்லி, மேரிகோல்ட் உள்ளிட்ட 275 வகை ரகங்கள் அடங்கிய வண்ண மலர்கள் வைக்கப்பட்டுள்ளன. மலர்க்காட்சி மாடத்திலுள்ள கொய்மலர்கள் அரங்கினையும், ஹெலிகோனியா மலர் அலங்காரங்களையும், ஹாலந்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட டுலீப் மலர்ச் செடிகளையும், சுமார் 52 வகையான மலர்ச் செடிகளால் அலங்கரிக்கப்பட்ட மலர் மாடங்களையும், காய்கறிகள் மூலம் அலங்கரிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டம், காட்டெருமை உள்ளிட்ட பிற அலங்காரங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

மேலும், குழந்தைகள், சுற்றுலாப்பயணிகள் என அனைத்துத் தரப்பு மக்களையும் கவரும் வகையில் சுமார் 4,500 தொட்டிச் செடிகளின் மூலம் அலங்கரிக்கப்பட்ட கண்ணாடி மாளிகையினையும், நீலகிரி மாவட்டத்தின் மண்ணின் மைந்தர்களான பழங்குடிப் பெருமக்களான தோடர், இருளர், குரும்பர், பணியர், கோத்தர் மற்றும் காட்டு நாயக்கர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக அமைக்கப்பட்டுள்ள மலர் அலங்காரத்தினையும், தமிழ் மறவன் பட்டாம்பூச்சி, ஆந்தை, சுமார் ஒரு இலட்சம் கார்னேசன் மலர்களைக் கொண்டு பிரம்மாண்டமாக மலர் அலங்காரத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிக் கட்டடம், உதகை 200ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளதை நினைவுகூரும் விதமாக “Ooty 200” என்று மலர்களால் பிரம்மாண்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளதையும், மலர்களால் வடிவமைக்கப்பட்டுள்ள “மீண்டும் மஞ்சப்பை” அலங்காரத்தையும், சுற்றுச்சூழல் துறையின் சார்பில் பிளாஸ்டிகிற்கு மாற்றாக “மீண்டும் மஞ்சப்பை” பயன்பாடு குறித்து அமைக்கப்பட்டுள்ள விழிப்புணர்வு அரங்கு மற்றும் தனியார் அரங்குகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

நீலகிரி மாவட்டத்தின் இயற்கை வேளாண்மையை எடுத்துரைக்கும் வகையில் இயற்கை வேளாண்மை காட்சி திடல் மற்றும் தமிழ்நாட்டின் தோட்டக்கலை வளத்தைக் குறிக்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள தோட்டக்கலைத் துறையின் காட்சித் திடல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.








# உதகை நகரைக் கண்டறிந்த “ஜான் சல்லிவன்” அவர்களுக்குச் சிலை

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 21.05.2022 அன்று நீலகிரி மாவட்டம், உதகை அரசுத் தாவரவியல் பூங்கா செல்லும் சாலையில், 200 ஆண்டுகளுக்கு முன்பு உதகை நகரினைக் கண்டறிந்து கட்டமைத்த “ஜான் சல்லிவன்” அவர்களுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மார்பளவு வெண்கலச் சிலையினைத் திறந்துவைத்தார்.

ஜான் சல்லிவன் அவர்கள் 1788ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டின் தலைநகர் இலண்டனில் பிறந்தார். இவரது தந்தை ஸ்டீபன் சல்லிவன், தஞ்சை நகரில் கிழக்கிந்திய நிறுவனத்தின் சார்பாகப் பணியாற்றினார். இவர் முயற்சியால் தஞ்சாவூர் மற்றும் அதனையொட்டி உள்ள இடங்களில் பல ஆங்கில வழிக் கல்வி நிறுவனங்கள் திறக்கப்பட்டன.

ஜான் சல்லிவன் அவர்கள் தனது 15ஆவது வயதில் சென்னை கிழக்கிந்திய நிறுவனத்தில் எழுத்தராகச் சேர்ந்து, 1806ஆம் ஆண்டு தென்னாற்க்காடு மாவட்ட நீதிமன்றப் பதிவராகவும், 1807ஆம் ஆண்டு இரகசியக் காப்பு, அரசியல் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சகத் தலைமைச் செயலாளரின் உதவியாளராகவும், 1809ஆம் ஆண்டு மைசூரில் அமைந்திருந்த இங்கிலாந்து அமைச்சக உதவியாளராகவும், 1814ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியராகவும், 1815ஆம் ஆண்டு கோவை மாவட்டச் சிறப்பு வருவாய்த்துறை அதிகாரியாகவும் பணியாற்றினார்.

பின்னர் ஜான் சல்லிவன் அவர்கள் 1815 முதல் 1830 வரை கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியராகப் பணிபுரிந்தார். இவரால் 1819ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டம் கண்டுபிடிக்கப்பட்டது. இயற்கைச் சுற்றுச்சூழலில் மிகுந்த ஆர்வம் கொண்ட ஜான் சல்லிவன் அவர்கள் 1819ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22ஆம் நாள், பிரான்சு நாட்டைச் சேர்ந்த பிரபல இயற்கை ஆர்வலரான திரு.சேன் பாபிசூட் லூயிசுடனும், படகர் பழங்குடியினரின் வழிகாட்டுதலுடனும் உதகைமண்டலப் பகுதியை அடைந்தார். சுமார் மூன்று வாரக் காலம் அப்பகுதியைச் சுற்றிப்பார்த்த இவர் அங்கேயே ஒரு கல் வீட்டையும் கட்டினார்.

நீலகிரியின் முதல் கட்டடமான இக்கல்வீடு இன்றளவும் ஊட்டி அரசுக் கலைக் கல்லூரியில் உள்ளது. அதன்பிறகு இப்பகுதியைக் கோடை இருப்பிடமாக மாற்ற எண்ணி, இந்தப் பகுதியில் நிறையக் குடியேற்றங்களை உருவாக்கினார். மேலும், மக்கள் எளிதில் இப்பகுதியை அணுகிட 1820ஆம் ஆண்டு சிறுமுகையில் இருந்து ஒரு புதிய தரைவழிப் பாதையையும் ஏற்படுத்தினார்.

பின்னர், ஐரோப்பிய, தென்னாப்பிரிக்க நாடுகளிலிருந்து பல வகையான மலர்கள், காய்கள், பழம் தரும் மரவகைகளை இறக்குமதி செய்து நீலகிரி மாவட்டத்தில் நட்டு, ஊட்டி நகரின் நடுவில் ஒரு மிகப்பெரிய ஏரியையும் உருவாக்கினார். மேலும், மலையின் பல பகுதிகளில் ஓடிய சிறிய ஓடைகளை அந்த ஏரியுடன் இணைத்து அதன் நீர்வளத்தை உறுதி செய்தார்.

பல்வேறு பொறுப்புகளை வகித்த ஜான் சல்லிவன் அவர்கள் 1841ஆம் ஆண்டு மே மாதம் பணி ஓய்வு பெற்று, இங்கிலாந்து திரும்பி, அங்குத் தனது குடும்பத்தினருடன் இறுதி நாட்களைக் கழித்தார். 1855ஆம் ஆண்டு தனது 66ஆம் வயதில் இங்கிலாந்தில் உயிரிழந்தார்.

உதகை நகராட்சியினை 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டமைத்த பெருமைக்குரிய ஜான் சல்லிவன் அவர்களை நினைவுகூரும் வகையில் உதகை அரசுத் தாவரவியல் பூங்காச் சாலை முக்கோண வடிவு உள்ள இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது மார்பளவு வெண்கலச் சிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.



# “உதகை - 200” விழா

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 21.05.2022 அன்று நீலகிரி மாவட்டம், உதகை அரசினர் கலைக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், “உதகை – 200” விழாவினைத் துவக்கி வைத்து, ரூ.56.36 கோடி செலவில் 28 முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, ரூ.34.30 கோடி மதிப்பீட்டிலான 20 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 9,500 பயனாளிகளுக்கு ரூ.28.13 கோடி மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**“உதகை – 200” துவக்க விழா**

மலைகளின் அரசி என்று அழைக்கப்படும் உதகை நகரம் உருவாக்கப்பட்டு 200 ஆண்டுகள் ஆனதையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் “உதகை 200” என்ற உதகையின் சிறப்புகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

மேலும், உதகை நகரை 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டமைத்த ஜான் சல்லிவன் அவர்களைச் சிறப்பிக்கும் வகையில், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆ.ராசா, திரு.தருமலிங்கம் வேணுகோபால் ஆகியோரால் தொகுக்கப்பட்ட “Ooty 200 - 200 years of Ooty” என்ற விழா மலரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

**திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப்பணிகள்**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் ரூ.6.82 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், கேத்தி குறுவட்ட அலுவலர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு;

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் ரூ.2.73 கோடி செலவில் நஞ்சநாடு பகுதியில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் அரசு ஆண்கள் விடுதிக் கட்டடம்;

கால்நடைப் பராமரிப்புத்துறையின் சார்பில், ரூ.2.46 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மாவட்ட நேரடிக் காளைகள் பங்கு பண்ணை, விந்து, வைக்கோல் மற்றும் தீவன விநியோக மையக் கட்டடம்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ரூ.14.80 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள எமரால்டு, வட்டம் சாரா மருத்துவமனைக் கட்டடம்;

பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் ரூ.2.21 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கொலப்பள்ளி அரசு உயர்நிலைப்பள்ளி நூலகக் கட்டடம், தேவர்சோலை உயர்நிலைப்பள்ளி கூடுதல் பள்ளிக் கட்டடம், கூடலூர் அரசு உயர்நிலைப்பள்ளி கூடுதல் பள்ளிக் கட்டடம், டி.ஆர்.பஜார் பகுதியில் புதிய பள்ளிக் கட்டடம்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், ரூ.1.48 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள குந்தா சமுதாயக்கூடம், ஐயன்கொல்லியில் ஆசிரியர் குடியிருப்பு புதிய கட்டடம், கரிக்யூர் உண்டு உறைவிடப்பள்ளியில் சமையல் கூடம் மற்றும் உணவு அருந்தும் கட்டடம், பொக்காபுரம் உண்டு, உறைவிடப் பள்ளி கூடுதல் வகுப்பறைக் கட்டடம்;

ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில், ரூ.21.89 கோடி செலவில் கூடலூரில் பழங்குடியினருக்கான 200 பசுமை வீடுகள், மசக்கல்லில் சமுதாயக் கூடம், நாயக்கன் சோலி மற்றும் தெப்பக்காடு பகுதியில் அங்கன்வாடிக் கட்டடங்கள், பாலகொலா, எப்பநாடு ஆகிய இடங்களில் ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், கொணவக்கரை பகுதியில் ஊதிய ஊராட்சி அலுவலகக் கட்டடம், பெட்டட்டிப் பகுதியில் கிராமக்குடில், ஆடாசோலை முதல் அணிக்கொரை வரை அமைக்கப்பட்டுள்ள சாலைகள், கல்லக்கொரை முதல் கரிக்கல்வாழை வரை அமைக்கப்பட்டுள்ள சாலைகள், ஆடாசோலை முதல் அணிக்கொரை வரை அமைக்கப்பட்டுள்ள சாலைகள்;




வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறையின் சார்பில் ரூ.2.45 கோடி செலவில் காரக்கொல்லி பகுதியில் தாயகம் திரும்பியோருக்கான சிறப்புத் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள 70 வீடுகள்;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ரூ.1.50 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கூடலூர் நகராட்சி அலுவலகக் கூடுதல் கட்டடம்;

**என மொத்தம் ரூ.56.36 கோடி செலவில் முடிவுற்ற 28 பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.**

**அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்**

கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் ரூ.1.73 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தெங்குமரஹாடா கால்நடை மருத்துவமனை, உதகை கால்நடை மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்படவுள்ள வாகனம் நிறுத்தும் இடம் மற்றும் அணுகுபாதை, பணியாளர் ஓய்வு அறை;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.3.03 கோடி மதிப்பீட்டில் கோத்தகிரி அரசு மருத்துவமனையில் கட்டப்படவுள்ள விபத்து மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு மையம்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் தொட்டப்பெட்டா நடுநிலைப்பள்ளி கூடுதல் வகுப்பறைகள், எல்க்ஹில் அரசு ஆரம்பப் பள்ளி கூடுதல் வகுப்பறைக் கட்டடம், தக்கர் பாபா நடுநிலைப்பள்ளி கூடுதல் வகுப்பறைக் கட்டடம், கூக்கர் மேல்நிலைப்பள்ளி கூடுதல் வகுப்பறைக் கட்டடம்;

ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில், ரூ.27.35 கோடி மதிப்பீட்டில் செம்மனாரை முதல் தாலமொக்கை வரை சாலை மேம்பாட்டுப் பணி, தேனாடு முதல் கீழ்கட்டபெட்டு வரை சாலையைப் பலப்படுத்தும் பணி, பழனியப்பா மன்னார் சாலையை மேம்படுத்தும் பணி, எடப்பள்ளி முதல் வெலிங்டன் வரையிலான சாலையைப் பலப்படுத்தும் பணி, தாவணை முதல் ஹல்லட்டி நடுவட்டி வரை சாலையைப் பலப்படுத்தும் பணி, குண்டலாடி மங்கம் வயல் சாலை பாலம் மறுசீரமைப்புப் பணி, கொரஞ்சல் சப்பன்தோடு சாலை பாலம் மறுசீரமைப்புப் பணி, வெள்ளச்சல் பாலம் மறுசீரமைப்புப் பணி, பழங்குடியினருக்கான 592 பசுமை வீடுகள் கட்டும் பணி, கக்குச்சி ஊராட்சிக்குட்பட்ட பனகட்டி காட்சிக்கூடம் அமைக்கும் பணி, கக்குச்சி ஊராட்சிக்குட்பட்ட ஒன்னதலைப் பகுதியில் அமையவுள்ள பல்நோக்குக் கட்டடம், நடுஹட்டி பல்நோக்குக் கட்டடம்;

**என மொத்தம் ரூ.34.30 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 20 புதிய திட்டப்பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட அரசு நலத்திட்ட உதவிகள்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 258 பயனாளிகளுக்குத் தேன்பெட்டி, கோழிப்பண்ணை, நர்சரி திட்டத்திற்குக் காசோலை, தேநீர் மற்றும் சிற்றுண்டிக் கடை அமைக்கும் பணிக்கான ஆணை, கறவை மாடு, பாரம்பரிய மருத்துவர்களுக்கு உபகரணங்கள், இலவசத் தையல் இயந்திரங்கள்;

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 43 பயனாளிகளுக்கு, தையல் இயந்திரம் மற்றும் சலவைப் பெட்டிகள், வருவாய்த்துறையின் சார்பில் 994 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை மற்றும் இதர உதவித்தொகைகள், 820 பயனாளிகளுக்கு இணைய வழிப் பட்டா மற்றும் 1,180 பயனாளிகளுக்குப் பழங்குடியினர் சாதிச் சான்றிதழ்கள், மாவட்ட வழங்கல் துறையின் சார்பில் 210 பயனாளிகளுக்குப் புதிய மின்னணுக் குடும்ப அட்டைகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 400 பயனாளிகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை அடையாள அட்டைகள், 612 தூய்மைக் காவலர்களுக்குச் சீருடைகள், மாவட்ட முன்னோடி வங்கியின் சார்பில் 11 பயனாளிகளுக்குக் கல்விக் கடனுக்கான ஆணைகள், மாவட்டத் தொழில் மையத்தின் சார்பில் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனம் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2 பயனாளிக்குப் புதிய கேரட் மற்றும் காய்கறிகள் கழுவும் இயந்திரம் பெறுவதற்கான ஆணைகள்;

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் 134 சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு ஆணைகள், 50 சுயஉதவிக் குழுக்களுக்குப் பெருங்கடன் பெறுவதற்கான ஆணைகள், 1,658 பயனாளிகளுக்கு வங்கிக் கடன் இணைப்பு ஆணைகள், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் 4 குழுக்களுக்குக் கூட்டுப் பண்ணையத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்திற்கான கடனுதவி, 8 பயனாளிகளுக்கு நிரந்தர மண்புழு உற்பத்திக் கூடாரம் மற்றும் பண்ணை குட்டைக்கான ஆணைகள், 8 பயனாளிகளுக்குத் தெளிப்பு நீர்ப்பாசன கருவிகள், 4 குழுக்களுக்கு அங்கக வேளாண்மை கடைபிடித்தலுக்கான இயற்கை வேளாண் இடுபொருட்கள் பெறுவதற்கான ஆணைகள், மாவட்ட வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ் 19 குழுக்களுக்கு இயற்கை முறை மலைக்காய்கறி குறித்த பயிற்சிக்கான ஆணை, 12 குழுக்களுக்குத் தொழில் குழு துவக்க நிதி பெறுவதற்கான ஆணைகள், 2 உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்குக் கடனுதவி;

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 15 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், 5 பயனாளிகளுக்குப் பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகள், 20 பயனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள், 4 பயனாளிகளுக்கு இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான நிதி உதவித்தொகை, 2 மாற்றுத்திறனாளிகளின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகை, 20 பயனாளிகளுக்குத் தக்க செயலிகளுடன் கூடிய திறன் பேசிகள், 10 பயனாளிகளுக்குக் காதொலிக் கருவிகள்;

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பில் பாரதப் பிரதமர் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களுக்கான திட்டத்தின்கீழ் 1 பயனாளிக்கு ஆணை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் 40 பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரங்கள், பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் 9 பயனாளிகளுக்கு மகிழ் கணிதம் பயிற்சியில் வெற்றி பெற்றதற்கான கேடயம் மற்றும் பரிசுகள், 12 பயனாளிகளுக்குக் கையடக்கக் கணினிகள், 5 பயனாளிகளுக்கு மாற்றுத்திறன் மாணாக்கர்களுக்கான உதவி உபகரணங்கள், 6 பயனாளிகளுக்குப் போதைப் பொருள் விழிப்புணர்வு முழக்கம் எழுதும் போட்டியில் வெற்றி பெற்றதற்கான பரிசுகள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தின் சார்பில் 4 பயனாளிகளுக்கு கொரோனா நிவாரண நிதி, 22 பயனாளிகளுக்கு நிதி ஆதரவு திட்டத்தின்கீழ் நிதியுதவி;



தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில் 15 பயனாளிகளுக்குப் புதிய குடிசை மின் இணைப்புப் பெறுவதற்கான ஆணைகள், கூட்டுறவுத்துறையின் சார்பில் 30 சுயஉதவிக் குழுக்களுக்குக் கடனுதவி பெறுவதற்கான ஆணைகள், 2 குழுக்களுக்குக் கடனுதவி பெறுவதற்கான ஆணைகள், 13 மாற்றுத்திறனாளிகளுக்குக் கடனுதவிகள், 480 பயனாளிகளுக்குப் பயிர்க்கடன் பெறுவதற்கான ஆணைகள், 136 பயனாளிகளுக்குக் கூட்டுப் பொறுப்புக்குழு கடனுக்கான ஆணை, 49 பயனாளிகளுக்கு மத்திய காலக் கடன் மற்றும் கால்நடைப் பராமரிப்புக் கடனுக்கான ஆணைகள், 12 பயனாளிகளுக்கு நடமாடும் ஆவின் பாலகம் அமைப்பதற்கான ஆணைகள்;

கால்நடைப் பராமரிப்புத்துறை சார்பில் இலவசமாக வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 197 பயனாளிகளுக்குக் கடனுதவி, தாட்கோ மூலம் 92 பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தொழில்துறை சார்பில் தனியார் வேலைவாய்ப்பு முகாம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 1,273 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகள்;

**என மொத்தம் 9,500 பயனாளிகளுக்கு ரூ.28.13 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.**

முன்னதாக, “உதகை – 200” துவக்க விழா மற்றும் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகைதந்தபோது, பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

❖ ❖ ❖




# 21 சிறந்த எழுத்தாளர்களுக்குப் பரிசு

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 13.05.2022 அன்று தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 21 சிறந்த எழுத்தாளர்களுக்கு முதல் தவணைத் தொகையாகத் தலா இருபத்தைந்தாயிரம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் 2020–2021ஆம் ஆண்டிற்கான சிறந்த படைப்புகளுக்காகத் தேர்வு செய்யப்பட்ட திரு. இ.முருகேசன் (சட்டப்பார்வையில் ஆவணங்கள்), திரு.கு.வாஞ்சிநாதன் (களம் கண்ட தமிழ்), திரு. ஆர்.இலங்கேஷ்வரன் (விண்ணைத் துளைக்கும் விழுதுகள்), புலவர் முனைவர் பி.சிவலிங்கம் (அறிவுலக மேதை அம்பேத்கர்), திருமதி பானு ஏழுமலை (அம்பேத்கர் தான் ஆற்றிய உரையும் விவாதங்களும்), திருமதி ஆ.பிரியாவெல்சி (ஆத்மம் பழகு அனைத்தும் பழகு), திரு.பொ.பொன்மணிதாசன் (பொன்மணிதாசன் கவிதைகள்), திரு.கே.சுப்பிரமணி (சிகரங்களுக்கான விலாசங்கள்), திரு.யாக்கன் (டாக்டர் அம்பேத்கர் அரசமைப்புச் சட்ட அவைக்குள் நுழைந்த வரலாறு அதன் பின்னணி அரசியல் சூழ்நிலைகள்), திரு.ஆர்.காளியப்பன் (ஆநிரை), முனைவர் ந.வெண்ணிலா (பழந்தமிழர் மானிடவியல்) ஆகியோருக்கும்;

2021–2022ஆம் ஆண்டிற்கான சிறந்த படைப்புகளுக்காகத் தேர்வு செய்யப்பட்ட திரு.எஸ்.கே.அந்தோணிபால் (பறையர்கள் ஆட்சியும் வீழ்ச்சியும்), திரு.த.மனோகரன் (இந்திய நாட்டின் கவுரவம் டாக்டர் அம்பேத்கர்), புலவர் இர.நாகராஜ் (பைந்தமிழ் பூங்காற்று), திரு.கருவூர் கன்னல் (ஓர் ஊரின் கதை), திரு.அன்புதீபன் (அவள் தேடிய சொந்தம்), திரு.தங்கசெங்கதிர் (ஏ) த.செந்தில்குமார் (மானுடத் தெறிப்புகள்), திரு.அ.ப.காரல் மார்க்ஸ் சித்தாத்தர் (அம்பேத்கரின் "புத்தரும் அவர் தம்மமும்"), திரு.த.கருப்பசாமி (சித்தர் இலக்கியங்கள் காட்டும் ஆன்மீகமும் மருத்துவமும்),முனைவர்ம.தமிழ்ச்செல்வி(நிழல்பருகும்நீர்),முனைவர் ஜெ.மதிவேந்தன் (சங்கம் – ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு நூல்) ஆகியோருக்கும்; என மொத்தம் 21 சிறந்த எழுத்தாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதல் தவணைத் தொகையாகத் தலா இருபத்தைந்தாயிரம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்தியாவின் 75ஆம் ஆண்டு சுதந்திர அமுதப் பெரு விழாவை முன்னிட்டு, ஒன்றிய அரசின் பழங்குடியினர் விவகார அமைச்சகத்தின் சார்பில் ஒடிசா மாநிலம். புவனேஸ்வரில் 23.04.2022 முதல் 29.04.2022 வரை நடைபெற்ற 9ஆவது தேசிய அளவிலான பழங்குடியினர் கைவினைப் பொருட்கள் விற்பனை விழாவில் (Live Demonstration and Sale of Products) தமிழகப் பழங்குடியினர் சார்பாக உதகை மாவட்டத்தில் உள்ள பழங்குடியினர் ஆய்வு மையத்தின் மூலம் 3 தோடர் இனத்தைச் சார்ந்த பழங்குடிப் பெண்கள் தெரிவு செய்யப்பட்டு விற்பனை முகவர்களாக அனுப்பி வைக்கப்பட்டனர். அவ்விழாவில் மொத்தம் 62 பழங்குடியினரின் கைவினைப் பொருட்களும் 200 விற்பனை அங்காடிகளும் நிறுவப்பட்டு இருந்தன.

இவ்விழாவில் உதகை மாவட்டத்தில் வாழும் பண்டைய பழங்குடியினரான தோடர் இன மக்களால் வெள்ளை நிற பருத்தித் துணியில் கருப்பு மற்றும் சிவப்பு நிறக் கம்பளி நூல்களைக் கொண்டு கைகளால் நெய்யப்படும் பூத்தையல் தேசிய அளவில் முதலிடம் பெற்றது. இதற்கான பரிசுத் தொகையாக ரூ.5,000மும் பழங்குடியினர் ஆய்வு மையத்திற்குக் கேடயமும் ஒன்றிய அரசால் வழங்கப்பட்டது.

தேசிய அளவிலான பழங்குடியினர் கைவினைப் பொருட்கள் விற்பனை விழாவில், தோடர் பழங்குடியினரின் பூத்தையல் தேசிய அளவில் முதல் பரிசு பெற்றதற்காக, இவ்விழாவில் கலந்து கொண்ட தோடர் பழங்குடியினப் பெண்களும், பழங்குடியினர் ஆய்வு மைய இயக்குநர் (பொறுப்பு) முனைவர் ச.உதயகுமார் அவர்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



# ரூ.95.21 கோடி மதிப்பீட்டிலான
# தாம்பரம்–வேளச்சேரி பாலம் திறப்பு

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 13.05.2022 அன்று நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், மேடவாக்கத்தில், ரூ.95.21 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேடவாக்கம் மேம்பாலத்தின் தாம்பரம் – வேளச்சேரி பாலப்பகுதியை திறந்துவைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே வேளச்சேரி மற்றும் கோயம்பேடு மேம்பாலங்களைத் திறந்துவைத்தார், அதன் தொடர்ச்சியாக 13.05.2022 அன்று சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ.146.41 கோடி மதிப்பீட்டில், மேடவாக்கத்தில் மறைமலையடிகள் பாலம் – இரும்புலியூர் சாலையில் மேடவாக்கம் – சோழிங்கநல்லூர் சாலை சந்திப்பு, மேடவாக்கம் – மாம்பாக்கம் சாலை சந்திப்பு மற்றும் மவுண்ட் – மேடவாக்கம் சாலை சந்திப்புகளை இணைக்கும் வகையில் மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணி இரண்டு தனித்தனி மேம்பாலங்களாக ஒவ்வொன்றும் 3 வழித்தட மேம்பாலமாக அமைக்கப்பட்டுள்ளது.

இதில் வேளச்சேரி – தாம்பரம் தடத்தில், மேடவாக்கம் – சோழிங்கநல்லூர் சாலை சந்திப்பு மற்றும் மேடவாக்கம் – மாம்பாக்கம் சாலை சந்திப்புகளை இணைத்து 1.06 கி.மீ. நீளத்தில் மேம்பாலப் பணிகள் முடிக்கப்பட்டுப் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

தற்போது, தாம்பரம் – வேளச்சேரி தடத்தில், மவுண்ட் மேடவாக்கம் சாலை சந்திப்பு, மேடவாக்கம் – மாம்பாக்கம் சாலை சந்திப்பு மற்றும் மேடவாக்கம் – சோழிங்கநல்லூர் சாலை சந்திப்புகளை இணைத்து 2.03 கி.மீ. நீளத்தில் இம்மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாலம் திறக்கப்பட்டுள்ளதால், மேடவாக்கம் பகுதியில் போக்குவரத்து நெரிசல் குறைவதோடு, பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளின் பயண நேரம் குறையும். மேலும், தாம்பரம், வேளச்சேரி, துரைப்பாக்கம், பள்ளிக்கரணை, கிழக்குக் கடற்கரைச் சாலை, தகவல் தொழில்நுட்பச் சாலை, தரமணி, அடையாறு, மேடவாக்கம், சோழிங்கநல்லூர் மற்றும் மடிப்பாக்கம் பகுதிகளுக்குச் செல்லும் மக்களுக்கும் இப்பாலம் பயனுள்ளதாக அமையும். ❖








# 44ஆவது செஸ் ஒலிம்பியாட் – 2022 போட்டி தொடர்பாகப் புரிந்துணர்வு ஒப்பந்தம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் 14.05.2022 அன்று தலைமைச் செயலகத்தில் 44ஆவது செஸ் ஒலிம்பியாட் – 2022 போட்டி (44th Chess Olympiad – 2022) நடத்துவது தொடர்பாகத் தமிழ்நாடு அரசு மற்றும் அகில இந்தியச் சதுரங்க கூட்டமைப்புக்கு (AICF) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்திய வரலாற்றில் முதன்முறையாகத் தமிழ்நாட்டில் 44ஆவது செஸ் ஒலிம்பியாட் – 2022 போட்டி நடைபெறவுள்ளது. இப்போட்டியானது மாமல்லபுரத்தில் 28.07.2022 முதல் 10.08.2022 வரை நடைபெறவுள்ளது. இப்போட்டியில் சர்வதேச அளவில் 186 நாடுகளைச் சேர்ந்த 2,000க்கும் மேற்பட்ட சதுரங்க விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர். சரித்திரப் புகழ் வாய்ந்த மாமல்லபுரத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு அரசு மற்றும் இந்தியச் சதுரங்க கூட்டமைப்பினரிடையே (AICF) கையெழுத்தானது.

இதனைத் தொடர்ந்து, 44ஆவது செஸ் ஒலிம்பியாட்–2022 போட்டியில் பங்கேற்கவுள்ள சதுரங்க வீரர் / வீராங்கனைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

❖ ❖ ❖



# மாநகரப் பேருந்துகளில் சிசிடிவி கேமராக்கள்






**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 14.05.2022 அன்று தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத்துறை சார்பில் பொதுமக்களின் பாதுகாப்பான பயணத்திற்காக நிர்பயா பாதுகாப்பான நகரத் திட்டத்தின்கீழ், 2,500 மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் சிசிடிவி கேமராக்கள் மற்றும் அவசரப் பொத்தான்கள் பொருத்தும் பணியின் முதற்கட்டமாக 500 பேருந்துகளில் சிசிடிவி கேமராக்கள் மற்றும் அவசர அழைப்புப் பொத்தான்கள் (Panic Button)பொருத்தப்பட்டு அதன் முன்னோட்ட செயல்பாட்டினைத் தொடங்கிவைத்தார்.

இந்த முன்னோட்ட வெளியீட்டின் (Beta) நோக்கம், நிர்பயா பாதுகாப்பான நகரத் திட்டத்தைச் செயல்படுத்துவதும், காவல் துறை மற்றும் மருத்துவ அவசர ஊர்தியின் (Ambulance) கட்டளை மையத்துடன் நேரடித் தொடர்பு கொள்வதாகும்.

இதற்காக, ஒவ்வொரு பேருந்திலும் மூன்று கேமராக்கள், நான்கு அவசர அழைப்புப் பொத்தான்கள் (Panic Button) மற்றும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) கொண்டு இயங்கும் மொபைல் நெட்வொர்க் வீடியோ ரெக்கார்டர் (MNVR) ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன. மொபைல் நெட்வொர்க் வீடியோ ரெக்கார்டர் (MNVR) 4G GSM SIM வழியாக கிளவுட் (Cloud) அடிப்படையிலான கட்டளை மைய பயன்பாட்டுடன் இணைக்கப்படும்.

இம்முழு அமைப்பும் மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் இயங்கும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறை (Integrated Command and Control Centre) வழியாகக் கண்காணிக்கப்படும். இதன் தொடர்ச்சியான செயல்பாடுகளுக்கான தகவல் மையம் (Data Center) கிளவுட் (Cloud) உடன் இணையும்.

பயணம் செய்யும் பயணிகளுக்கு மற்றவர்களால் ஏற்படும் அசௌகரியங்களின் போதும், பெண்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்ஏற்படக்கூடியநிகழ்வுகளின் போதும், அவசர அழைப்புப் பொத்தான்களை (Panic Button) அழுத்தி, அந்நிகழ்வுகளைப் பதிவு செய்யலாம். அவ்வாறு செய்வதன் மூலம், கட்டளை மையத்தில், பேருந்தில் நடந்த சம்பவத்தின் வீடியோ பதிவின் சில வினாடி முன் தொகுப்புடன் ஒரு எச்சரிக்கை மணி ஒலிக்கும். இந்த ஒலி தூண்டுதலைக் கொண்டு, செயலியை இயக்குபவர் (Operator) நிலைமையைக் கண்காணித்து, நிகழ் நேர அடிப்படையில், அடுத்த கட்ட நடவடிக்கைக்கு ஆவன செய்வார். இதற்காகக் கட்டளை மையம், காவல்துறை மற்றும் பெருநகரச் சென்னை மாநகராட்சியின் அவசரகாலப் பதில் மையத்துடன் இணைக்கப்படும். இத்திட்டத்தின் செயல்பாட்டின்போது, நிகழ் நேர அவசர அழைப்புகள் காவல் நிலையக் கட்டுப்பாட்டு அறைக்குச் சென்றடையும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 31 பணிமனைகள் மற்றும் 35 பேருந்து முனையங்கள் முழுவதும் மைய கண்காணிப்பின்கீழ்க் கொண்டு வரப்படவுள்ளது. இத்திட்டத்தில், செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) அடிப்படையிலான வீடியோ பகுப்பாய்வு முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், காணாமல் போனவர்களைக் கண்டறியவும், குற்றவாளிகள் என அறியப்பட்டவர்களை அடையாளம் காணவும் முடியும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் போக்குவரத்துத்துறை, காவல்துறை, பெருநகரச் சென்னை மாநகராட்சி ஆகிய துறைகளின் பல வகையான பயன்பாடுகளுக்குப் பேருதவியாக இருக்கும்.

மேலும், அனைத்துத் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் (மாநகர் போக்குவரத்துக் கழகம் நீங்கலாக) மற்றும் தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் பணியாற்றி, பணியின்போது உயிரிழந்த 136 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குத் கருணை அடிப்படையில், 5 ஓட்டுநருடன் கூடிய நடத்துனர், 21 ஓட்டுநர்கள், 106 நடத்துனர்கள், தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறையில் 4 நபர்களுக்கு இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.





# “ஊட்டச்சத்தை உறுதி செய்” திட்டம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 21.05.2022 அன்று 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான ‘ஊட்டச்சத்தை உறுதி செய்’ திட்டத்தின்கீழ், குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்டறிவதற்கான சிறப்பு மருத்துவ முகாமை நீலகிரி மாவட்டம், தொட்டபெட்டா ஊராட்சி முத்தோரைக் குழந்தைகள் மையத்தில் தொடங்கிவைத்தார்.

ஆரோக்கியமான குழந்தைகளே, நாட்டின் வளமான எதிர்காலம் என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 07.05.2022 அன்று சட்டப்பேரவையில் விதி 110இன்கீழ் வெளியிட்ட அறிவிப்பில், 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை நலமுடன் வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன், பரந்துபட்ட அளவில் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனைகள் செய்ய இருக்கிறோம் என்றும், மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கு மருத்துவ உதவியும், ஊட்டச்சத்துத் தேவைப்படும் குழந்தைகளுக்குச் சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டம் ஒன்றும் ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது என்றும் அறிவித்தார்.

அதனை செயல்படுத்தும் விதமாக, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மற்றும் சுகாதாரத்துறை ஒன்றிணைந்து, 6 வயத்திற்குட்பட்ட குழந்தைகளில் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளுக்குச் சிறப்பு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொண்டு மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகள், ஊட்டச்சத்துத் தேவைப்படும் குழந்தைகள் ஆகியோரைப் பிரித்தறிந்து, குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டினை நீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

‘ஊட்டச்சத்தை உறுதி செய்’ என்ற புதிய திட்டத்தின்கீழ் முத்தோரைக் குழந்தைகள் மையத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குழந்தைகளுக்கானச் சிறப்பு மருத்துவப் பரிசோதனை முகாமினைத் தொடங்கிவைத்தார்.

இந்தச் சிறப்பு மருத்துவப் பரிசோதனை முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் ஒருமாத காலத்திற்கு நடைபெறும். இதன்மூலம் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுடையவர்களாகக் கண்டறியப்பட்டுள்ள குழந்தைகள் கண்காணிக்கப்பட்டு அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், சிறப்பு மருத்துவப் பரிசோதனைகளுக்குட்படும் குழந்தைகளின் விவரங்கள் அதற்கென வடிவமைக்கப்பட்டுள்ள சிறப்புச் செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டுக் கண்காணிக்கப்படும். மருத்துவப் பரிசோதனைகளுக்குப் பிறகு ஊட்டச்சத்து மட்டும் தேவைப்படும் குழந்தைகளுக்குத் தனியாகச் சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டம் உருவாக்கப்படும். ❖



# கலைஞரின்
## அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் தொடக்கம்









**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 23.05.2022 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத் துறை சார்பில் 1,997 கிராமப் பஞ்சாயத்துக்களில் உள்ள 9 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், ரூ.227 கோடி மதிப்பிலான கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினைத் தொடங்கிவைத்தார்.

தமிழ்நாட்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க, முதல் வேளாண்மை நிதி நிலை அறிக்கையை 14.08.2021 அன்று மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் தாக்கல் செய்த போது, ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள அனைத்துக் கிராமங்களிலும் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சியை உருவாக்கிட அனைத்துத் துறைகளின் ஒருங்கிணைப்புடன் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் என்ற மாபெரும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார். இச்சீரிய திட்டத்தின்கீழ், அனைத்துக் கிராமங்களும் ஒட்டுமொத்த வளர்ச்சியடைந்து தன்னிறைவு பெற்ற கிராமங்களாக மாற வேண்டும் என்பதே நோக்கமாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பத்தாண்டு தொலைநோக்குத் திட்டமான 11.75 இலட்சம் எக்டேர் நிலங்களைக் கூடுதலாகச் சாகுபடிக்குக் கொண்டு வருதல். இருபோக சாகுபடி பரப்பினை 20 இலட்சம் எக்டராக உயர்த்துதல், உணவுத் தானியங்கள், தேங்காய், பருத்தி, சூரியகாந்தி, நிலக்கடலைப் பயிர்களின் ஆக்கத்திறனில் தேசிய அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடித்தல் ஆகிய தொலைநோக்குத் திட்டங்களை அடைந்திடும் வகையில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2021–2022ஆம் ஆண்டில் 1,997 கிராமப் பஞ்சாயத்துக்களில் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின்கீழ், தென்னங்கன்றுகள், பயறுவகை விதைகள், தெளிப்பான்கள், வீட்டுத் தோட்டம் அமைக்கக் காய்கறித் தொகுப்புகள், தோட்டக்கலைப்பயிர்ச்சாகுபடிக்கு ஊக்கத்தொகை, பழக்கூடைகள் மற்றும் ட்ரம், பழச்செடிகள், மரக்கன்றுகள் தொகுப்புகள், தரிசு நிலத் தொகுப்புகளில் ஆழ்துளை/ குழாய்க்கிணறு அமைத்தல், ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்தில் கிணறு அமைத்து மின் மோட்டாருடன் நுண்ணீர் பாசன வசதி அமைத்தல், பண்ணைக்குட்டை அமைத்தல், சிறுபாசன குளங்கள், குளங்கள், ஊரணிகள், வரத்துக் கால்வாய்கள் தூர்வாருதல் போன்ற செயல்பாடுகள் இக்கிராமப் பஞ்சாயத்துக்களிலும் செயல்படுத்தப்படும்.





கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்து, பயனாளிகளுக்குத் தரிசு தொகுப்பிற்குட்பட்ட விவசாயச் சங்க உறுப்பினர்களுக்கு ஆழ்துளைக் கிணறு அமைத்திடப் பணி ஆணை, தென்னங்கன்றுகள், தோட்டக்கலைப் பயிர்ச் சாகுபடி செய்திட ஊக்கத்தொகை, வரப்பு ஓரங்களில் பழச்செடிகள் மற்றும் மரக்கன்றுகள் நட்டிட மரக்கன்றுகள், ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்தில் கிணறு அமைத்து மின் மோட்டாருடன் நுண்ணீர்ப் பாசன வசதி அமைப்பதற்கான பணி ஆணை, பண்ணைக் குட்டை அமைப்பதற்காக ஆணை, அக்ரி கிளினிக் அமைக்க ஆணை ஆகியவற்றை வழங்கி ஆற்றிய உரை.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய எண்ணமாக இருக்கக்கூடிய உழவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், அவர்களின் நலனைப் பாதுகாத்திடவும், இந்தியாவில் முதன்முறையாக வேளாண்மைக்கு இலவச மின்சாரம் தந்து சாதனை படைத்தார்கள்.

உழவர்களின் வருமானத்தைப் பெருக்குவதற்காக விளைபொருட்களை, பேருந்தில் இலவசமாக எடுத்துச் செல்லலாம் என்று அறிவித்தார்கள், அதை நடைமுறைப்படுத்திக் காட்டினார்கள்.

உழவர் சந்தைகளை ஏற்படுத்தித் தந்த உன்னதத் தலைவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

உழவர்களின் வாழ்வில் ஒளியேற்ற, வேளாண் கடன்களைத் தள்ளுபடி செய்ததும், அவர்களின் வாழ்வில் ஏற்றம் காண வைத்ததும் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும் அனைத்துச் சமூக மக்களின் வளர்ச்சிக்காகவும், தன்னுடைய வாழ்நாள் எல்லாம் போராடிய தலைவர் கலைஞர் அவர்கள், அவருடைய எண்ணத்தில் வாழும் வேளாண் மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை நமது அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

உழவர்களின் நலனை எப்போதும் பாதுகாத்து வரும் நமது அரசு, உழவர்களின் நலனுக்காக வேளாண் துறையினை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை என்று பெயரை மாற்றியும்; வேளாண்மைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கையையும் தாக்கல் செய்து உழவர்களைப் பெருமைப்படுத்தியிருக்கிறது.

உழவர்களின் நலனை முன்னிலைப்படுத்தும் நம்முடைய அரசுக்கு இயற்கையும், நல்ல ஒத்துழைப்பை நல்குவதால், குறுவைச் சாகுபடிக்கு இந்த ஆண்டு மே 24ஆம் தேதி மேட்டூர் அணையினைத் திறந்துவைக்க இருக்கிறேன், அந்தச் செய்தியையும் இப்போது மகிழ்ச்சியுடன் உங்களோடு நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

நான் தமிழ்நாடு வளர்ச்சிக்காக ஏழு அம்ச தொலைநோக்குத் திட்டங்களை வகுத்துக் கொடுத்திருக்கிறேன். இந்த ஏழு அம்ச தொலைநோக்குத் திட்டங்களில் ஒன்றான "மகசூல் பெருக்கம் – மகிழும் விவசாயி" என்பதை நடைமுறைப்படுத்தும் வகையில், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டது. ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சியையும் தன்னிறைவான கிராமத்தையும் உருவாக்குவது இந்தத் திட்டத்தினுடைய முக்கிய நோக்கமாக அமைந்திருக்கிறது.

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டமானது, தமிழ்நாட்டிலுள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளில் 5 ஆண்டுகளில் அதைச் செயல்படுத்த இருக்கிறோம். இந்தத் திட்டமானது ஊரக வளர்ச்சித்துறையின் மாபெரும் திட்டமான அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டக் கிராமங்களுடன் இணைந்து செயல்படுத்தப்படுவதால், கிராம அளவில் ஒருங்கிணைப்பு நன்றாக இருக்கும் என்பது இதனுடைய சிறப்பு!

2021–2022ஆம் ஆண்டில் 1,997 கிராமப் பஞ்சாயத்துகளில் ரூ.227 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதை இன்றைக்கு நான் துவக்கி வைத்திருக்கிறேன். இந்தத் திட்டத்தினுடைய முக்கிய சிறப்பம்சமே கிராம அளவில் அரசுத் துறைகளின் அனைத்து நலத்திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதுதான்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் அனைத்துச் சமூக மக்களையும் ஒருங்கிணைத்து, முன்னேற்றம் காண வேண்டுமெனத் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் உழைத்த உன்னதத் தலைவர்!

அந்த அடிப்படையில், இந்தத் திட்டமும் ஒருங்கிணைக்கும் பணியை முன்னிலைப்படுத்துவதால், தலைவர்

கலைஞர் அவர்களின் பெயரை இத்திட்டத்திற்கு வைத்து இன்றைக்குச் சிறப்புச் சேர்த்திருக்கிறோம். அது சாலப் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக, கிராமத்தில் உள்ள தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவருதல்.

நீர்வள ஆதாரங்களைப் பெருக்கி, சூரிய சக்தி பம்பு செட்டுகளுடன் நுண்ணீர்ப் பாசன வசதி ஏற்படுத்துதல். வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டிச் சந்தைப்படுத்துதல்.

ஊரக வளர்ச்சித்துறையின் மூலமாகப் பண்ணைக் குட்டை அமைத்தல் மற்றும் கிராம வேளாண் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல். கால்நடைகளின் நலன் காத்து, பால் உற்பத்தியைப் பெருக்குதல்.

வருவாய்த்துறையின் மூலம் பட்டா மாறுதல், இ–அடங்கல், சிறு / குறு உழவர்களுக்குச் சான்று வழங்குதல்.

கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் அதிக அளவு பயிர்க்கடன்கள் வழங்குதல்.

பாசன நீர்வழித் தடங்களைத் தூர்வாருதல், உள்ளிட்ட கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்காக அனைத்துத் துறைத் திட்டப் பணிகளையும் ஒருங்கிணைத்துத் திட்டம் செயலாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“தனி மரம் தோப்பாகாது” “கூடி வாழ்ந்தால் கோடி நன்மை” என்ற முதுரைகளுக்கு ஏற்ப, தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் உள்ள உழவர்களை ஒருங்கிணைத்து, உழவர் உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்கி, தேவையான தொழில்நுட்பப் பயிற்சிகள் அளித்து, வேளாண்மை – உழவர் நலத்துறையின் பல துறைகளின் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதனால் கிராமங்களில் ஒட்டுமொத்த வளர்ச்சி பலப்படும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையுடன் ஒருங்கிணைந்து திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதால், கிராம அளவில் தன்னிறைவு ஏற்படும். அதனால் நகரத்தினை நோக்கி, கிராம மக்கள் இடம்பெயர்தல் தடுக்கப்படும்.

கிராம வளர்ச்சி என்பது பெரும் மக்கள் இயக்கமாக மாற வேண்டிய இந்தக் காலகட்டத்தில், கிராமத்திலுள்ள அனைத்து உழவர்களையும், ஏதாவது ஒரு திட்டத்தின் மூலமாவது பயனடையச் செய்ய வேண்டும் என்ற முக்கிய நோக்கத்தோடு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

எனவே, அனைத்துத் துறை அலுவலர்களும் அர்ப்பணிப்போடு, சிந்தையையும் செயலினையும் ஒரே நேர்கோட்டில் செலுத்தி, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்திடக் கேட்டுக் கொண்டு, வேளாண் பெருமக்கள், அரசுக்கும், அரசு அலுவலர்களுக்கும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அன்புடன் கேட்டு, இந்தத் தலைமை உரையை இந்த அளவோடு நிறைவு செய்கிறேன். ●

## பணி ஆய்வு



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் 18.05.2022 அன்று மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.

இக்கூட்டத்தில், அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியினை அர்ப்பணிப்புடன் எவ்விதத் தொய்வுமின்றி விரைவாக மேற்கொள்ள வேண்டும் எனவும், இந்த ஆண்டில், செய்தி மக்கள் தொடர்புத்துறைச் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள அறிவிப்புகளையும், செய்தித்துறையின் மானியக் கோரிக்கையில் அறிவித்துள்ள அறிவிப்புகளையும் விரைந்து செயல்படுத்தத் திட்டம் வகுத்துச் செயல்பட வேண்டும் எனவும் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

# குறுவைச் சாகுபடிக்கு
# மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர்த் திறப்பு



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள விவசாயப் பெருமக்கள் குறுவைச் சாகுபடி செய்ய மேட்டூர் அணையிலிருந்து 24.05.2022 அன்று தண்ணீர் திறந்துவைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மேட்டூர் அணையிலிருந்து சென்ற ஆண்டு குறித்த நாளான ஜூன் 12ஆம் நாளன்று குறுவைச் சாகுபடிக்காக நீர் திறந்து விடப்பட்டுக் குறுவை நெல் சாகுபடியில் புதிய சாதனை படைக்கப்பட்டது.

தற்போது காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதியில் நல்ல மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு அதிக நீர்வரத்து உள்ளது. 24.05.2022 நிலவரப்படி, மேட்டூர் அணையின் நீர்மட்ட அளவு 117.760 அடியாகவும் நீர் இருப்பு 89.942 டி.எம்.சி. அடியாகவும் உள்ளது. அதிக நீர்வரத்துத் தொடர்வதால் மேட்டூர் அணை தனது முழு கொள்ளளவை விரைவில் எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, காவிரி டெல்டா விவசாயிகளின் நலன் கருதி, குறுவைச் சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து வழக்கமாக நீர் திறக்கப்படும் நாளான ஜூன் 12க்கு முன்பாகவே, 24.05.2022 முதல் நீரைத் திறந்துவிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மேட்டூர் அணை கட்டப்பட்ட நாள் முதல் குறுவைச் சாகுபடிக்கு வழக்கமான தண்ணீர் திறக்கும் நாளான ஜூன் 12ஆம் தேதிக்கு முன்னதாக முதன்முறையாக மே 24இல் குறுவைப் பாசனத்திற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

சுதந்திர இந்தியாவில் மே மாதத்தில் மிக முன்னதாகத் தண்ணீர் திறந்து விடப்படுவது இதுவே முதல் முறையாகும். சுதந்திர இந்தியாவில் குறுவைச் சாகுபடிக்காக ஜூன் 12ஆம் தேதி தண்ணீர் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் திறந்து விடப்படுவது இதுவே இரண்டாவது முறையாகும்.

### முன்கூட்டியே தண்ணீர் திறப்பதால் ஏற்படும் நன்மைகள்

- மேட்டூர் அணையிலிருந்து மிக முன்னதாக தண்ணீர் திறந்துவிடப்படுவதால் டெல்டா பகுதி முழுவதும் தண்ணீர் சென்று நிலத்தடி நீர்மட்டம் தொடர்ந்து உயர்வதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.
- மேட்டூர் அணையிலிருந்து முன்னதாக திறந்துவிடப்படும் தண்ணீரானது முழுமையாக டெல்டா பாசனப் பகுதியின் கடைமடை வரை அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றடைய ஏதுவாகும்.
- மேட்டூர் அணையிலிருந்து முன்னதாக திறந்துவிடப்படும் தண்ணீரைக் கொண்டு டெல்டா பாசனப் பகுதிகளில் வழக்கத்தைவிடக் குறுவைச் சாகுபடிக்காகச் சுமார் 5.22 இலட்சம் ஏக்கர் பயிரிட்டு அறுவடை செய்ய எதிர்பார்க்கப்படும். எதிர்வரும் சம்பாச் சாகுபடிப் பணிகளை முன்னதாகத் தொடங்கிச் செயல்படுத்துவதற்கும் வழிவகுக்கும்.
- டெல்டா பாசனப் பகுதிகளில் தூர்வாரும் பணிகள் முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டதால் முன்னதாகவே முடிக்கப்பட்டுள்ளது.
- நிலத்தடி நீர்மட்டம் உயர்வதால் நெல் மட்டுமில்லாமல் கோடை பயிரான பயறு மற்றும் தானிய வகைகள் அதிக அளவில் சாகுபடி செய்ய வாய்ப்புள்ளது.

காவிரி டெல்டா குறுவைப் பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12 முதல் செப்டம்பர் 15ஆம் தேதி வரை 5,22,000 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 125 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படுகிறது. இதற்கு மேட்டூர் அணையிலிருந்து 99.74 டி.எம்.சி. வழங்கியும், மீதமுள்ள 25.26 டி.எம்.சி. தண்ணீர் ஆனது மழை மற்றும் நிலத்தடி நீர் மூலமாகவும் பூர்த்தி செய்யப்படும்.

குறுவைப் பாசனத்திற்கு நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, ஆகிய மாவட்டங்களில் 4,91,200 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 93.860 டி.எம்.சி. தண்ணீரும், கடலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்கு 30,800 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 5.88 டி.எம்.சி. தண்ணீரும் மேட்டூர் அணையிலிருந்து தேவைப்படுகிறது.

தற்போது மேட்டூர் அணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு 24.05.2022 அன்று காலை, 3,000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு, மாலைக்குள் படிப்படியாக 10,000 கன அடியாக உயர்த்தப்பட்டு, ஜூன் மாதம் இறுதி வரை வழங்கப்படும். ஜூலை மாதத்தில் 10,000 கன அடியிலிருந்து படிப்படியாக 16,000 கன அடியாக உயர்த்தியும், ஆகஸ்ட் மாதத்தில் 18,000 கன அடியாகவும் நீர் தேவைக்கேற்ப வழங்கப்படும்.

### சம்பா மற்றும் தாளடிப் பாசனம்

மேட்டூர் அணையிலிருந்து சம்பா மற்றும் தாளடிப் பாசனத்திற்கு, செப்டம்பர் 15 முதல் ஜனவரி 28 வரை 12,10,000 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 205.60 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படும். இதற்கு அணையிலிருந்து 108.50 டி.எம்.சி. தண்ணீர் வழங்கியும் மீதமுள்ள 97.10 டி.எம்.சி. தண்ணீர் பருவமழை மற்றும் நிலத்தடி நீர் கொண்டும் பூர்த்தி செய்யப்படும்.

மேட்டூர் அணையின்கீழ்க் காவிரி ஆற்றிலிருந்து சுமார் 155 குடிநீர்த் திட்டங்களின் மூலம் தினசரி 1,700க்கும் மேற்பட்ட மில்லியன் லிட்டர் தண்ணீர் 18 மாவட்டங்களில் உள்ள பொதுமக்களின் குடிநீர் பயன்பாட்டிற்காக ஆண்டு முழுவதும் எடுத்துப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 30க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளுக்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கும் மற்றும் குடிநீர்ப் பயன்பாட்டிற்கும் தண்ணீர் திறந்து விடப்படும் பொழுது அணை மின் நிலையம் மூலம் 50 மெகாவாட் மின்சாரமும் மற்றும் சுரங்க மின் நிலையம் மூலம் 200 மெகாவாட் மின்சாரமும், மொத்தம் 250 மெகாவாட் மின்சாரம் உற்பத்திச் செய்யப்படுகிறது. அணையின்கீழ்ப் பகுதியில் 7 கதவணை நீர் மின் நிலையங்கள் மூலம் 7 x 30 மெகாவாட், என மொத்தம் 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்திச் செய்யப்படுகிறது.

வடகிழக்குப் பருவமழையினைப் பொருத்து அணையிலிருந்து தண்ணீர் எடுக்கும் அளவினை உயர்த்தியும் குறைத்தும் தேவைக்கேற்ப வழங்கப்படும். நடப்பாண்டில் காவிரி டெல்டா விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும், நீர் பங்கீட்டில் நிலைமைக்கேற்பத் தண்ணீரை முறை வைத்துப் பயன்படுத்த நீர்வளத்துறை அலுவலர்களுடன் ஒத்துழைக்குமாறும், மிக அதிக அளவு மகசூல் பெற்றுப் பயனடையுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.





# “இளைஞர் திறன் திருவிழா”

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 25.05.2022 அன்று சென்னை, இராணி மேரி கல்லூரியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மற்றும் தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் மாநில அளவிலான முதல் ‘இளைஞர் திறன் திருவிழா’–வைத் தொடங்கிவைத்தார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் 2022–2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்காகத் திறன் பயிற்சியளிக்கும் அரசுத் துறைகளையும், தனியார்த் துறைகளையும் ஒருங்கிணைத்து, 388 வட்டாரங்களில் ‘இளைஞர் திறன் திருவிழாக்கள்’ நடத்தப்படும் என்றும், இளைஞர்கள் அதிக வேலைவாய்ப்புள்ள தொழில்களைப் பற்றி அறிந்து கொள்வதோடு, திறன் மேம்பாடு குறித்த விழிப்புணர்வு மற்றும் தகவல்களையும் ஒருங்கே பெறுவதற்கு, இந்தத் திறன் திருவிழாக்கள் பேருதவியாக அமையும். இதற்காக ரூ.1.94 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, நம் மாநிலத்தில் உள்ள இளையோருக்கும் மற்றும் திறன் பயிற்சி நிறுவனங்களுக்கும் இணைப்புப் பாலமாக விளங்கும் வகையில் இந்த இளைஞர் திறன் திருவிழாவில், இளையோருக்குத் திறன் குறித்த ஆலோசனைகளை வழங்கக் கலந்தாய்வுக் கூடங்கள், மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இளைஞர் திறன் திருவிழாவில் பங்குகொள்ள விருப்பமுள்ள இளைஞர்கள் தங்களின் சுயவிபரங்களைப் பதிவு செய்துகொள்ள நிகழ்விடத்திலேயே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்கு மின்னணுவியல், தொலைத் தொடர்பு, ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சேவைகள், ஆயத்த ஆடை வடிவமைப்பு, வங்கி, நிதிச்சேவை மற்றும் காப்பீடு, கைவினைப்பொருட்கள் மற்றும் தரைவிரிப்பு, நகைகள் வடிவமைத்தல், உணவுப் பதப்படுத்துதல் போன்ற பல்வேறு தொழில் துறைகளில் வழங்கப்படும் திறன் பயிற்சிகள், பயிற்சிப் பிரிவுகள், வேலைவாய்ப்புகள் அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் போன்ற தகவல்களைத் தொழில்துறை வல்லுநர்கள் விரிவாக விளக்குவார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனை அரங்குகளைத் திறந்துவைத்துப் பார்வையிட்டதுடன், இளைஞர் திறன் திருவிழா கலந்தாய்வுக் கூடங்களையும் பார்வையிட்டு, இளைஞர்களுடன் கலந்துரையாடினார். அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இளைஞர்களுக்குத் திறன் வளர்ப்புப் பயிற்சிச் சான்றிதழ், தேர்வு செய்யப்பட்டவர்களுக்குப் பணிநியமன ஆணைகளையும் வழங்கினார்.

மேலும், 608 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக, காய்கறி, பழ வியாபாரம், மளிகைக்கடை, சிறு பெட்டிக்கடை, தையல் நிலையம் போன்ற தொழில்கள் நடத்துவதற்கு ரூ.25.66 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

விழா நடைபெறும் இராணி மேரி கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனை கண்காட்சியானது 25.05.2022 முதல் 29.05.2022 வரை தொடர்ந்து நடைபெற்றது.





# "காவல்துறை நம் நண்பன்"

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 27.05.2022 அன்று சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற இந்தியக் குடியரசுத் தலைவர் பதக்கங்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் பதக்கங்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை:

❖ இந்தியக் குடியரசுத் தலைவரின் பதக்கங்கள், ❖ ஒன்றிய உள்துறை அமைச்சரின் பதக்கங்கள், ❖ தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் ஆகியவற்றை வழங்கும் விழாவாக மிகுந்த எழுச்சியோடு, ஏற்றத்தோடு இது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ❖ காவல்துறை, ❖ ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ❖ தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, ❖ சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை, ❖ ஊர்க்காவல் மற்றும் குடிமைப் பாதுகாப்புத்துறை, ❖ தடய அறிவியல் துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த காவல் வீரர்கள் இந்த விருதுகளைப் பெற்றிருக்கிறீர்கள். ❖ தீரச் செயல், ❖ தகைசால் பணி, ❖ மெச்சத்தக்கப் பணி, ❖ சிறந்த நற்பணி, ❖ பொதுச்சேவையில் சீர்மிகு பணி, ❖ சீர்மிகு புலனாய்வு, ❖ சீர்மிகு காவல் பயிற்சி, ❖ சிறப்புச் செயலாக்கம், ❖ விரல் ரேகை அறிவியலில் சீர்மிகு பணி, ❖ தொழில்நுட்பச் சிறப்புப் பணி, ❖ தடய அறிவியலில் சீர்மிகு பணி ஆகியவற்றுக்கான பதக்கங்கள் வழங்கப்பட்டிருக்கின்றது.

இப்பதக்கங்களைப் பெற்றிருக்கக்கூடிய அனைத்துக் காவல் வீரர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். மேலும் பல்வேறு பதக்கங்களைப் பெறவேண்டும் என்ற வேண்டுகோளையும் வைக்க நான் விரும்புகிறேன். இதுபோன்ற விருதுகளை மற்ற காவலர்களும் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

காவலர்கள் என்றாலே வீரச் செயல் செய்பவர்கள், தீரச் செயல் செய்பவர்கள்தான். அதில் பதக்கங்கள் பெறுகிறார்கள் என்றால், அத்தகைய வீரதீரச் செயல்களின் மற்றவர்களைவிட முனைப்போடு இருப்பவர்களுக்கு அவை வழங்கப்படுகிறது. இவை உங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய பெரும் அங்கீகாரம். இத்தகைய அங்கீகாரத்தை "நாமும் பெறுவோம்" என்ற உறுதியை ஒவ்வொரு காவலரும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மேலும் இதுபோன்ற பதக்கங்கள், வீரதீரச் செயல்களுக்காக மட்டுமல்ல, பண்பாட்டுப் பதக்கங்களாகவும் மாறவேண்டும். காவல்துறை "உங்கள் நண்பன்" என்று சொல்கிறோம். அத்தகைய நண்பர்களாக இருப்பவர்களுக்கும், நண்பர்களாக நடந்து கொள்பவர்களுக்கும் பதக்கங்கள் வழங்கப்பட வேண்டும். மக்களின் காவலர்களாக இருந்து மக்களைக் காக்கும் பணியில் சிறந்து விளங்கக் கூடிய காவலர்களைப் பாராட்ட வேண்டும்.

காவல்துறை மக்களோடு நெருக்கமானால்தான், நாட்டில் குற்றங்கள் குறையும். மக்களிடம் இருந்து காவல்துறை விலகி இருந்தால், குற்றம் பெருகும். எனவே, "காவல்துறை நம் நண்பன்" என்று சொல்லத்தக்க விதத்தில் காவலர்கள் செயல்பட வேண்டும். காவல் நிலையங்கள் பொதுமக்களின் மக்கள் தொடர்புப் பாதுகாப்பு அலுவலகங்களைப் போலச் செயல்பட வேண்டும். அந்தளவுக்கு அதன் செயல்பாடு அமைய வேண்டும்.

தமிழ்நாடு அரசின் ஒரு கை நிருவாகம் என்றால், இன்னொரு கை காவல்துறை என்பதை நான் சட்டமன்றத்திலேயே சொல்லி இருக்கிறேன். இதன்மூலமாகக் காவல்துறைக்கு இருக்கும் முக்கியத்துவத்தை நீங்கள் உணரலாம்.

காவல்துறை என்றாலே தண்டனையை வாங்கித் தரும் துறையாக மட்டும் அனைவரும் நினைக்கிறார்கள். காவல்துறை என்பது குற்றங்கள் நடக்காத வகையில் சூழ்நிலைகளை உருவாக்கித் தரும் துறையாக மாறவேண்டும் என்பதையும் நான் தொடர்ந்து வலியுறுத்தி வந்து கொண்டிருக்கிறேன்.

குற்றங்கள் எந்தச் சூழலிலும் நடைபெறாத ஒரு காலத்தை உருவாக்குவதற்குக் காவல்துறை திட்டமிட வேண்டும் என்பதுதான் காவல்துறைத் தலைவர் முதல் காவலர்கள் வரைக்கும் நான் வைக்கக்கூடிய கோரிக்கை.

ஒரே ஒரு காவலர் அல்லது ஒரு காவல் நிலையம் தனது கடமையைச் செய்யத் தவறும்போது, அது ஒட்டுமொத்தமாக





காவல்துறைக்கே தலைக்குனிவை ஏற்படுத்துகிறது என்பதை யாரும் மறந்துவிட வேண்டாம். எந்த ஒரு காவலராக இருந்தாலும், அவரது செயல் காவல்துறையைத் தலைநிமிர வைக்க வேண்டுமேத் தவிர, தலைக்குனிவை ஏற்படுத்திவிடக் கூடாது. அத்தகைய எச்சரிக்கை உணர்வு, காவலர்கள் அனைவருக்கும் இருக்குமானால், குற்றச் சம்பவங்களே நடைபெறாத மாநிலமாகத் தமிழ்நாடு மாறும்.

★ எந்தச் சூழலிலும் பொதுமக்களுக்கு அச்சம் தரும் சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

★ அரசியல் ரீதியாகவோ, மதம் மற்றும் சாதி காரணமாகவோ வன்முறைகள் உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

★ அப்படித் திட்டமிட்டு இந்த அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படுத்த நினைப்பவர்களை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும்.

★ போதைப் பொருட்கள் நடமாட்டம் முற்றிலுமாகத் தடுக்கப்பட வேண்டும்.

★ கூலிப்படையினர் முழுமையாகத் துடைத்தெறியப்பட வேண்டும்.

★ கள்ளச்சாராயம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டாக வேண்டும்.

இத்தகைய நோக்கங்களைக் கொண்டதாகக் காவல்துறை கண்டிப்புடன் நடந்தாக வேண்டும். இத்தகைய சூழலை உருவாக்கி, ஒட்டுமொத்தமான அமைதிப் பதக்கத்தைத் தமிழகக் காவல்துறை பெறவேண்டும் என்று நான் விரும்புகிறேன். பெறுவீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

எல்லோருக்கும் எடுத்துக்காட்டான திராவிட மாடல் ஆட்சியைத் தமிழகத்தில் வழங்கி வருகிறோம். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, எல்லார்க்கும் எல்லாம் என்ற உன்னதமான தத்துவத்தின் அடிப்படையில் திட்டங்களைத் தீட்டி வருகிறோம். இவை அனைத்துக்கும் அடிப்படை அமைதிதான். அமைதியான சூழலில்தான் தொழில் வளர்ச்சியாக இருந்தாலும், சமூக முன்னேற்றமாக இருந்தாலும் அது ஏற்படும்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு தமிழகத்தை நோக்கிப் புதிய புதிய தொழிற்சாலைகள் வருகின்றன என்றால், தமிழகம் அமைதிப்பூங்காவாக இருக்கிற காரணத்தால்தான். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகிறது என்றால், தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சி நடைபெறுவதால்தான். அத்தகைய அமைதிச் சூழலைக் காக்க வேண்டும். அதற்குக் குந்தகம் ஏற்படுத்தக்கூடிய சிறு சம்பவமும் நடைபெறக் கூடாது என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்த நான் விரும்புகிறேன்.

மக்களைக் காக்கும் கடமை காவலர்களாகிய உங்களுக்கு இருக்கிறது. அதேபோல், காவலர்களாகிய உங்களைக் காக்கக்கூடிய கடமை அரசுக்கும் இருக்கிறது. அதை மனதில் வைத்து ஏராளமான திட்டங்களைக் கடந்த ஓராண்டுக் காலத்தில் தீட்டி இருக்கிறோம்.

★ காவலர் முதல் தலைமைக் காவலர் வரை ஒரு நாள் கட்டாய வார விடுமுறை அறிவிக்கப்பட்டது.

★ சிறப்பு உதவி ஆய்வாளர், உதவி ஆய்வாளர்களுக்கு இரு வாரத்துக்கு ஒரு நாள் விடுமுறை அறிவிக்கப்பட்டது.

★ காவலர்களுக்குக் கொரோனா கால ஊக்கத் தொகையாக ரூ.5 ஆயிரம் வழங்கப்பட்டது.

★ காவலர்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட இடர்ப்படியானது ரூ.800லிருந்து ரூ.1,000ஆக உயர்த்தப்பட்டது.

★ 2,212 காவலர்களுக்கான சிறுதண்டனை குறைக்கப்பட்டது.

★ 1,132 பேருக்குக் கருணை அடிப்படையிலான காவல்நிலைய வரவேற்பாளர் பணி வழங்கப்பட்டது.

★ தாம்பரம், ஆவடியில் புதிய காவல் ஆணையரகங்கள் அமைக்கப்பட்டது.

★ காவல்துறையில் கட்டப்படும் வீடுகளின் பரப்பளவு 750 சதுர அடியாக அதிகரிக்கப்பட்டது.

★ 1.20 இலட்சம் காவல் ஆளினர்களுக்கு ரூ.10 கோடி செலவில் சென்னை அண்ணா மேலாண்மை மையத்தின் மூலமாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

★ சென்னை காவல் சிறப்புப் பிரிவுகளில் பணிபுரிவோர்க்கு உணவுப்படி வழங்கப்படுகிறது.

★ திட்டமிட்ட குற்ற நுண்ணறிவுப் பிரிவு ஆளினர்களுக்கு 5 விழுக்காடு சிறப்பு ஊதியம் அளிக்கப்படுகிறது.





★ தீயணைப்புத்துறை மற்றும் சிறைத்துறைப் பணியாளர்களுக்குக் காவல்துறை மருத்துவமனைகளில் மருத்துவ வசதி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

★ இவை அனைத்துக்கும் மேலாகப் புதிய காவல் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆணையத்தின் அறிக்கை கிடைத்த பிறகு காவல் துறையினரது கோரிக்கைகள் அரசால் பரிசீலனை செய்யப்பட்டு, அவை படிப்படியாக நிறைவேற்றித் தரப்படும் என்ற உறுதியை இந்த நிகழ்ச்சியின் மூலமாக அறிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவை மட்டுமின்றி, இந்த நிகழ்ச்சியில் மற்றுமொரு மகிழ்ச்சியான அறிவிப்பை வெளியிடுகிறேன்.

வீர தீரச் செயல் புரிந்த காவல் அதிகாரிகள், காவலர்கள் அல்லது வீர மரணம் அடைந்தவர்களின் குடும்பங்களுக்குத் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுவரும் முதலமைச்சரின் வீரப்பதக்கங்களுக்கான ஊக்கத் தொகை மற்றும் சலுகைகள், ஒன்றிய அரசு வழங்கக்கூடிய, குடியரசுத் தலைவர் வீரப் பதக்கத்திற்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை மற்றும் சலுகைகளுக்கு இணையாக வழங்கப்படும்.

காவலர்களது நலனை அரசு கண்ணும் கருத்துமாகப் பேணிக் காப்பாற்றும். மக்களின் நலனைக் காவலர்களாகிய நீங்கள்தான் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டு, பதக்கம் பெற்றவர்கள் அனைவரையும் மீண்டும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

# ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட திருக்கோயில் சொத்துக்கள் விவரப் புத்தகம் வெளியீடு

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 17.05.2022 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட திருக்கோயில் சொத்துக்கள் விவரம் அடங்கிய புத்தகத்தை வெளியிட, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் பெற்றுக் கொண்டார்.

நமது பண்பாட்டுச் சின்னங்களாக விளங்கும் தமிழகத் திருக்கோயில்களின் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட சொத்துக்களில் முதன்முதலாகச் சென்னை வடபழனி அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ.250 கோடி மதிப்பிலான சொத்துக்கள் 06.06.2021 அன்று மீட்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் உள்ள திருக்கோயில்களின் சொத்துக்கள் வெகு விரைவாக மீட்கப்பட்டு வருகின்றன. 07.05.2021 முதல் 31.03.2022 வரை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட திருக்கோயில் சொத்துக்களின் விவரம், திருக்கோயில் நிலங்கள் அளவீடு செய்யும் பணிகள், ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட நிலம், மனை, கட்டடம், திருக்குளம் விவரங்கள் ஆகியவை தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் திருக்கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாக்க இந்நூல் அடிப்படை ஆதாரமாக விளங்கும்.

மீட்கப்பட்ட சொத்துக்கள் ரோவர் கருவிகள் மூலம் அளவீடு செய்யப்பட்டு HRCE என்ற பெயர் பொறிக்கப்பட்ட கற்கள் நடப்பட்டு வேலி அமைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

திருக்கோயில்கள் நீடித்து நிலைபெறத்தக்க வழிபாட்டுத் தலங்களாகவும், பல்லாண்டுகளாக இறை அன்பர்களுக்குப் பல்வேறு வசதிகளைச் செய்துத்தருவதற்கு வாய்ப்பான இடங்களாகவும், இருந்து வருவதற்கு இச்சொத்துக்களே காரணமாக விளங்கி வருகின்றன.





# தஞ்சாவூர் பீமனோடை வடிகால் தூர்வாரும் பணிகள்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.05.2022 அன்று தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுக்கா, வடபாதி கொக்கேரி கிராமத்தில் பீமனோடை வடிகால் நெடுகையில் ரூ.14.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேட்டூர் அணை கட்டப்பட்ட நாள் முதல் குறுவைச் சாகுபடிக்கு வழக்கமான தண்ணீர் திறக்கும் நாளான ஜூன் 12ஆம் தேதிக்கு முன்னதாக முதன்முறையாக மே 24இல் குறுவைப் பாசனத்திற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தண்ணீர் திறந்துவைத்தார். நாடு சுதந்திரம் பெற்ற பின் மே மாதத்தில் தண்ணீர் திறந்து விடப்படுவது இதுவே முதன்முறையாகும்.

மேட்டூர் அணையிலிருந்து முன்னதாக தண்ணீர் திறந்துவிடப்படுவதால் டெல்டா பாசனப் பகுதிகளில் வழக்கத்தைவிடக் குறுவைச் சாகுபடி பரப்பும், உற்பத்தியும் அதிகரிப்பதோடு, எதிர்வரும் சம்பாச் சாகுபடி பணிகளை முன்னதாகத் தொடங்கிச் செயல்படுத்துவதற்கும் வழிவகுக்கும்.

இந்த ஆண்டு 10 டெல்டா மாவட்டங்களில் ரூ.80 கோடி மதிப்பீட்டில் 4,964 கி.மீ. தூரத்திற்குத் தூர்வாருவதற்கானப் பணிகளை விவசாய குழுக்களோடு இணைந்து வெளிப்படைத் தன்மையோடு பருவமழைக்கு முன்னதாகவே செய்து முடித்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.21 கோடி மதிப்பீட்டில் 170 தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுக்கா, வடபாதி கொக்கேரி கிராமத்தில் பீமனோடை வடிகால் நெடுகையில் 0 கி.மீ. முதல் 4.50 கி.மீ. வரை மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பீமனோடை வடிகாலானது வடவாறு வாய்க்காலின் வலதுகரையில் 24.930 கி.மீ. பிரிந்து 15 வரை செல்கிறது. இது சுமார் 315 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் அளிக்கிறது. பீமனோடை வடிகாலானது திட்டுக்களும், காட்டாமணக்கு கோரை போன்ற செடிகளும் முளைத்துத் தண்ணீர் செல்லும் பாதையை அடைத்த நிலையிலிருந்தது. இதனால் பாசனக் காலங்களில் தண்ணீர் கடைமடை வரை சென்று சேர்வதற்கும், வெள்ள காலங்களில் தண்ணீர் வடிவதற்கும் மிகவும் கடினமாக இருந்தது. எனவே, ரூ.14.50 இலட்சம் செலவில் பீமனோடை வடிகாலில் செடிகளை அகற்றித் தூர்வாரப்பட்டுள்ளது. இதன்மூலம் வடபாதி கொக்கேரி, சிக்கப்பட்டு, கருப்பமுதலியார்கோட்டை, சேனாப்பேட்டை, கீழப்பட்டு ஆகிய கிராமங்கள் பயன்பெறும். ●





# 'மகசூல் பெருக்கம் - மகிழும் விவசாயி'

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 31.05.2022 அன்று காவிரி டெல்டா மாவட்டங்களான நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மேலும், விவசாயிகளைச் சந்தித்து அவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் சிறப்பு தூர்வாரும் திட்டத்தின் மூலம் பாசன ஆறுகள், வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களைத் தூர்வாருவதற்கு ரூ.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுத் தமிழ்நாடு அரசால் அரசாணை வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில் திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்களில் 4,964.11 கிலோ மீட்டர் நீளத்திற்கு 683 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 916 இயந்திரங்களைக் கொண்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

இப்பணிகளைத் தற்போது பணிபுரியும் செயற்பொறியாளர்களோடு கூடுதலாகப் பிறவட்டம் மற்றும் கோட்டங்களிலிருந்து பொறியாளர்களும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

தூர்வாரும் பணிகள் நடைபெற்ற பாசனப் பகுதிகளில் தினந்தோறும் பணிகளை மேற்பார்வையிட ஒவ்வொரு பணிக்கும் விவசாயப் பிரதிநிதிகள், கிராம நிருவாக அலுவலர், உதவி மேலாண்மை அலுவலர், பஞ்சாயத்துச் செயலர் மற்றும் நீர்வளத்துறை உதவிப்பொறியாளர் அடங்கிய உழவர்குழு அமைக்கப்பட்டுப் பணிகள் செவ்வனே முடிக்கப்பட்டன.

தூர்வாரும் பணிகள் சீரிய முறையில் நடைபெறத் தமிழ்நாடு அரசின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலர் நியமிக்கப்பட்டு 100 சதவிகித பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்ட நிலையில், மேட்டூரிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் விரைவில் கடைமடை வரை பாசனத்திற்குச் சென்றடைய உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளால் நிலத்தடி நீர்மட்டமும் உயரும்.

மேட்டூர் அணை கட்டப்பட்ட நாள் முதல் குறுவைச் சாகுபடிக்கு வழக்கமான தண்ணீர் திறக்கும் நாளான ஜூன் 12ஆம் தேதிக்கு முன்னதாக முதன்முறையாக மே 24இல் குறுவைப் பாசனத்திற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தண்ணீர் திறந்து வைத்தார். காவிரி டெல்டா மாவட்டங்களில் தூர்வாரும் பணிகளும் தமிழ்நாடு அரசின் வாயிலாகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளதால், டெல்டா மாவட்டங்களில் கடந்த ஆண்டைவிடக் குறுவையில் 5.20 இலட்சம் ஏக்கரும், சம்பாவில் 13.5 இலட்சம் ஏக்கரும் சாகுபடி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சம்பா சாகுபடிக்கான முன்னேற்பாட்டுப் பணிகள் முன்கூட்டியே துவக்கப்படுவதால் வடகிழக்குப் பருவமழை காலத்தில் சம்பாப் பயிர்கள் வெள்ள நீரில் மூழ்காமல் காக்கப்படுவதோடு, நிலத்தடி நீர்மட்டமும் உயர்வதால் கோடைப் பயிர் வகைகள், அதிக அளவில் சாகுபடி செய்ய இயலும். இது விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

### நாகப்பட்டினம் மாவட்டம் – தூர்வாரும் பணிகள்

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், கருவேலங்கடை மற்றும் கல்லார் கிராமம், கல்லார் வடிகாலில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் 3.50 கி.மீ. நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதனால் சுமார் 1,500 ஏக்கர் வடிகால் வசதி பெறும். மேலும், இதன்மூலம் கருவேலங்கடை, குறிச்சி ஆகிய கிராமங்கள் பயன்பெறுகின்றன. அதனைத் தொடர்ந்து, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ்ப் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

### மயிலாடுதுறை மாவட்டம்

### நேரடி நெல் விதைப்பு மற்றும் நெல் இயந்திர நடவு

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் வட்டம், அனந்தமங்கலம் கிராமத்தில், உருளும் விதைப்புக் கருவி மூலம் நேரடி நெல் விதைப்புச் செய்யும் பணியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.



மயிலாடுதுறை – அனந்தமங்கலம்



மயிலாடுதுறை – திருக்கடையூர் கிராமம்



திருவாரூர் – கொத்தங்குடி கிராமம்



மயிலாடுதுறை – நல்லாடை கிராமம்

விவசாயிகள் நேரடி நெல் விதைப்பின் மூலம் நெல் சாகுபடி மேற்கொள்வதால் விதையளவு குறைவதுடன், நாற்றங்கால் செலவு மற்றும் நடவுச் செலவு குறைந்து, அறுவடையும் 10 முதல் 15 நாட்களுக்கு முன்னதாகவே முடிய வாய்ப்புள்ளது. இதனால் வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னரே குறுவை நெல் அறுவைப் பணிகள் முடிவடைந்துவிடும்.

மேலும், நல்லாடைக் கிராமத்தில் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் பணியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

### ராமச்சந்திரன் வாய்க்கால்

மயிலாடுதுறை மாவட்டம், திருக்கடையூர் கிராமம், ராமச்சந்திரன் வாய்க்காலில் ரூ.5.65 இலட்சம் மதிப்பீட்டில் 5.60 கி.மீ. நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மஞ்சளாற்றில் வலது கரையில் 138.800 கிலோ மீட்டரில் இருந்து பிரியும் மஞ்ச வாய்க்காலின் பிரிவு வாய்க்காலான சேர்வாரி வாய்க்காலின் வலது கரையில் 1.50 கி.மீ.இல் ராமச்சந்திரன் வாய்க்காலானது பிரிந்து 5.60 கி.மீ. வரை செல்கிறது. இது சுமார் 365 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் அளிக்கிறது. இந்த வாய்க்காலின் முழுநீர் அளவு 52 கன அடி ஆகும். ராமச்சந்திரன் வாய்க்கால் தொலைதூரம் 5.60 கி.மீ. வரை திட்டுகளும், காட்டாமணக்கு, கோரை போன்ற செடிகளும் முளைத்துத் தண்ணீர் செல்லும் பாதை அடைத்துள்ள நிலையில், பாசனக் காலங்களிலும், வெள்ளக் காலங்களிலும் தண்ணீர் கடைமடை வரைசென்று சேர்வதற்கும், வெள்ள காலங்களில் தண்ணீர் வடிவதற்கு மிகவும் கடினமாக இருந்தது. இதனால் சுமார் 365 ஏக்கர் பாசன வசதி பெறும். மேலும், இதன்மூலம் திருக்கடையூர், பிள்ளைபெருமாநல்லூர் ஆகிய கிராமங்கள் பயன்பெறுகின்றன.

### திருவாரூர் மாவட்டம் – தூர்வாரும் பணிகள்

### கொத்தங்குடிக் கால்வாய்

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், கொத்தங்குடிக் கிராமம், கொத்தங்குடி வாய்க்காலில் ரூ.9.95 இலட்சம் மதிப்பீட்டில் 5 கி.மீ. நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதனால், சுமார் 232 ஏக்கர் பாசன வசதி பெறும். மேலும், இதன்மூலம் கொத்தங்குடி, கடுவங்குடி ஆகிய கிராமங்கள் பயன்பெறுகின்றன.

### பேரளம் வாய்க்கால்

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், பேரளம் கிராமம், பேரளம் வாய்க்காலில் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் 4 கி.மீ. நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதனால், சுமார் 177 ஏக்கர் பாசன வசதி பெறும். மேலும், இதன்மூலம் பேரளம் மற்றும் வீராநத்தம் கிராமங்கள் பயன்பெறுகின்றன.



கொண்டிருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காகத்தான் இரண்டு நாட்களாக டெல்டா பகுதியில் ஒரு மின்னல் வேகச் சுற்றுப் பயணத்தை நடத்தி முடித்துவிட்டு வந்திருக்கிறேன். கடந்த ஆண்டே மகசூல் பெருகிவிட்டது. அதில் விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

❖ காவிரி டெல்டா பாசன மாவட்டங்களாக இருக்கக்கூடிய தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, கடலூர், அரியலூர், திருச்சி போன்ற மாவட்டங்களில் வழக்கமாக 3.5 இலட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும்.

❖ கடந்த ஆண்டு, இந்த மாவட்டங்களைக் கடைமடை வரைக்கும் தண்ணீர் தங்குதடையின்றி செல்லக் கூடிய வகையில் ரூ.65 கோடியில் 4,061 கிலோ மீட்டர் தூரத்திற்கு அனைத்து நீர்வழித் தடங்களையும் தூர்வாரக்கூடிய வகையில் 647 பணிகளைச் செயல்படுத்தினோம்.

❖ அதனுடைய உரிய நாளாக இருக்கக்கூடிய ஜூன் 12ஆம் தேதி அன்று, மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.

❖ ரூ.61.09 கோடிக்குக் குறுவைத் தொகுப்புத் திட்டமும் செயல்படுத்தப்பட்டது.

❖ இதன் காரணமாகக் கடந்த ஆண்டு குறுவையில் 4.90 இலட்சம் ஏக்கரும், சம்பாவில் 13.34 இலட்சம் ஏக்கரும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைத் தாண்டிப் பயிர்ச் சாகுபடி மற்றும் உணவு உற்பத்தியில் சாதனை படைக்கப்பட்டது.

இதே சாதனையை, இந்த ஆண்டும் தொடர்ந்து ஏற்படுத்துவதற்கான முயற்சியில் நாங்கள் ஈடுபட்டோம்.

இந்த ஆண்டு பருவமழைக்கு முன்பே, டெல்டா மாவட்டங்களில் ரூ.80 கோடி மதிப்பீட்டில் 4,964 கிலோ மீட்டர் தூரத்திற்குத் தூர்வாருவதற்கான 683 பணிகளை விரைவாக முடிக்க நான் உத்தரவிட்டிருந்தேன்.

இதன்படி, முதற்கட்டமாக, வருவாய்த்துறையின் ஒத்துழைப்போடு அனைத்து நீர்நிலைகளின் எல்லைகளும் அளக்கப்பட்டு ஆக்கிரமிப்புகள் எல்லாம் அகற்றப்பட்டு, இந்தப் பணிகள் அனைத்தும் ஏப்ரல் 23ஆம் நாள் தொடங்கப்பட்டது. தொடங்கியவுடன், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு அந்தப் பணியை அவர்களும் மேற்கொண்டார்கள். 865 கனரக இயந்திரங்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தப் பணி இன்றுடன் முழுமையடைந்து நீர்வழிப்பாதைகள் தூர்வாரக்கூடிய பணிகளை மிகச் சிறப்பாக முடித்திருக்கிறோம்.

1,580 கிலோ மீட்டர் நீளமுள்ள சி மற்றும் டி வாய்க்கால்களில் தூர்வாரும் பணிகள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பணிகளும் விரைவில் முடிக்கப்பட இருக்கிறது.

- கரூர் மாவட்டத்தில் ரூ.2.85 கோடியில் 19 பணிகளும்,
- திருச்சி மாவட்டத்தில் ரூ.18.75 கோடியில் 90 பணிகளும்,

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்கள் கூட்டத்தில் ஆற்றிய உரை

கடந்த இரண்டு நாட்களாகக் காவிரி பாயக்கூடிய டெல்டா மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்துள்ளேன். எதற்காக இந்தச் சுற்றுப்பயணம் என்றால், நீர் ஆதாரப் பணிகளைப் பார்வையிட்டு, அதைத் துரிதப்படுத்த வேண்டும், முறைப்படுத்த வேண்டும் என்பதற்காக இந்தப் பயணத்தை நான் மேற்கொண்டேன். இந்தப் பயணத்தைப் பொறுத்தவரைக்கும் மகிழ்ச்சியாக, மனநிறைவு தரக்கூடிய வகையில் இந்தப் பயணம் அமைந்துள்ளது. அதையொட்டி, உங்களைச் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு, இதே திருச்சியில் ஒரு மாநில மாநாடு போல் நடைபெற்ற ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டு ஏழு உறுதிமொழிகளை அறிவித்ததை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

1. வளரும் வாய்ப்புகள் – வளமான தமிழ்நாடு!
2. மகசூல் பெருக்கம், மகிழும் விவசாயி!
3. குடிமக்கள் அனைவருக்கும் குறையாத தண்ணீர்!
4. அனைவருக்கும் உயர்தரக் கல்வி மற்றும் உயர்தர மருத்துவம்!
5. எழில்மிகு மாநகரங்களின் மாநிலம்!
6. உயர்தர ஊரகக் கட்டமைப்பு, உயர்ந்த வாழ்க்கைத் தரம்!
7. அனைவருக்கும் அனைத்துமான தமிழகம்!

இந்த ஏழு பிரகடனத்தை நான் அந்தக் கூட்டத்தில் அறிவித்தேன்.

கடந்த ஒரு வருட காலத்தில் நம்முடைய தமிழக அரசு முன்னெடுத்திருக்கக்கூடிய திட்டங்கள் இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதை நீங்கள் யாரும் மறுக்க மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்.

அந்த வகையில் 'மகசூல் பெருக்கம் – மகிழும் விவசாயி' என்ற வாக்குறுதி அது எப்படி நிறைவேறிக்



- பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.2.48 கோடியில் 40 பணிகளும்,
- அரியலூர் மாவட்டத்தில் ரூ.1 கோடியில் 16 பணிகளும்,
- புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.1.10 கோடியில் 20 பணிகளும்,
- தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.21 கோடியில் 170 பணிகளும்,
- திருவாரூர் மாவட்டத்தில் ரூ.12 கோடியில் 115 பணிகளும்,
- நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.3.46 கோடியில் 30 பணிகளும்,
- மயிலாடுதுறை மாவட்டத்தில் ரூ.8.70 கோடியில் 49 பணிகளும்,
- கடலூர் மாவட்டத்தில் ரூ.8.50 கோடியில் 134 பணிகளும்,

என மொத்தம் 4,418 கிலோ மீட்டர் தூரத்திற்கு முடிக்கப்பட்டிருக்கிறது.

குறுவைச் சாகுபடிக்கு வழக்கமாக, மேட்டூர் அணையில் இருந்து நீர் திறந்து விடப்படக்கூடிய நாள் என்பது ஜூன் 12ஆம் தேதி, எல்லோருக்கும் தெரியும். ஆனால் 12ஆம் தேதிக்கு முன்பே, அதாவது மே மாதம் 24ஆம் தேதியே நீர் திறந்து விடப்பட்டதும் உங்களுக்குத் தெரியும். சுதந்திர இந்தியாவில், மே மாதத்தில் மேட்டூர் அணை திறந்து விடப்பட்ட வரலாறு இதுவரையில் கிடையாது. இதுதான் முதல் முறை. இந்த வரலாற்றுச் சாதனையானது இந்த ஆண்டிற்குத்தான் நிகழ்ந்திருக்கிறது.

இதனால், டெல்டா மாவட்டங்களில் கடந்த ஆண்டை விடக் குறுவையில் 5.20 இலட்சம் ஏக்கரும், சம்பாவில் 13.5 இலட்சம் ஏக்கரும் எனச் சாகுபடி பரப்பு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சம்பா சாகுபடிக்கான முன்னேற்பாடுகளும் முன்கூட்டியே துவக்கப்படுவதால், வடகிழக்குப் பருவமழைக் காலத்தில், சம்பா பயிர்கள் வெள்ளநீரில் மூழ்காமல் காக்கப்படும். மேலும், நிலத்தடி நீர்மட்டம் உயர்வதால், கோடைப் பயிர் வகைகளையும் அதிக அளவில் சாகுபடி செய்வதற்கான வாய்ப்பும் ஏற்படும். இன்றைய தேதியில் 1,56,352 ஏக்கர் அளவில் குறுவைச் சாகுபடியில் நெல் பயிரிடப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டினுடைய நிதிநிலைமைப் பற்றி உங்களுக்கேத் தெரியும். ஆனாலும், உழவர் பெருமக்களுக்கான உதவிகளைச் செய்வதில் என்றைக்கும் தி.மு.க. அரசு பின் வாங்கியது கிடையாது.

❖ வேளாண் பெருமக்களின் நலன் கருதி, இந்த ஆண்டும் ரூ.61 கோடி மதிப்பிலான குறுவைத் தொகுப்பு வழங்கக்கூடிய திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை உங்கள் மூலமாக உழவர் பெருமக்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் மூலம் 3 இலட்சம் உழவர்கள் பயன்பெறுவார்கள்.

❖ வேளாண் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு, 1.90 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு யூரியா, டிஏபி, பொட்டாஷ் ஆகிய உரங்கள் அடங்கியத் தொகுப்பு ரூ.47 கோடி ஒதுக்கீட்டில் முழு மானிய விலையில் வழங்கப்படும்.

❖ வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் 2,400 மெட்ரிக் டன் நெல் விதைகள் 50 விழுக்காடு மானியத்தில் ரூ.4.20 கோடியில் வழங்கப்படும்.

❖ வேளாண் பொறியியல் துறை மூலம் டிராக்டர் உள்ளிட்ட 237 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் 50 விழுக்காடு மானியத்தில் ரூ.6.06 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

இதன்மூலமாக, கடந்த ஆண்டு சாதனையானது இந்த ஆண்டும் தொடரப் போகிறது. அதைவிடக் கூடுதல் பயனை அடைவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

முன்கூட்டியே திறந்து விடப்பட்டுள்ள காவிரி நீரை முறையாகப் பயன்படுத்தியும், தமிழ்நாடு அரசு அறிவித்துச் செயல்படுத்தும் பல்வேறு உழவர் நலத்திட்டங்களையும் பயன்படுத்தியும், நெல் உற்பத்தியில் புதியதொரு சாதனையை இந்த ஆண்டும் டெல்டா உழவர்கள் படைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் வேண்டி, விரும்பி நான் கேட்டுக் கொள்கிறேன்.






# ரூ.500 கோடியில் சிங்காரச் சென்னை 2.0 திட்டம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 02.06.2022 அன்று சென்னை, பெருநகரச் சென்னை மாநகராட்சியின் ரிப்பன் கட்டடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ.1.81 கோடி மதிப்பீட்டில் நிறம் மாறும் வண்ண விளக்குகளால் ஒளிரூட்டப்பட்ட ரிப்பன் கட்டடத்தைப் பொதுமக்களின் பார்வைக்காக அர்ப்பணித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை மாநகர மேயராகப் பதவி வகித்தபோது, சென்னை மாநகரைச் சர்வதேச நகரங்களுக்கு இணையாகக் கட்டமைக்கச் சிங்காரச் சென்னை என்ற திட்டத்தைத் தொடங்கிவைத்தார். இத்திட்டத்தின்கீழ், மேம்பாலங்கள், சிறிய பாலங்கள், பூங்காக்கள், நீரூற்றுகள், கடற்கரைகள் அழகுபடுத்துதல், சாலை விரிவாக்கம் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை மாநகராட்சியுடன் 2011ஆம் ஆண்டு 42 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து மாநகர எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டு 426 சதுர கி.மீ. பரப்பளவுள்ள பெருநகரச் சென்னை மாநகராட்சியாக விரிவுபடுத்தப்பட்டது. பெருநகரச் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் சரியான முன்னேற்றம் இல்லாததால் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தவும் சிங்காரச் சென்னை 2.0 திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

இதன்தொடர்ச்சியாக, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 2021–2022ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில், பெருநகரச் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தச் சிங்காரச் சென்னை 2.0 என்னும் புதிய திட்டம் இவ்வரசால் தீட்டப்பட்டு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், சென்னை மாநகராட்சிப் பள்ளிகளின் கட்டமைப்புகளை நவீன வசதிகளுடன் மேம்படுத்துதல், வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்களைப் புதுப்பித்துப் பராமரித்தல், மாநகரின் பசுமைப் பரப்பளவை அதிகரிக்கும் வகையில் புதிய பூங்காக்களை ஏற்படுத்துதல் மற்றும் சாலையோரங்களிலும், சாலை மையத் தடுப்புகளிலும் பசுமைப்படுத்துதல், மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதைகளில் செங்குத்துப் பூங்கா மற்றும் வண்ண மின்விளக்குகளால் அலங்கரித்தல், கடற்கரைப் பகுதிகளை மேம்படுத்தி பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளும் பயனடையும் வகையில் நவீனப்படுத்துதல், நீர்நிலைகளைப் புனரமைத்து மேம்படுத்துதல், ஒருங்கிணைந்த விளையாட்டுத்திடல் அமைத்தல், பொதுக் கழிப்பிடங்களைப் புதுப்பித்துப் பராமரித்தல் போன்ற பல்வேறு திட்டப்பணிகளைச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021–2022ஆம் ஆண்டில் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ்ப் பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.409.19 கோடி மதிப்பில் 183 திட்டப் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதனடிப்படையில், பாரம்பரியமிக்க புராதனக் கட்டடமான பெருநகரச் சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டடம் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ.1.81 கோடி மதிப்பீட்டில் நிறம் மாறும் வண்ண விளக்குகளால் ஒளிரூட்டப்பட்டுள்ளது. இதன்மூலம், அடிப்படை வண்ணங்களான சிவப்பு, பச்சை,

நீலம் ஆகிய மூன்று நிறங்களைச் சேர்த்து அவற்றின் மூலம் பல வண்ணங்களை உருவாக்கி தினந்தோறும் ஒளிரூட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பணி நிறைவேற்றப்பட்டதன் மூலம், குடியரசு தினம், சுதந்திரத் தினங்களில் ரிப்பன் கட்டட முகப்பானது மூவர்ண விளக்குகளாலும், உலக மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வுத் தினத்தன்று (Breast Cancer Awareness) இளஞ்சிவப்பு நிறத்திலும், உலகத் தண்டுவட மரப்பு நோய் விழிப்புணர்வுத் தினத்தன்று (World Multiple Sclerosis Day) ஆரஞ்சு நிறத்திலும், உலக மனநலிவு நோய் விழிப்புணர்வு தினத்தன்று (World Down Syndrome Day) நீல நிறத்திலும் ஒளிரூட்டப்பட்டுப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகரங்களைத் தூய்மையாகப் பராமரிக்கும் வகையில் மாதந்தோறும் வாரத்தின் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் தீவிரத் தூய்மைப் பணியை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார். அதனடிப்படையில், மாதந்தோறும் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் மாநகரைத் தூய்மையாகப் பராமரிக்கப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ரிப்பன் கட்டடமானது வெள்ளை நிற விளக்குகளால் ஒளிரூட்டப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியின்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சியின் சார்பில் கடந்த ஓராண்டில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி மற்றும் திட்டப் பணிகள் குறித்த விவரங்கள் அடங்கிய ஓர் ஆண்டு சாதனை மலரை வெளியிட்டார்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை :**

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

மாநகராட்சி கட்டடமான இந்த ரிப்பன் கட்டடம் காலையில் வெள்ளை நிறக் கட்டடமாகத் தோன்றினாலும், மாலையிலே வண்ண விளக்குகளால் ஜொலிக்கக்கூடிய ஒரு சிறப்பான ஏற்பாட்டைச் செய்து இந்த நிகழ்ச்சியில் தொடங்கி வைக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பை எனக்கு வழங்கியமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாநகராட்சி ரிப்பன் கட்டடமானது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கக் கட்டடம் ஆகும். இதுபோன்ற கட்டடங்களை எல்லாம் நான் பள்ளிக்கூடத்திலே மாணவனாகப் படித்துக் கொண்டிருக்கின்றபோது அந்தப் பள்ளியிலிருந்து சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்வார்கள். அப்படி அழைத்துச் செல்லும்போது சென்னையிலுள்ள முக்கியமான இடங்களான அடையாறு ஆலமரம், அருங்காட்சியகம், உயிரியல் பூங்கா, காந்தி மண்டபம், ரிப்பன் கட்டடம், விக்டோரியா மகால் போன்ற கட்டடங்களுக்கு எல்லாம் அழைத்துச் செல்லப்பட்டு அவற்றை எல்லாம் சுற்றிச் சுற்றி வந்து வேடிக்கை பார்த்திருக்கிறேன். அப்படி வேடிக்கை பார்த்தவன் இன்றைக்கு இந்த கட்டடத்தை விளக்கொரிய வைக்கக்கூடிய வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டு இருக்கிறது என்றால் உள்ளபடியே நான் பெருமைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, **1996**ஆம் ஆண்டு நாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபோது நம்முடைய தலைவரிடத்திலே நம்முடைய கழக முன்னோடிகள் அத்தனைப்பேரும் சென்று, இந்தமுறை அமைச்சரவையில் ஸ்டாலினுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று போராடினார்கள். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் எனக்கு அந்த வாய்ப்பைத் தரவில்லை. அதற்குப்பிறகு ஆட்சி அமைந்து, அமைச்சரவை அமைக்கப்பட்ட பிறகு, நீண்ட காலமாக நடைபெறாமல் இருந்த இந்த மாநகராட்சியினுடைய தேர்தலை நாம் நடத்தினோம். அப்படி நடத்தியபோது மேயர் வேட்பாளராக அதுவும் மக்களால் முதல்முறையாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய மேயராக நான் வரவேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் முடிவு செய்து, என்னை வேட்பாளராக நிறுத்தினார்கள். நாம் வெற்றி பெற்றோம். வெற்றி பெற்றதற்குப் பிறகு இந்த மாநகராட்சியில் பதவியேற்பதற்கான நாள் குறிக்கப்பட்டு, அதற்கான விழா ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

அதற்குரிய அழைப்பிதழைத் தலைவர் இடத்தில் நாங்கள் எல்லாம் சென்று காண்பித்தோம். அப்போது, அந்த அழைப்பிதழின் பின் அட்டையில் ரிப்பன் மாளிகையின் படம் இருந்தது. அதனைத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒருமுறைக்கு இருமுறை பார்த்தார். ரிப்பன் கட்டடத்தை உற்றுஉற்றுப் பார்த்துக் கொண்டு இருந்தார். அப்பொழுது அருகிலிருந்து மூத்தக் கழக முன்னோடிகள் மற்றும் அமைச்சர்களிடத்தில், தலைவர் அவர்கள், எல்லோரும் ஸ்டாலினை அமைச்சராக்கி ஒரு அறையில் கொண்டு போய் உட்கார வைக்கப் பார்த்தீர்கள். ஆனால் இப்போது அவரை மேயராக்கி இவ்வளவு பெரிய கட்டடத்தில் உட்கார வைத்திருக்கிறேன் என்று பெருமையாகச் சொன்னார். அதுதான் என் நினைவிற்கு வருகிறது. நான் அடிக்கடி இந்த வழியாகப் போகும்போதெல்லாம், இந்தக் கட்டடத்தைப் பார்த்து அவர் சொன்னதைத்தான் நினைத்துக் கொண்டு இருப்பேன்.

அந்தக் கட்டடத்தை எல்லோரும் பாராட்டக்கூடிய வகையிலே, இதற்கு மெருகூட்டுகின்ற வகையிலே வண்ண வண்ண விளக்குகளால் அமைத்து ஒரு சிறப்பான ஏற்பாட்டைச் செய்திருக்கக்கூடிய மேயர் அவர்களுக்கும், துணை மேயர் அவர்களுக்கும், அதேபோல இந்தத் துறையினுடைய செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும் என்னுடைய இதயப்பூர்வமான வணக்கத்தையும், வாழ்த்துக்களையும், நன்றியும் தெரிவித்து, உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய வாய்ப்பை பெற்றமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

# கனவு இல்லத் திட்டத்தில்
# எழுத்தாளர்களுக்கு வீடு





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கடந்த 03.06.2021 அன்று, "தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்களில் ஞானபீடம், சாகித்ய அகாதமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள், புகழ்பெற்ற உலகளாவிய அமைப்புகளின் விருதுகளைப் பெற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் அல்லது விரும்பும் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு மூலமாக வீடு வழங்கப்படும்" என்று கனவு இல்லத் திட்டத்தை அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான 03.06.2022 அன்று கனவு இல்லத் திட்டத்தின்கீழ், 2004ஆம் ஆண்டு "வணக்கம் வள்ளுவ" எனும் கவிதை நூலிற்காகச் சாகித்ய அகாதமி விருது மற்றும் 2018ஆம் ஆண்டு கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதினையும் பெற்ற திரு. ந.செகதீசன் என்கிற ஈரோடு தமிழன்பன் அவர்களுக்கும்,

2009ஆம் ஆண்டில் "கையொப்பம்" எனும் கவிதை நூலிற்காகச் சாகித்ய அகாதமி விருது பெற்ற கவிஞர் புவியரசு என்கிற சு.ஜகன்னாதன் அவர்களுக்கும், தமிழ் இலக்கியப் பணிகளுக்காக 2012ஆம் ஆண்டு கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது பெற்ற முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்களுக்கும்,

2014ஆம் ஆண்டு "அஞ்ஞாடி" எனும் புதினத்திற்காகச் சாகித்ய அகாதமி விருது பெற்ற திரு.பூமணி என்கிற பூ.மாணிக்கவாசகம் அவர்களுக்கும்,

தமிழ் இலக்கியப் பணிகளுக்காக 2014ஆம் ஆண்டு கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது பெற்ற முனைவர் கு.மோகனராசு அவர்களுக்கும், 2020ஆம் ஆண்டு "செல்லாத பணம்" எனும் புதினத்திற்காகச் சாகித்ய அகாதமி விருது பெற்ற திரு.இமையம் என்கிற வெ.அண்ணாமலை அவர்களுக்கும் என ஆறு எழுத்தாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் அடுக்குமாடிக் குடியிருப்பில், குடியிருப்புக்கான ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார்.

# கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.06.2022 அன்று, கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதும், விருதிற்கான பரிசுத் தொகையான ரூ.10 இலட்சத்திற்கான காசோலையினையும் புகழ்பெற்ற வசனகர்த்தா திரு. ஆரூர்தாஸ் அவர்களுக்குச் சென்னை, தியாகராய நகரில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று வழங்கிச் சிறப்பித்தார்.



# கலைஞர் எழுதுகோல் விருது



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.06.2022 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் மூத்த பத்திரிகையாளர் திரு. ஐ.சண்முகநாதன் அவர்களுக்குக் கலைஞர் எழுதுகோல் விருதினையும், விருதிற்கான ரூ.5 இலட்சத்திற்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கிச் சிறப்பித்தார்.




# ‘நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம்’

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.06.2022 அன்று சென்னை, இராயபுரம், தங்கசாலையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் “நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம்” – தீவிரத் தூய்மைப் பணி மற்றும் விழிப்புணர்வு முகாம்களைத் தொடங்கி வைத்தார்.

### நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, 2022–2023ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கையில், சுத்தமான, பசுமையான மற்றும் நீடித்த சுற்றுச்சூழலை உறுதிசெய்யும் பொருட்டு நகரங்களில் பெருமளவிலான மக்கள் பங்கேற்புடன், ஒவ்வொரு மாதமும் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் தீவிரத் தூய்மைப் பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் (Cleanliness drive) நடத்த “நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் (People’s Movement for Clean Cities)” தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்தத் தீவிரத் தூய்மைப் பணி மற்றும் விழிப்புணர்வு முகாம்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், குடியிருப்போர் நலச்சங்கங்கள், தேசியச் சமுதாய நலப்பணி மற்றும் தேசியப் பசுமைப் படையைச் சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

பெருநகரச் சென்னை மாநகராட்சி உட்பட 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் ஆகிய பகுதிகளில் இரண்டாவது சனிக்கிழமைகளில் மிகப்பெரிய அளவில் இத்தூய்மைப் பணி மேற்கொள்ளப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பிரபலங்களைக் கொண்டு, மக்களுக்குத் தூய்மையின் அவசியத்தைப் பற்றி வலியுறுத்தும் விதமாகப் பூங்காக்களில் கூட்டங்கள் நடத்திடவும், அவர்களைக் கொண்டு தூய்மை மற்றும் சுத்தம் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கவும், மஞ்சப்பையின் அவசியத்தை உணர்த்த மஞ்சப்பைகளைப் பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### விழிப்புணர்வுப் பிரச்சாரம்

பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட இராயபுரம் மண்டலம், தங்கசாலை மேம்பாலப் பூங்கா அருகில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று “நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம்” – தீவிரத் தூய்மைப் பணியினைத் தொடங்கிவைத்தார். அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாணவ, மாணவியர்கள் மாநகராட்சிப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் நகரங்களின் தூய்மை குறித்த உறுதிமொழியை ஏற்றனர்.

தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பசுமையான சுற்றுச் சூழலை ஏற்படுத்தும் வகையில் தங்கசாலை மேம்பாலத்திற்குக்கீழ் உள்ள இடத்தில் நகர்ப்புற அடர்வனம் அமைப்பதைத் தொடங்கும் விதமாக மரக்கன்றுகளை நட்டார். பின்னர், விழிப்புணர்வு ஊர்வலத்தைக் கொடியசைத்துத் தொடங்கிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தீவிரத் தூய்மைப் பணி மற்றும் இல்லங்களில் குப்பைகளை மக்கும், மக்காத குப்பைகளாகப் பிரித்துத் தூய்மைப் பணியாளர்களிடம் வழங்குவது குறித்த விழிப்புணர்வைப் பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் விதமாக, விழிப்புணர்வுப் பதாகைகளை ஏந்தி, மாணவ மாணவியர்களுடன் பெருநகரச் சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், பாஷ்யகாரலு தெருவில் உள்ள குடியிருப்புப் பகுதிகளுக்கு நடந்து சென்று விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களைப் பொதுமக்களுக்கு வழங்கினார். ●





## கடல்வழி எம்பிரஸ் சொகுசுக் கப்பல் சுற்றுலாப் பயணம் தொடக்கம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 04.06.2022 அன்று சென்னை துறைமுகத்தில், கார்டிலியா குருசஸ் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கடல்வழி எம்பிரஸ் சொகுசுக் கப்பல் சுற்றுலாப் பயணத்தைத் தொடங்கி வைக்கும் விதமாக அதற்கான கேடயத்தினைக் கப்பல் கேப்டன் திரு. டேனிஸ் கொரூப் அவர்களிடம் வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 04.06.2022 அன்று சென்னைத் துறைமுகத்தில், கார்டிலியா குருசஸ் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கடல்வழி எம்பிரஸ் சொகுசுக் கப்பல் சுற்றுலாப் பயணக் கப்பலினைப் பார்வையிட்டார்.






**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 04.06.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலர்களின் பயன்பாட்டிற்காக ரூ.3.42 கோடி மதிப்பீட்டிலான 25 மின் வாகனங்களைக் கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். மேலும், உலகச் சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படுவதையொட்டிச் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்குச் சிறப்பான பங்களிப்பு ஆற்றியதற்காக மதுரை, விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர்களுக்குப் பசுமை விருது மற்றும் ஐந்து தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்களைப் பாராட்டும் வகையில் ரூ.1 இலட்சம் பரிசுத் தொகையுடன் பசுமை முதன்மையாளர் விருதுகளையும் வழங்கினார்.

மக்கள் நலமாகவும், வளமாகவும் வாழ்ந்திடத் தூய்மையான சுற்றுச்சூழல் மிகவும் அவசியமாகும். மக்கள் சார்ந்திருக்கும் நீர், காற்று மற்றும் நிலம் ஆகியவற்றைச் சீர்படுத்துவதிலும், தீவிர வானிலை மாற்ற நிகழ்வுகள் மற்றும் காலநிலை மாற்றத்திற்குரிய தாக்கங்களைக் குறைப்பதிலும் சூழல் அமைப்புகள் முக்கியமான அம்சங்களாக விளங்குகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை வளங்களையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பினையும் மேம்படுத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**மாவட்ட ஆட்சியர்களுக்குப் பசுமை விருதுகள்**

மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காகச் சிறப்பாகச் செயலாற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக 2021ஆம் ஆண்டுக்கான பசுமை விருதினை மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் எஸ்.அனீஷ் சேகர், இ.ஆ.ப., விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.மோகன், இ.ஆ.ப., மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.முருகேஷ், இ.ஆ.ப., ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

**தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்களுக்குப் பசுமை முதன்மையாளர் விருதுகள்**

மாசு தடுப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறப்பாகச் செயலாற்றி விருதுக்குத் தேர்வான 79 பல்வேறு அமைப்புகளில், இராணிப்பேட்டை டேனரி எஃப்ளுயன்ட் டிரீட்மென்ட் கம்பெனி லிமிடெட், பெருந்துறை, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருப்பூர், சுலோச்சனா காட்டன் ஸ்பின்னிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், நீலகிரி மாவட்டம், கிளீன் குன்னூர் மற்றும் போரூர், அரசுப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றிற்கு 2021ஆம் ஆண்டிற்கான பசுமை முதன்மையாளர் விருதுடன், பரிசுத்தொகையாகத் தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.






# காது கேளாதோருக்கான ஒலிம்பிக் போட்டியில் பதக்கங்கள் வென்றவர்களுக்கு ஊக்கத்தொகை

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 04.06.2022 அன்று தலைமைச் செயலகத்தில், பிரேசில் நாட்டில் நடைபெற்ற 24ஆவது கோடைக்கால காது கேளாதோருக்கான ஒலிம்பிக் போட்டி 2022இல் பதக்கங்கள் வென்ற செல்வி ஜெ.ஜெர்லின் அனிகா மற்றும் திரு.பிரித்வி சேகர் ஆகியோருக்கு ரூ.1.10 கோடிக்கான காசோலைகளை ஊக்கத் தொகையாக வழங்கினார்.

பிரேசில் நாட்டில் 24ஆவது கோடைக்காலக் காது கேளாதோருக்கான ஒலிம்பிக் போட்டி–2022 கடந்த 01.05.2022 முதல் 15.05.2022 வரை நடைபெற்றது இப்போட்டியில் இந்திய அணி சார்பில் தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வி ஜெ.ஜெர்லின் அனிகா (வயது 18) இறகுப்பந்து போட்டியில் பங்கேற்று ஒற்றையர் பிரிவு, கலப்பு இரட்டையர் பிரிவு, குழுப் போட்டி ஆகியவற்றில் 3 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செல்வி ஜெ.ஜெர்லின் அனிகா அவர்களுக்கு ரூ.75 இலட்சத்திற்கான காசோலையை ஊக்கத்தொகையாக வழங்கினார்.



செல்வி ஜெ.ஜெர்லின் அனிகா, மதுரையில் உள்ள அவ்வை மாநகராட்சிப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்புப் பயின்று வருகிறார். இவர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவிக்கும் திட்டத்தின் (MISSION INTERNATIONAL MEDALS SCHEME) கீழ் ஆண்டொன்றுக்கு ரூ.10 இலட்சம் நிதியுதவி பெற்றுவரும் விளையாட்டு வீராங்கனை ஆவார்.

மேலும், இந்தப் போட்டிகளில் ஆடவருக்கான டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சார்பாகப் பங்குபெற்ற சென்னையைச் சேர்ந்த திரு. பிரித்வி சேகர் (வயது 39) இரட்டையர் பிரிவில் 1 வெள்ளிப்பதக்கமும், ஒற்றையர் பிரிவு மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவுப் போட்டிகளில் 2 வெண்கலப்பதக்கமும் என 3 பதக்கங்களை வென்றுள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரு.பிரித்வி சேகர் அவர்களுக்கு ரூ.35 இலட்சத்திற்கான காசோலையை ஊக்கத் தொகையாக வழங்கினார்.




# சிவகங்கையில் ரூ.119.68 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு அடிக்கல்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.06.2022 அன்று சிவகங்கை மாவட்டம், காரையூரில் நடைபெற்ற அரசு விழாவில், அரசின் பல்வேறு துறைகளின் சார்பில், ரூ.24.77 கோடி செலவில் 44 முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, ரூ.119.68 கோடி மதிப்பீட்டிலான 127 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 59,162 பயனாளிகளுக்கு ரூ.136.45 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

**விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.**

வீரம் விளைந்த இந்தச் சிவகங்கை மண்ணில் நடைபெறும் இந்தச் சிறப்பான விழாவில் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

யாருக்கும் அஞ்சாத முத்து வடுகநாதர், அந்த முத்து வடுகநாதர் மரணத்துக்குப் பிறகு தன்னோடு தாலியைக் காணிக்கையாக்கி, களத்தில் குதித்த வீரமங்கை தான் வேலுநாச்சியார் அவர்கள். அவர்களுக்குப் பிறகு, அவர்களுடைய மகள் வெள்ளை நாச்சியார் என்று மண்ணைக் காக்க, குடும்பம் குடும்பமாகத் தியாகம் செய்த பூமிதான், இந்தச் சிவகங்கை பூமி என்பதைப் பெருமையோடு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தியாவின் விடுதலைக்காகப் போராடுவதில் நாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்று நிரூபித்த மண்தான், இந்தச் சிவகங்கைச் சீமை!

வீரத்துக்கு – மருது சகோதரர்கள்!<br>
கவிதைக்கு – கவியரசு கண்ணதாசன்!<br>
இறையியலுக்கு – தவத்திரு குன்றக்குடி அடிகளார்!

என்று இந்தத் தமிழினத்துக்குப் பெருமதிப்புக்குரியவர்களை வாரி வழங்கிய மண், இந்த மண்! அத்தகைய சிறப்புக்குரிய இந்த மண்ணில் அரசின் சார்பிலே நிறைவேற்றப்பட்ட, நிறைவேற்றப்படவிருக்கக்கூடிய பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த மாவட்டத்தில் அமைச்சராக இருக்கக்கூடியவர் ஊரக வளர்ச்சித்துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பை ஏற்றிருக்கிறார், என்னுடைய அருமை சகோதரர் பெரியகருப்பன் அவர்கள். பெயரைப் போலவே பெரிய விழாவாக இதை நடத்திக் கொண்டிருக்கிறார்.

பெரிய செயலுக்குரியவர்,<br>
பெரிய சிறப்புக்குரியவர்,<br>
பெரிய மீசைக்குரியவர்

அந்த வகையில் என்னுடைய பாராட்டுக்குரியவர் நம்முடைய பெரியகருப்பன் அவர்கள்!

இந்தமாவட்டத்தில்மட்டுமல்ல,அவர்ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய ஊரக வளர்ச்சித்துறையில் எந்தத் திட்டமாக இருந்தாலும், அதைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து நிறைவேற்றக்கூடியவராகப் பெரியகருப்பன் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்போடு ஏற்பாடு செய்திருக்கக்கூடிய அவருக்கும், சிவகங்கை மாவட்ட நிருவாகத்திற்கும், ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், அதற்குத் துணைநின்று பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அரசு அலுவலர்கள் அனைவருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், கண்ணமங்கலப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட ‘கோட்டை வேங்கைப்பட்டி’ கிராமத்தில் இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்பாக தந்தைப் பெரியார் பெயரில் அமைந்திருக்கக்கூடிய தந்தைப் பெரியார் நினைவுச் சமத்துவபுரத்தைத் திறந்து வைத்துவிட்டு இந்த நிகழ்ச்சிக்கு வந்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நம்முடைய உள்ளத்தில் என்றைக்கும் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய கனவுத் திட்டங்களில் ஒன்றுதான் சமத்துவபுரத் திட்டம்!

‘சாதியை ஒழித்தல் ஒன்று –<br>
தமிழை வளர்த்தல் மற்றொன்று’

– என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடினார்.

இந்த அடித்தளத்தில் உருவாக்கப்பட்டதுதான் நம்முடைய திராவிட இயக்கம்!



தந்தைப் பெரியார் அவர்களின் கொள்கையினை நிலைப்படுத்தும் வகையிலும், பேரறிஞர் அண்ணாவின் கோட்பாடுகளைச் செயல்படுத்தும் விதமாகவும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய சமத்துவபுரங்கள், அந்த எண்ணத்திலேதான் சமத்துவபுரத்தை உருவாக்கி, சமூக நீதியினை நிலைநாட்டி, அனைத்துச் சமுதாய மக்களும் சாதி, மத பேதமின்றி, சமுதாயத்தில் மட்டுமல்ல, சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி ஒரே குடும்பமாக, சமத்துவமாக வாழ வேண்டும் என்று கனவு கண்டார்.

1997ஆம் ஆண்டு தந்தைப் பெரியார் அவர்களின் பெயரில் சமத்துவபுரத்தினை ஏற்படுத்தி, தமிழகம் முழுவதும் சமத்துவபுரங்களைக் கட்டி, சமூக நல்லிணக்கத்திற்கு ஒரு புதிய ஒளியைக் காட்டினார்.

சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் 9 சமத்துவபுரங்கள் கட்டப்பட்டது. அதில், 8 சமத்துவபுரங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு, நாம் ஆட்சிப் பொறுப்பில் அன்றைக்கு இருந்தபோதே அது வழங்கப்பட்டது. திரு. பெரியகருப்பன் அவர்கள் சொன்ன மாதிரி, இந்தக் கோட்டை வேங்கைப்பட்டிச் சமத்துவபுரமும் முன்கூட்டியே செயல்பட்டிருக்க வேண்டும்.

இந்தக் கிராமத்தில் பெரியார் நினைவுச் சமத்துவபுரத்திற்கு 2010–2011ஆம் நிதியாண்டில் அனுமதி அளிக்கப்பட்டது. ரூ.207 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதன் காரணமாக, இந்தச் சமத்துவபுரம் பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படவில்லை.

இந்த நிலையில்தான், தற்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, மன்னிக்க வேண்டும், நம்முடைய அரசு அமைந்ததற்குப் பிறகு, ரூ.317 இலட்சம் மதிப்பீட்டில் முழுமையாகச் சரிசெய்யப்பட்டு, பழுது பார்க்கப்பட்டு, புனரமைக்கப்பட்டுப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

மக்களுக்கான திட்டங்களைக் கடந்த அ.தி.மு.க. அரசு எப்படியெல்லாம் பாழ்படுத்தியது என்பது இந்த விழாவைச் சாட்சியாக நீங்கள் பார்க்கலாம். கடந்த ஆட்சியானது மக்களுக்கான ஆட்சியாக இல்லாமல், அரசியல் உள்நோக்கம் கொண்ட ஆட்சியாக இருந்த காரணத்தால்தான் இப்படியெல்லாம் நடந்து கொண்டார்கள்.

➢ இந்தச் சமத்துவபுரத்தில் 12 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் 100 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

➢ ஒவ்வொரு வீடும் 290 சதுர அடியில் ரூ.1.92 இலட்சம் மதிப்பீட்டில்,

குடிநீர் வசதி, மின்வசதி, மழைநீர்ச் சேகரிப்புத் தொட்டி, வீட்டுக்காய்கறித் தோட்டம், மூலிகைத் தோட்டம், வீட்டிற்கு 2 தென்னை மரங்கள், கழிப்பிட வசதி போன்றவை இணைத்து 5 சென்ட் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளன.

➢ ரூ.15.87 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வசதியும் செய்து தரப்பட்டுள்ளது.

➢ அது மட்டுமல்ல, அறிஞர் அண்ணா விளையாட்டுத் திடல்,

➢ அதேபோல, குழந்தைகள் விளையாடக் கலைஞர் சிறுவர் பூங்காவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

➢ சமத்துவபுரத்தின் முகப்பில் தந்தை பெரியாரின் மார்பளவுச் சிலையும் அமைக்கப்பட்டிருக்கிறது.

➢ அங்கு வசிக்கும் 100 குடும்பங்களுக்கும், அரசால் வழங்கப்படும் குடிமைப்பொருட்கள் நியாய விலைக்கடையும் அமைக்கப்பட்டிருக்கிறது.

➢ அனைத்துத் தெருக்களிலும் மின் விளக்குகளும்,

➢ மழைக்காலத்தில் தெருக்களில் தண்ணீர் தேங்காத வகையில் மழைநீர் வடிகால்களும் அமைக்கப்பட்டிருக்கிறது.

➢ ரூ.54.29 இலட்சம் அனைத்துத் தெருக்களும் தார்ச் சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளன.

➢ அதோடு, அங்கன்வாடி மையம் மற்றும் நூலகம் மறைந்த அமைச்சராக இருந்த நம்முடைய மதிப்பிற்குரிய மாதவன் அவர்கள் பெயரிலேதான் அந்த நூலகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதெல்லாம் அனைத்துச் சமுதாய மக்களும் ஒற்றுமையுடன் வாழ, ஒருமித்தக் கருத்தோடு வாழ முன்னெடுக்கப்பட்டிருக்கக்கூடியது மட்டுமல்ல, இந்தச் சமத்துவப் புரங்களில், வேறுபாடுகளைக் கடந்து ஒற்றுமையுடன் நீங்கள் வாழ்ந்து, இந்த நாட்டிற்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். உங்களைப் பார்த்து அனைவரும் சமத்துவத்தைப் போற்றி, "இந்த நாடே சமத்துவபுரமாகத் திகழ வேண்டும்" என்ற நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எண்ணத்தை நாம் நினைவாக்க வேண்டும்!

சமத்துவபுரத் திறப்புவிழா மட்டுமல்ல, பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படக் கூடிய விழாவாக இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

➢ நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.63.35 கோடி மதிப்பீட்டில், 51 திட்டப்பணிகளும்,

➢ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.42.48 கோடி மதிப்பீட்டில், 69 பணிகளும்,

➢ நீர்வளத்துறையின் சார்பில் ரூ.7 கோடி மதிப்பீட்டில், 1 திட்டப்பணிக்கும்,

➢ நெடுஞ்சாலைத்துறையின் (நபார்டு) சார்பில் ரூ.4.95 கோடி மதிப்பீட்டில், 1 திட்டப்பணிக்கும்,

➢ மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில், 5 பணிகளும்,

என மொத்தம் ரூ.119.68 கோடி மதிப்பில், 127 பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவை நான் இந்த மேடையில் உங்களுக்கு முன்னால் நிறைவேற்றியிருக்கிறேன்.

அதேபோல் இந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய மக்கள் பயன்பெறக்கூடிய வகையில், தொடங்கி வைக்கக் கூடிய பணிகள் என்னவென்று சொன்னால்,

➢ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில், ரூ.5.82 கோடி மதிப்பீட்டில், 1 திட்டப்பணியும்,

➢ பேரூராட்சிகள் துறையின் சார்பில், ரூ.5.30 கோடி மதிப்பீட்டில், 3 திட்டப்பணிகளும்,

➢ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், ரூ.3.06 கோடி மதிப்பீட்டில், 22 திட்டப்பணிகளும்,

➢ நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், ரூ.3 கோடி மதிப்பீட்டில், 1 திட்டப்பணியும்,

➢ வேளாண்துறையின் சார்பில் ரூ.2 கோடி மதிப்பீட்டில், 1 திட்டப்பணியும்,

➢ தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதிக் கழகத்தின் (தாட்கோ) சார்பில், ரூ.1.58 கோடி மதிப்பீட்டில், 4 திட்டப்பணிகளும்,

➢ மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், ரூ.1.40 கோடி மதிப்பீட்டில், 6 திட்டப்பணிகளும்,

➢ தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், ரூ.97 இலட்சம் மதிப்பீட்டில், 2 திட்டப்பணிகளும்,

➢ பொதுப்பணித்துறையின் (கட்டடம் மற்றும் பராமரிப்பு) சார்பில், ரூ.88 இலட்சம் மதிப்பீட்டில், 1 திட்டப்பணியும்,

➢ கூட்டுறவுத்துறையின் சார்பில், ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில், 2 திட்டப்பணிகளும்,

➢ கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் இணையம் (ஆவின்) சார்பில், ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில், 1 திட்டப்பணியும்

இங்குத் தொடங்கி வைக்கப்பட இருக்கிறது. ஆக மொத்தம் ரூ.24.77 கோடி மதிப்பீட்டில், 44 பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இந்த விழாவின் மூலமாக அர்ப்பணிக்கப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், சமுதாய வங்கிப் பெருங்கடன், சமுதாய முதலீட்டு நிதி, தனிநபர் கடன் உட்பட 17,438 பயனாளிகளுக்கு ரூ.40.82 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

தனிநபர் பண்ணைக் குட்டை அமைத்தல், ஊரக வீட்டுவசதித் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் 14,300 பயனாளிகளுக்கும்,




டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம், மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின்கீழ், மருந்துப் பெட்டகங்கள் வழங்குதல் உட்பட 7,665 பயனாளிகளுக்கும்,

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் 4,084 பயனாளிகளுக்கும்,

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 2,970 பயனாளிகளுக்கும்,

தொழிலாளர் நலன் துறை சார்பில் 2,550 பயனாளிகளுக்கும்,

கால்நடைப் பராமரிப்புத்துறையின் சார்பில், 2,357 பயனாளிகளுக்கும்,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், 1,566 பயனாளிகளுக்கும்,

கூட்டுறவுத்துறையின் சார்பில் 1,486 பயனாளிகளுக்கும்,

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் 806 பயனாளிகளுக்கும்,

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் 521 பயனாளிகளுக்கும்,

மாவட்ட முன்னோடி வங்கியின் சார்பில் உயர்கல்வி மற்றும் வங்கிக்கடனாக 264 பயனாளிகளுக்கும்,

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 238 பயனாளிகளுக்கும்,

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில், முஸ்லீம் மற்றும் கிறிஸ்துவ மகளிருக்கான உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம் உட்பட 229 பயனாளிகளுக்கும்,

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில், பயனாளிகள் பங்களிப்புடன் மலிவு விலையில் வீடு திட்டம்,

பயனாளிகள் தாங்களாகவே வீடு கட்டும் திட்டத்தின்கீழ், 121 பயனாளிகளுக்கும்,

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், 75 சாலையோர வியாபாரிகளுக்கும்,

மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் உதவி பராமரிப்புத் திட்டம்,

கொரோனா நோய்த்தொற்று நிவாரண நிதி உள்ளிட்ட 53 பயனாளிகளுக்கும்,



தாட்கோ நிறுவனத்தின் சார்பில்,

சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில்,

மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை உருவாக்கும் திட்டம்,

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட 19 பயனாளிகளுக்கும்,

முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை உள்ளிட்ட 11 பயனாளிகளுக்கும்,

மாவட்ட வழங்கல் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் 1,359 பயனாளிகளுக்குப் புதிய மின்னணுக் குடும்ப அட்டைகளும்,

மருத்துவம்மற்றும்மக்கள்நல்வாழ்வுத்துறையின் சார்பில், 1,000 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டையினையும்,

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில், 2 பயனாளிகளுக்குக் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணையும்

இங்கு வழங்கப்பட இருக்கிறது. இப்படி மொத்தம் 59,162 பயனாளிகளுக்கு ரூ.136.45 கோடி மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

இத்தனை திட்டப்பணிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் மட்டுமில்லாமல் இந்த மாவட்ட மக்கள் மேலும் பயனடையும் வகையில் பின்வரும் திட்டங்களை நான் அறிவிக்க விரும்புகிறேன்.

சிவகங்கை வட்டத்தில் இருக்கக்கூடிய பல கிராமங்களுக்குப் பயனளிக்கக்கூடியவகையில், சீல்டுகால் கால்வாயைப் புனரமைக்கும் பணிகள் ரூ.22 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இதனால் மேலப்பூங்குடி, சாலூர், சோழபுரம் மற்றும் நாலுகோட்டைக் கிராமங்களில் உள்ள கண்மாய்கள் நிறைந்து, 1,800 ஏக்கர் வேளாண் நிலங்கள் இதனால் பயன்பெறும்.

சிவகங்கை மாவட்டத்திலுள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு மகப்பேறு சிகிச்சைகளை மேலும் சிறப்புடன் வழங்கிட, சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியில் உள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் பராமரிப்புப் பிரிவிற்கு ரூ.12 கோடி செலவில் 100 படுக்கைகள் கொண்ட புதிய கூடுதல் கட்டடம் அமைக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு செலவு செய்யும் ஒவ்வொரு பைசாவும், கடைக்கோடியில் இருக்கக்கூடிய குடிமகனுக்கும் சென்று சேர வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய இலட்சியம், அரசினுடைய நோக்கம்!

இந்த நோக்கம் என்பது, பேரறிஞர் அண்ணா சொன்ன, "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!" என்கிற அந்த முழக்கம்! அந்த முழக்கத்தைத்தான் நாம் திட்டங்களின் வாயிலாகச் செயல்படுத்தி வருகிறோம்.

இந்தத் திட்டங்களுக்கெல்லாம் கூட்டாக ஒரு பெயரிட வேண்டும் என்றால், அதுதான் 'திராவிட மாடல்!'.

அரசின் திட்டங்களின் பயன் ஒவ்வொரு குடிமகனுக்கும் சென்று சேர்வதை நம்முடைய அரசு உறுதி செய்யும். இங்கே அமர்ந்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளும் அதனை நாள்தோறும் கண்காணித்து உறுதிசெய்ய வேண்டும்.

கழக ஆட்சி அமைந்த பிறகு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று பல்வேறு நலத்திட்டங்களைத் தொடங்கி வைக்கிறேன், அடிக்கல் நாட்டுகிறேன், நலத்திட்ட உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறேன் என்பது உங்களுக்கும் தெரியும், அதை வழக்கமாக நான் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறேன்.

புதிய திட்டப் பணிகளைத் தொடங்கி வைப்பதாக இருந்தாலும் சரி, பொதுமக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதை வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறேன்.

இப்படி ஒவ்வொரு மாவட்டமாக நானே நேரடியாகச் சென்று மக்களைச் சந்தித்து வருகிறேன். செல்லும் இடமெல்லாம், வழியெங்கும் சாலையோரங்களில் மக்கள் நின்று கொண்டு, மகிழ்ச்சியுடன் கையை அசைத்து, கரகொலி எழுப்பி, வணக்கம் செலுத்தி, ஆர்வத்தோடு அவர்களையெல்லாம் பார்க்கிறபோது, இதுதான் இந்த ஆட்சிக்கும், எனக்கும் தரப்படக்கூடிய நற்சான்று என்று நான் கருதுகிறேன்.

சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் இருந்ததைவிட, இப்போது அதிகமான அளவு, மூன்று மடங்கு, நான்கு மடங்கு எழுச்சி இன்றைக்கு மக்களிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. காரணம் என்ன? மக்களுக்கு மிகமிக உண்மையாக இருப்பது, மக்களுக்கு நேர்மையான ஆட்சியை வழங்குவதுதான் இதற்கு முக்கியக் காரணம்.

தேர்தலுக்கு முன்னால், எப்படி மக்களைச் சந்தித்து வந்தேனோ, அதைவிட அதிகமாகவே இப்போது நான் மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறேன். மக்களைத் தொடர்ச்சியாகச் சந்திப்பது, ஆட்சியாளர்களின் மிக முக்கியமான இலக்கணமாக நான் கருதுகிறேன்.

அண்மையில், இந்தியக் குடியரசுத் துணைத் தலைவரும், பழுத்த அனுபவம் கொண்ட நாடாளுமன்றவாதியுமான மாண்புமிகு திரு. வெங்கையா நாயுடு அவர்களை அண்மையில் அழைத்தது எதற்கு என்றால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்

சிலையைத் திறந்து வைப்பதற்காக அழைத்திருந்தோம். அவரும் மகிழ்ச்சியோடு வந்தார், வந்து நிகழ்ச்சியில் மகிழ்ச்சியோடு பங்கேற்றார், மகிழ்ச்சியோடு பேசினார், சிறப்போடு பேசினார். எந்தவகையில் எல்லாம் சிறப்பாகக் கலைஞர் அவர்கள் ஆட்சி நடத்தினார்கள் என்பதை அவர் சுட்டிக் காட்டிப் பெருமைப்படுத்திப் பேசினார். அதோடு நிற்காமல், 'முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது வழித்தடத்தில் இப்போதைய முதலமைச்சரும் ஆட்சி நடத்தி வருகிறார்' என்று அவர் குறிப்பிட்டதுதான் நமக்குப் பெருமை, என்னுடைய வாழ்வில் கிடைத்திருக்கக்கூடிய ஒரு மிகப்பெரிய பாராட்டாக நான் கருதுகிறேன்.

இந்தியாவின் பல்வேறு மாநில முதலமைச்சர்களை அறிந்த குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள், என்னையும் பாராட்டியும், தலைவர் கலைஞர் அவர்களைப் போலத் திறமையாக ஆட்சி நடத்துகிறேன் என்று ஒப்பிட்டுச் சொன்னது, எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒரு மிகமிகப் பெரிய பாராட்டாக நான் கருதுகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் இருந்த இடத்தை நான் நிரப்பிவிட்டேன் என்று சொல்லவில்லை. அவரது இடத்தை யாராலும், எந்தக் கொம்பனாலும் நிரப்பிட முடியாது. ஆனால் அவரைப் போலச் செயல்பட முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில், கடந்த ஓராண்டுகாலமாக என்னுடைய செயல்பாடு அமைந்துள்ளது. சொன்னார்களே, நம்பர் 1 முதலமைச்சர் ஆக, நம்பர் 1, நம்பர் 2, அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. தமிழ்நாடு நம்பர் 1க்கு வர வேண்டும், அதுதான் என்னுடைய இலட்சியம். குடியரசுத் துணைத் தலைவரின் பாராட்டு அதனைத்தான் வெளிப்படுத்துகிறது என்று நினைத்து நான் பெருமை அடைகிறேன்.

'தமிழ் சமுதாயத்துக்கு என்னால் முடிந்தவரை உழைத்துவிட்டேன். எனக்குப் பிறகு யார் என்று கேட்டால், தம்பி ஸ்டாலின்தான்' என்று தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு முறை சொன்னார். அந்த நம்பிக்கையை இந்த ஓராண்டுக்காலத்தில் நான் காப்பாற்றி இருக்கிறேன். இனியும் தொடர்ந்து நான் காப்பாற்றுவேன்! அதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

ஐந்து ஆண்டுகளில் செய்யவேண்டியதை இந்த ஓராண்டுக் காலத்தில் செய்திருக்கிறோம். இது ஏதோ ஆரம்பக் கட்ட வேகம் என்று நீங்கள் நினைக்கலாம், எல்லோரும் இப்படித்தான் இருப்பார்கள் என்று நினைக்க வேண்டாம். எப்போதும் இதே சுறுசுறுப்புடனும், இதே வேகத்துடனும்தான் நான் இருப்பேன். மக்கள் என் மீது வைத்திருக்கும் அன்பும், பாசமும் தான் என்னை இத்தகைய சுறுசுறுப்புடனும் வேகத்துடனும் பணியாற்ற வைக்கிறது. ஒவ்வொருவரும் காட்டும் அன்பிலும் அரவணைப்பிலும்தான் தமிழகம் அனைத்து வகையிலும் முன்னேற்றம் காணும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்துபட்ட அன்புப் பண்பாட்டைக் கொண்ட இனம்தான் இந்தத் தமிழினம். அந்தத் தமிழினம் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்பதற்கு எடுத்துக்காட்டாக, தமிழர்களின் தாய்மடியாக விளங்கும் கீழடி இருக்கக்கூடிய மாவட்டம்தான் இந்த சிவகங்கை மாவட்டம்!

அந்தக் கீழடியின் தொன்மையையும், அதன் மூலமாகத் தமிழினத்தின் கடந்த காலப் பெருமையையும் மீட்ட அரசுதான் இந்த அரசு. தமிழினத்தின் தொன்மையான பெருமைகளைப் பேசுவோம். அதற்காக அதை மட்டுமே பேசிக் கொண்டு இருந்துவிட மாட்டோம். நிகழ்கால மக்களை அனைத்து வகையிலும் மேன்மை அடைய வைப்போம். அதுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு.

தமிழ் தொண்டு –
தமிழினத் தொண்டு –
தமிழ்நாட்டுத் தொண்டு

ஆகிய மூன்றையும் ஒருசேர நிகழ்காலத்தில் மட்டுமல்ல, வருங்காலத்திலும் வளமான வாழ்க்கைக்கு, வளமான தமிழ்நாட்டிற்கு வழிவகுப்போம் என்ற உறுதியை நான் இந்த நிகழ்ச்சியில் தெரிவிக்க விரும்புகிறேன். ❖







மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 13.05.2022 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின்கீழ்ச் செயல்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஆகியவற்றின் சார்பில் ரூ.35.82 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 12 சேமிப்புக் கிடங்குகள், அலுவலகக் கட்டடம் மற்றும் விருந்தினர் அறை ஆகியவற்றைத் திறந்துவைத்தார்.

# மாநகராட்சி அலுவலகத்தில் ஆய்வு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.05.2022 அன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலகத்திற்குச் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

# பொறியாளர்களுக்குச் செயற்கைக்கோள் அலைபேசி

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 04.06.2022 அன்று தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறையின் சார்பில் முல்லைப் பெரியாறு அணையில் பணிபுரியும் தலைமைப் பொறியாளர், கண்காணிப்புப் பொறியாளர், செயற்பொறியாளர், பெரியாறு அணை முகாம் மற்றும் தேக்கடி முகாம் பணியாளர்களின் பயன்பாட்டிற்காக ரூ.9.50 இலட்சம் மதிப்பிலான 6 செயற்கைக்கோள் அலைபேசிகளை வழங்கினார்.

கேரளா மாநிலம், இடுக்கி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான முல்லைப் பெரியாறு அணை அடர்ந்த பெரியாறு வனப் புலிகள் சரணாலயத்தின் நடுவில் அமைந்துள்ளது. இங்குத் தரைவழித் தொலைப்பேசி இணைப்பு இல்லை. மேலும், வெள்ள காலங்களிலும், பருவமழைக் காலங்களிலும் மழை மேகங்களின் இடர்ப்பாடுகளினால் அலைபேசித் தொடர்பும் சரியாகக் கிடைக்கப்பெறாமல், தொடர்புத் துண்டிக்கப்பட்டு அணையின் நீர்மட்டம், நீர்வரத்து, நீர் வெளியேற்றம், மழையளவு போன்ற விபரங்களை உயர் அலுவலர்களுக்கும், தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களுக்கும், பேரிடர் மேலாண்மை அலுவலகத்திற்கும் தகவல் தெரிவித்துத் தக்க ஆலோசனைகள் பெற்று வெள்ள மேலாண்மை மேற்கொள்ளச் சிரமம் ஏற்படுகிறது.

மேலும், முல்லைப் பெரியாறு பிரதான அணைக்குப் படகில் 14 கீ.மீ. தூரம் பயணம் செய்யும்போது ஆள் நடமாட்டம் இல்லாத அடர்ந்த காட்டுப் பகுதியில் செல்லும்போது அலைபேசித் தொடர்பு கிடைப்பதில்லை. பாதுகாப்பு நோக்கில் தகவல் தொடர்பு சேவை மிகவும் இன்றியமையாதது ஆகும்.

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் மற்றும் நீர்வளத்துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் ஆகியோர் 05.11.2021 அன்று பெரியாறு அணையைப் பார்வையிட்டு வெள்ள மேலாண்மை பற்றிக் கேட்டறிந்த போது, மேற்கண்ட சிரமங்களைக் களையும் பொருட்டுச் செயற்கைக்கோள் அலைபேசி வழங்கிட முடிவு எடுக்கப்பட்டது.

இவ்வலைபேசிகள் வாயிலாகச் செயற்கைக்கோள் கோபுரச் சேவை இணைப்பு ஏதும் இல்லாமலேயே அடர்ந்தக் காட்டுப் பகுதியில் சேவை பெற இயலும். இதன்மூலம், பெரியாறு அணை மற்றும் பெரியாறு அணைக்குரிய படகு பயணிக்கும் பாதையில் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் எந்த நேரமும், எல்லாக் கால சூழ்நிலையிலும் உயர் அலுவலர்களைத் தொடர்பு கொண்டு தகவல் அளிக்க இயலும்.

❖ ❖ ❖









# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகக் கட்டுமானப் பணிகள் ஆய்வு

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 07.06.2022 அன்று மதுரை மாவட்டம், புதுநத்தம் சாலையில் ரூ.99 கோடி மதிப்பீட்டில், 2,13,288 சதுர அடி கட்டடப் பரப்பளவில் கட்டப்பட்டு வரும் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழகத்தின் முதலமைச்சராக ஐந்து முறை பொறுப்பேற்று மக்கள் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவினைப் போற்றும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான 03.06.2021 அன்று சங்கத் தமிழ் வளர்த்த மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகம் அமைப்பதற்கு மதுரை மாவட்டம், புதுநத்தம் சாலையில் தரைத்தளத்துடன் கூடிய 6 தளங்கள் கொண்ட கட்டடம் 2,13,288 சதுர அடி கட்டடப் பரப்பளவில் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டு, 11.01.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தார். 12 மாதங்களுக்குள் பணிகளை 100 சதவிகிதம் நிறைவேற்றிச் சிறப்பு வாய்ந்த இந்த நூலகத்தைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரும் நோக்கில் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகத்தின் கீழ்த்தளம், நூலகத்திற்கு வரும் வாசகர்களின் இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்காகவும், ஜெனரேட்டர் பொருத்துவதற்கான தளமாகவும் அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும், தரைத்தளத்தில், மாற்றுத்திறனாளிகள் சிரமமின்றி அமர்ந்து படிக்கின்ற வகையில் தேவையான புத்தகங்கள், இருக்கைகள், 250 இருக்கை வசதியுடன் கூடிய கலையரங்கமும்; முதல் தளத்தில், குழந்தைகள் நூலகமும், வாசகர்கள் தினசரி, வார, மாதப் பத்திரிக்கைகளை வாசிப்பதற்கான வசதிகளும்; இரண்டாவது தளத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவினைப் போற்றும் வகையில் அவரால் எழுதப்பட்ட கவிதைகள், கட்டுரைகள், அரசியல், இலக்கியம், வரலாற்றுச் சார்ந்த புத்தகங்கள், திரைப்படத்துறை தொடர்பான புத்தகங்கள் இடம்பெறும் வகையிலும், கலைஞரின் ஆய்வகம் ஏற்படுத்தப்பட்டு அங்கு அவரின் 4 ஆயிரம் ஆய்வறிக்கை புத்தகங்கள் இடம்பெறச் செய்யப்படுவதுடன் போட்டித்தேர்வுகளுக்காக படிக்கின்றவர்களைக் கருத்திற்கொண்டு அவர்களுக்காக 30 ஆயிரம் புத்தகங்கள் இடம்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

நூலகத்தின் மூன்றாவது தளத்தில் 63 ஆயிரம் புத்தகங்களுடன் தமிழ் இலக்கியப்பகுதி தளமாக அமைப்பதற்கான ஏற்பாடுகளும், 4ஆவது தளத்தில் ஆங்கில நூல்கள் பகுதியாகவும், 5ஆவது தளத்தில் ஐம்பெரும் காப்பியங்கள், பதினெண்கீழ்க்கணக்கு உள்ளிட்ட அரிய வகை புத்தகங்களை வைப்பதற்கான பகுதியாகவும், 6ஆவது தளத்தில் பார்வையற்றோர் பயன்படுத்தும் தளமாகவும் அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும், சிறப்பு வாய்ந்த இந்த நூலக வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்துடன் தொடுதிரை வசதி, ஜெனரேட்டர் வசதி மற்றும் 6 மாடிகளுக்கும் சிரமமின்றிச் செல்வதற்கு ஏதுவாக நகரும் படிகட்டுகள் வசதி, நூலகம் முழுவதும் குளிர்சாதன வசதி எனப் பல்வேறு நவீன வசதிகளுடன் நூலகத்தை அமைப்பதற்குக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் மாடித் தோட்டத்துடன் நூல்களைப் படிப்பதற்கான வசதியும், கலைக்கூடமும் அமைக்கப்படுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகத்தின் கட்டுமானப் பணிகளை விரைவாகவும், தரமாகவும் மேற்கொண்டு, உரியக் காலத்திற்குள் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். ●



# புதுக்கோட்டையில் ரூ.370 கோடியில் 48,868 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.06.2022 அன்று புதுக்கோட்டையில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.81.31 கோடி செலவில் முடிவுற்ற 140 திட்டப்பணிகளைத் திறந்துவைத்து, ரூ.166.84 கோடி மதிப்பீட்டிலான 1,399 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 48,868 பயனாளிகளுக்கு ரூ.370 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை**

நான் புதுக்கோட்டைக்கு வந்திருக்கிறேன். சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தீட்டப்பட்டிருக்கக்கூடிய திட்டங்களுக்கு, அதற்கான உத்தரவுகளை எல்லாம் அந்தக் கோட்டையிலிருந்து பிறப்பித்து, அதை நிறைவேற்றுவதற்காகப் “புதுக்” கோட்டைக்கு வந்திருக்கிறேன்.

ஒரு காலத்தில் திருச்சி மாவட்டத்தோடு இருந்தது இந்தப் புதுக்கோட்டை. 1974ஆம் ஆண்டு அதனைப் பிரித்து, புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக ஆக்கியவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அப்போது, புதுக்கோட்டை அரண்மனை மாளிகையை விலைக்கு வாங்கி, மாவட்ட ஆட்சியர் அலுவலகமாக மாற்றி, அதற்கு இராஜா கோபாலத் தொண்டைமான் மாளிகை எனப் பெயர் சூட்டினார் தலைவர் கலைஞர் அவர்கள்.

இன்றைக்குப் புதுக்கோட்டையில் உள்ள 6 தொகுதிகளில், 5 தொகுதிகளை மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வென்று, இந்த அரசின் கோட்டையாக இந்தப் புதுக்கோட்டை மாறியிருக்கிறது!

5 தொகுதிகளில் வெற்றி பெற்றாலும், இந்த மாவட்டத்தில் உள்ள தொகுதி மக்களுக்காக, ஏன், இந்த மாநிலத்தில் உள்ள 234 தொகுதி மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி, பாடுபட்டு வரக்கூடிய அரசினுடைய முதலமைச்சராக நான் இங்கு வந்திருக்கிறேன்.

எந்தக் கோட்டையாக இருந்தாலும் அது ஒரு நாள் பழைய கோட்டையாக ஆகிவிடும். ஆனால் எப்போதும் புதிய கோட்டையாகவே இருப்பது, இந்தப் புதுக்கோட்டை!

அமைச்சர் திரு. ரகுபதி அவர்களும், அமைச்சர் திரு. மெய்யநாதன் அவர்களும் இந்த விழாவை ஆட்சித் தலைவரின் ஒத்துழைப்போடு, அரசு அதிகாரிகள், அலுவலர் பெருமக்கள், மக்கள் பிரதிநிதிகளுடைய உற்சாகத்தோடு மிக எழுச்சியோடு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

திரு.மெய்யநாதன் அவர்கள் அமைச்சரவைக்குப் புதியவராக இருந்ததாலும், அவர் எப்படிச் செயல்படுவார் என்கிற தயக்கம் எனக்கு முதலில் இருந்தது. ஆனால் முதல் முறை சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தபோதும், இப்போது ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு தனது துறைக்கான மானியக் கோரிக்கைக்கு பதில் அளித்துப் பேசிகிறபோது, ஒரு தேர்ந்த அமைச்சராக, இரண்டாவது முறையாக அமைச்சராக அவர் பொறுப்பேற்றிருக்கிறார் என்ற அளவிற்கு அவர் அழகாகப் பேசினார்.

சுற்றுச்சூழல் துறை என்பது கொஞ்சம் டெக்னிக்கலான துறை! இன்றைய உலகில் மிக முக்கியமான துறையும் கூட! அதிலும் தனிப்பட்ட ஆர்வத்தைச் செலுத்தி அந்தத் துறையில் சிறப்பாக ஆளுமையை அவர் செலுத்தி வருகிறார். அதுமட்டுமல்ல, விளையாட்டுத் துறையிலும் தமிழ்நாடு பல்வேறு

சாதனைகளைப் படைக்க, அவரது உற்சாகம் காரணமாக அமைந்திருக்கிறது.

அமைச்சர் ரகுபதி அவர்களைப் பற்றி நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை! அரசின் பல்வேறு சட்டங்களை நிறைவேற்றுவதிலும், தமிழக அரசின் வழக்குகளைத் திறம்படக் கையாண்டு மாநில உரிமைகளை நிலைநாட்டுவதிலும் திரு. ரகுபதி அவர்களின் பங்கு இன்றியமையாத பங்காக அமைந்திருக்கிறது.

தமிழகத்திற்கு நல்ல அமைச்சர்களைக் கொடுத்த இந்தப் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் கலைஞரின் பாசத்துக்குரிய மாவட்டமாக இந்தப் புதுக்கோட்டை மாவட்டம் இருந்த காரணத்தினால்தான்,

புதிய பேருந்து நிலையம்

மகளிர் கல்லூரி

சிப்காட் தொழிற்பேட்டை

சிட்கோ தொழிற்பேட்டை

குடுமியான்மலை அண்ணா பண்ணை

காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

புதுக்கோட்டை நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம்

அரசு மருத்துவமனை மற்றும் ராணியார் மருத்துவமனைகளின் புதிய கட்டமைப்புகள் ஆகிய அனைத்தையும் புதுக்கோட்டைக்கு உருவாக்கிக் கொடுத்தார்.

புதுக்கோட்டை நகராட்சி செலுத்த வேண்டிய குடிநீர்க் கட்டணம் ரூ.50 கோடியைச் செலுத்தி நகராட்சியைக் கடனிலிருந்து விடுவித்தவர்தான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இப்படிப் புதுக்கோட்டைக்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இத்தகைய புதுக்கோட்டையை உருவாக்கிய ஆட்சிதான், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி! கடந்த ஓராண்டுக் காலத்தில், ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாடு அடைந்த பயன்கள் உங்களுக்குத் தெரியும்.

அதில் இந்தப் புதுக்கோட்டை மாவட்டமும், இந்த மாவட்டத்தின் மக்களான நீங்கள் அடைந்த பயன்களையும் நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

- உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ்ப் பெறப்பட்ட 7,463 கோரிக்கை மனுக்களில், 3,614 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.
- 2 இலட்சம் எண்ணிக்கையிலான மகளிர்கள் கட்டணமில்லாமல் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.
- கூட்டுறவு வங்கிகளில் நகைக் கடன் பெற்ற 170 பயனாளிகளின் நகைக்கடன் ரத்து செய்யப்பட்டுள்ளது.
- 4,68,519 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4,000 தரப்பட்டுள்ளது.
- 14 வகையான அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பை, 4,72,109 பேர் பெற்றிருக்கிறார்கள்.
- 4,82,187 அரிசிக் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்புத் தரப்பட்டிருக்கிறது.
- 968 முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்குப் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டிருக்கிறது.
- கொரோனா நோய்த் தடுப்புக்காக, 51,960 நோய் எதிர்ப்புச் சக்தி உருவாக்கும் மாத்திரைகள் வழங்கப்பட்டிருக்கிறது.
- முதல் தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள், 12,69,499 பேர்.
- இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள், 11,35,783 பேர்.
- காவல்துறை சார்ந்த 1,716 நபர்களுக்கு ரூ.5 ஆயிரம் வீதம், ரூ.85.80 இலட்சம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.
- கொரோனா தொற்றால் பெற்றோரை இழந்திருக்கக்கூடிய குழந்தைகளுக்கு ரூ.3 இலட்சம் நிதியை 110 குழந்தைகள் பெற்றிருக்கிறார்கள்.
- 316 திருக்கோயில்களில் பணிபுரியும் 316 பூசாரிகளுக்கு ரூ.1,000 ஊக்கத்தொகையாக, ரூ.3.16 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.
- திருக்கோயில் புனரமைப்புப் பணிக்காக ரூ.1.62 கோடி இம்மாவட்டத்திலுள்ள 81 கோயில்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.
- அதுமட்டுமல்லாமல், கடந்த ஓராண்டில், 1,254 நபர்களுக்கு முதியோர் ஒய்வூதியம் ரூ.1.50 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- அதேபோல், ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகள் 895 நபர்களுக்கு ரூ.1.07 கோடியும், கணவரால் கைவிடப்பட்ட 51 பெண்களுக்கு ரூ.6.12 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டிருக்கிறது.



✿ கைம்பெண்களுக்கான உதவித்தொகை, 844 நபர்களுக்கு ரூ.1.01 கோடி வழங்கப்பட்டுள்ளது.

✿ உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முதியோர் உதவித்தொகை 97 நபர்களுக்கு ரூ.11.64 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.

✿ இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் உள்ள 963 நபர்களுக்குப் பணிக்கொடை ரூ.37.97 கோடி வழங்கப்பட்டிருக்கிறது.

இப்படிப் பல்லாயிரக்கணக்கானோர் பல்வேறு திட்டங்களின் மூலமாகப் பயனடைந்துள்ளார்கள்.

அந்த வரிசையில்தான் இன்றும் இன்னும் சில முக்கியமான திட்டங்களை நான் இங்கே துவக்கி வைக்கிறேன்.

✿ ரூ.81.31 கோடி மதிப்பீட்டில் முடிவுற்றிருக்கக் கூடிய 140 திட்டப்பணிகளைத் துவக்கி வைத்துள்ளேன்.

✿ ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில், ரூ.10.37 கோடி செலவில், 34 முடிவுற்ற திட்டப் பணிகள்,

✿ நகராட்சி நிருவாகத்துறை சார்பில் ரூ.3 கோடி மதிப்பில் 12 பணிகள்,

✿ கறம்பக்குடிப் பேரூராட்சி வடக்குத் தெரு நியாய விலைக் கடை கட்டடம்,

✿ மருத்துவத் துறை சார்பில் 26 பணிகள்,

✿ கந்தர்வக்கோட்டையில் கால்நடை மருத்துவமனைக் கட்டடம்,

✿ புதுக்கோட்டையில் இசைப்பள்ளிக் கட்டடம்,

✿ அருள்மிகு முத்துமாரியம்மன் கோவிலுக்கு அடிப்படை வசதிகள்,

✿ பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வு மையங்கள், கணினி அறைகள்,

✿ அறந்தாங்கியில் நில அளவர் அலுவலகம்,

✿ புதுக்கோட்டையில் அன்னை சத்தியா நினைவுக் குழந்தைகள் காப்பகத் திட்டம்,

✿ அங்கன்வாடி மையங்கள்,

✿ கோட்டைப்பட்டினத்தில் மீன் உலர் களம்,

✿ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டடங்கள்,

✿ புதுக்கோட்டையில் செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம்,

✿ புதுக்கோட்டையில் தொழில் பயிற்சி வளாகத்தில் தங்கும் விடுதிகள்,

✿ அண்டக்குளத்தில் சித்த மருத்துவப் புதியக் கட்டடம்,

✿ பிராமணவயல் துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடம்;

✿ கறம்பக்குடி அரசுக் கலைக் கல்லூரியில் வகுப்பறைகள்,

✿ இலுப்பூர், இடையப்பட்டியில் குடியிருப்புகள்,

✿ 15 இடங்களில் சிறுதானிய விற்பனை நிலையங்கள் என மொத்தம் ரூ.81.31 கோடி செலவில், 140 பணிகள் முடிவுற்று இந்த விழாவிலே திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

ரூ.166.84 கோடி மதிப்பீட்டிலான 1,399 புதிய திட்டப் பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியிருக்கிறேன்.

✿ புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தின் முதல் தளத்தில் பார்வையாளர்கள் தங்குவதற்கான சிறப்புக் கட்டடம்,

✿ புதுக்கோட்டை நகர்ப் பகுதிகளில், 14 இடங்களில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைத்தல்,

✿ பல்வேறு பேரூராட்சிகளில் தார்ச்சாலைகள் அமைத்தல்,

✿ சிறிதும் பெரிதுமான ஊரக உள்ளாட்சிப் பகுதிகளில், ரூ.85.77 கோடி மதிப்பீட்டில் 1,324 திட்டப் பணிகள்;

✿ வம்பன் கிராமத்தில் புதிய துணை மின்நிலையம் அமைத்தல்,

✿ துணைச் சுகாதார நிலையங்கள் அமைத்தல்,



மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில், கோட்டைப்பட்டினம் மீன் இறங்குதளம் ரூ.15 கோடி செலவிலும், ஜெகதாபட்டினம் மீன் இறங்குதளம் ரூ.15 கோடி செலவிலும் மேம்படுத்தப்படும். மேலும், ஜெகதாப்பட்டினத்தில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மொத்தமாகச் சொல்வதாக இருந்தால், மாநிலம் முழுமைக்கும் என்ன தேவை, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என்ன தேவை, ஒவ்வொரு தனிமனிதனின் தேவையும் என்ன என்பதைப் பார்த்துப் பார்த்துச் செய்யக்கூடிய அரசாக நம்முடைய தமிழ்நாடு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

- ✿ புதிய அங்கன்வாடி மையங்கள் அமைத்தல்,
- ✿ பிள்ளைத்தண்ணீர் பந்தலில் கால்நடை மருந்தகக் கட்டடம் அமைத்தல்,
- ✿ ஆதனக்கோட்டை, பேரனூரில் வேளாண்மை விரிவாக்க மையம் கட்டுதல்,
- ✿ துலையனூர், கீழாத்தூர் ஆகிய இரண்டு புதிய அரசுக் கலை அறிவியல் கல்லூரிகள் கட்டுதல்,
- ✿ கொடியாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்,
- ✿ முத்துக்குடாக் கடற்கரையில் படகுச் சவாரி அமைத்தல்,

ஆகிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அதாவது ரூ.166.84 கோடி மதிப்பீட்டில் 1,399 திட்டப் பணிகளுக்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இவை பொதுமக்கள் அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய திட்டங்களாகும்.

தனிநபர்கள் பயன் பெறக்கூடிய வகையில் 48,868 பயனாளிகளுக்கு ரூ.370 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கிறது.

- ✿ ரூ.81.31 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 140 திட்டப் பணிகளைத் திறந்து வைத்திருக்கிறேன்.

இத்திட்டப் பணிகள் மட்டுமல்லாமல், இந்த மாவட்டத்தினுடைய மக்கள் மேலும் பயனடையும் வகையில் பின்வரும் திட்டங்களை இப்போது நான் அறிவிக்கப் போகிறேன்.

திருமயம் பகுதி மக்கள் பயன்பெறக்கூடிய வகையில், ரூ.10 கோடி செலவில், கூடுதல் படுக்கைகள், நவீன அறுவை சிகிச்சை அரங்கம் போன்ற வசதிகளோடு, திருமயம் வட்ட மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.

இந்த மாவட்டத்தில் முக்கிய மீன்பிடிப்பு மையங்களாக இருந்து வரும் கோட்டைப்பட்டினம் மற்றும் ஜெகதாப்பட்டினம் பகுதிகளில் வாழக்கூடிய மீனவ

தமிழ்நாட்டைக் கல்வியில், வேலைவாய்ப்பில், தொழில் வளர்ச்சியில், உட்கட்டமைப்பில் சிறப்புற வளர்த்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இவை அனைத்தையும் விஞ்சியதாகச் சாமானியர் வாழ்க்கையைப் பற்றியே, தலைவர் கலைஞர் அவர்கள் நினைத்தார்கள். இந்த அடிப்படையில்தான், இன்றைக்கு உங்களால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த அரசு செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

- ✿ ஏழை, எளிய மக்களில் எத்தனை பேரின் வாழ்க்கைத் தரம் இந்த ஆட்சியால் உயர்ந்தது என்பதை இந்த ஆட்சியின் சாதனையாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.
- ✿ ஏழை, எளிய விளிம்பு நிலை மக்கள் தங்கள் கோரிக்கைக்காக அரசாங்கத்தைச் சுலபமாக அணுகும் வகையில் அரசு இயந்திரம் செயல்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.
- ✿ பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர், பழங்குடியினரின் சமூக வாழ்க்கை எவ்வளவு மேன்மை அடைந்திருக்கிறதோ, அதனையே நான் சாதனையாக நினைக்கிறேன்.
- ✿ அதுமட்டுமில்லாமல், இருளர்கள், நரிக்குறவர்கள் போன்ற சமுதாயத்தைச் சார்ந்திருக்கக் கூடியவர்கள் விளிம்பு நிலை மக்களின் அரசாக இது செயல்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.
- ✿ மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் போன்ற குரலற்றவர்களின் குரலாக இந்த அரசு இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

✿ இத்தகைய மக்களுக்குத் தேவையான அனைத்தையும் பார்த்துப் பார்த்துச் செய்து தர வேண்டும், சிந்தித்துச் சிந்தித்து நிறைவேற்றித் தர வேண்டும் என்று நாம் நினைக்கிறோம்.

வளர்ச்சி என்ற பாதையை டெவலப்மெண்ட் என்ற பொதுவான அர்த்தத்தில் சொல்லவில்லை. மாற்றம், மேன்மை, உள்ளார்ந்த மலர்ச்சி என்ற பண்பாட்டு அடையாளத்துடன் நாங்கள் சொல்கிறோம்.

ஒரு தொழிற்சாலை உருவாவது வளர்ச்சி. அந்தத் தொழிற்சாலை வருவதன் மூலமாக அந்த வட்டாரம் அடையக்கூடிய பயன், அந்த வட்டாரத்தை அடையக்கூடிய வேலைவாய்ப்புகள், அதன் மூலமாக அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் அடையக்கூடிய உயரம், சமூகத்தில் ஏற்படும் மாற்றம் ஆகிய அனைத்தையும் சேர்த்துத்தான் வளர்ச்சி என்று சொல்கிறோம். அத்தகைய வளர்ச்சியை உருவாக்க நாங்கள் நினைக்கிறோம்.

ஒரு பெருந்தொழிற்சாலையை உருவாக்கி, எத்தனைப் பெண்களுக்கு வேலை கொடுத்துள்ளது? மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்டங்கள் எத்தனை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன?

ஆகவே, இதைத்தான் கம்பீரமாகச் சொல்கிறோம், இதுதான் 'திராவிட மாடல்' ஆட்சி என்று பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கிறோம். இதுதான் அதனுடைய உள்ளடக்கம்!

விளிம்புநிலை மக்களின் வாழ்க்கைத் தேவையையும் பூர்த்தி செய்வதுதான் திராவிட மாடல்.

மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமானால், அதிகாரத்துக்கு வந்தாக வேண்டும் என்பதை உணர்ந்ததால், தேர்தலில் குதித்த திராவிட முன்னேற்றக் கழகம், மக்கள்தான் எங்களுக்கு முக்கியமே தவிர, இப்படிப்பட்ட பதவிகள் அல்ல. எத்தகைய திட்டத்தைக் கொண்டு வந்தாலும், அதனை வாக்கு வாங்கக்கூடிய தந்திரம் என்று கொச்சைப்படுத்துபவர்கள் சிலர் இருக்கிறார்கள். வாக்குகளை வாங்குவதற்காகத்தான் இதை எல்லாம் நிறைவேற்றுகிறோம் என்று குற்றம் சாட்டக்கூடியவர்கள், விமர்சனம் செய்யக்கூடியவர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள்.

நான் கேட்கிறேன், இருளர்களுக்கோ, குறவர்களுக்கோ, மாற்றுத்திறனாளிகளுக்கோ, திருநங்கைகளுக்கோ அவர்களுக்கு வாக்கு வங்கி அதிகமாக இருக்கிறதா? அவர்கள் வாக்கு வங்கி உள்ளவர்களா?

இப்படி வாக்கு வங்கி இல்லாதவர்களது வாழ்க்கைக்கும், அவர்களது சேவைக்கும் உதவிகளைச் செய்யும் அரசுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு என்பதை நீங்கள் புரிந்து கொண்டாக வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய நோக்கம் சிந்தனை, செயல் ஆகிய அனைத்தும் மக்கள் நலன்தான், சாதாரண மக்களின் நலன்தான், ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்தான்.

தன்னுடைய வாழ்நாள் முழுக்கக் கடைசி நாள்வரை, கடைசி நொடிவரை மூத்திர வாளியைச் சுமந்துக் கொண்டு, பகுத்தறிவை ஊட்டி எந்த மக்களின் சுயமரியாதைக்காகத் தந்தைப் பெரியார் பாடுபட்டாரோ,

உலக அரசியலை எல்லாம் எடுத்துச் சொல்லி, அரசியல் எழுச்சியையும், தமிழ் உணர்வையும் பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்த மக்களுக்காக உணர்வு ஊட்டினாரோ,

"எங்களை எல்லாம் உருவாக்கிய பெரியார் அவர்களுடைய மொழியில், இது மூன்றாம் தர அரசு கூட அல்ல, நான்காம் தர அரசு. நாங்கள் நான்காவது தரத்தைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள்; ஆகவே, நாலாந்தர அரசு நாட்டிலே இருக்கிறது. நாலாந்தர மக்களுடைய நல்வாழ்வுக்காகப் பாடுபடும் அரசு இது என்பதை இறுமாப்போடு, பெருமையோடு, கர்வத்தோடு, பெரியார் அவர்களுடைய பெயரிலும், பெருமகனார் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரிலும் சொல்லிக்கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்" என்று சமூகநீதிக்காகவும் சமத்துவத்துக்காகவும் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் எந்த மக்களுக்காகப் பாடுபட்டாரோ, அந்த மக்களின் அரசுதான் இன்று கோட்டையில் நடக்கிறது. அந்த மக்களுக்கான அரசையே தொடர்ந்து நடத்துவோம் என்பதை நான் இங்கு உங்கள் முன்னால் நின்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய நான் இங்கேயும் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே, இங்கே பேசியிருக்கக்கூடிய பல சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரவர் தொகுதியில் இருக்கக்கூடிய சில பிரச்சினைகளை, கோரிக்கைகளைச் சுட்டிக்காட்டி, ஆனால், அதே நேரத்தில் ஏற்கெனவே சொன்ன அந்த உறுதிமொழியை, வாக்குறுதியை ஓரளவுக்குக் காப்பாற்றப்பட்டிருக்கிறது, மகிழ்ச்சியடைகிறோம், அதற்காக நன்றி சொல்கிறோம் என்றும் சொன்னார்கள். ஆகவே, இன்னும் சில கோரிக்கைகள், பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும், நான் மறுக்கவில்லை. இங்கே நாடாளுமன்ற உறுப்பினர் திரு.திருநாவுக்கரசர் அவர்கள் பேசுகின்றபோது, அவர் சொன்னதை நான் வழிமொழிகிறேன் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் என்னென்ன கோரிக்கைகளை இங்கே மட்டுமல்ல, சட்டமன்றத்திலும் சரி, மக்கள் மன்றத்திலும் சரி எந்தக் கோரிக்கைகளை வைத்தாலும் அதில் இருக்கக்கூடிய உண்மையை, நியாயத்தை இந்த அரசு புரிந்துகொண்டு, அதற்குரிய நடவடிக்கையை நிச்சயமாக, நாங்கள் உறுதியாக எடுப்போம் என்ற நம்பிக்கையை, உறுதியை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, உங்கள் அனைவரையும் சந்தித்து உரையாற்றக்கூடிய இந்த வாய்ப்பினைப் பெற்றமைக்கு மீண்டும் ஒரு முறை நன்றி கூறி விடைபெறுகிறேன். ●





## சிவகங்கை - கோட்டை வேங்கைப்பட்டியில்

# தந்தைப் பெரியார் நினைவுச் சமத்துவபுரம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.06.2022 அன்று சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், கண்ணமங்கலப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கோட்டை வேங்கைப்பட்டியில் ரூ.3.17 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 100 வீடுகள் கொண்ட பெரியார் நினைவுச் சமத்துவபுரத்தினைத் திறந்துவைத்து, சமத்துவபுர வளாகத்தில் பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையினையும் திறந்துவைத்தார்.

அனைத்து மக்களும் சாதி, மத பேதமின்றிச் சமமாக வாழ்ந்திட பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார் அவர்களின் பெயரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட உன்னதத் திட்டம்தான் பெரியார் நினைவுச் சமத்துவபுரம் திட்டமாகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சிவகங்கை மாவட்டத்தில் 9 சமத்துவபுரங்கள் கட்டப்பட்டு, 8 சமத்துவபுரங்கள் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. 9ஆவது சமத்துவபுரமாக 2010–2011ஆம் நிதியாண்டில் கோட்டை வேங்கைப்பட்டிக் கிராமத்தில் சமத்துவபுரம் கட்டப்பட்டுத் திறக்கும் நிலையில் ஆட்சி மாற்றத்தால் திறக்கப்படாமல் இருந்தது. இந்தச் சமத்துவபுரம் கோட்டை வேங்கைப்பட்டிக் கிராமத்தில் 12.253 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இச்சமத்துவபுரத்தில் 100 வீடுகள், தலா ரூ.1.92 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. சமத்துவபுரத்தின் முகப்பில் ரூ.2.25 இலட்சம் மதிப்பீட்டில் தந்தைப் பெரியாரின் மார்பளவுத் திருவுருவச் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது. தந்தைப் பெரியார் நினைவு சமத்துவபுரத்தைத் திறந்துவைத்துப் பார்வையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பயனாளிகளுக்கு வீடுகளுக்கான சாவிகளை வழங்கி, அவர்களுடன் உரையாடினார்.

இச்சமத்துவபுரத்தில் தனிநபர் வீட்டுக் குடிநீர் இணைப்பிற்காக ரூ.15.87 இலட்சம் மதிப்பீட்டில் 100 வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பும், குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் இதரக் குடிநீர் திட்டப் பணிகள் ரூ.2.92 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அண்ணா விளையாட்டுத்திடல் ரூ.1.01 இலட்சம் மதிப்பீட்டில் கைப்பந்து, கபடி மைதானம் உட்பட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடனும், சிறுவர், சிறுமியர் விளையாடும் வகையில் கலைஞர் சிறுவர் பூங்கா ரூ.5.25 இலட்சம் மதிப்பீட்டிலும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், தெருக்களில் ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் மின்விளக்குகள், ரூ.96.39 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்துத் தெருக்களிலும், மழைநீர் வடிகால் வசதிகள், ரூ.54.29 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இவ்வளாகத்தில் ரூ.4.38 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடை கட்டடத்தையும், ரூ.8.09 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டடம் மற்றும் நூலகக் கட்டடத்தையும் திறந்து வைத்தார்.












# செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான இலச்சினை மற்றும் சின்னம் அறிமுகம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 09.06.2022 அன்று பெருநகரச் சென்னை மாநகராட்சியின் ரிப்பன் கட்டட வளாகத்தில், மாமல்லபுரத்தில் நடைபெறவுள்ள 44ஆவது செஸ் ஒலிம்பியாட் 2022 போட்டிக்கான இலச்சினை (Logo) மற்றும் சின்னம் (Mascot) ஆகியவற்றை அறிமுகப்படுத்தினார்.

முதன்முறையாகத் தமிழ்நாட்டில் செஸ் ஒலிம்பியாட் போட்டி நடைபெறவுள்ளது. இப்போட்டியானது சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் 2022 ஜூலை 28ஆம் தேதி முதல் ஆகஸ்டு 10ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இப்போட்டியில் 186 நாடுகளைச் சார்ந்த 2,000க்கும் மேற்பட்ட சர்வதேசச் சதுரங்க விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.

இப்போட்டியினைத் தமிழ்நாட்டில் நடத்துவது குறித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு அரசு மற்றும் அகில இந்தியச் சதுரங்கக் கூட்டமைப்புடன் (AICF) புரிந்துணர்வு ஒப்பந்தம் 14.05.2022 அன்று தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது.

மேலும், இப்போட்டிக்கான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளச் சிறப்பு அலுவலராகத் தேசிய நலவாழ்வு குழும மேலாண்மை இயக்குநர் அவர்கள் நியமிக்கப்பட்டு முன்னேற்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியினை உலகமே வியக்கும் வகையில் நடத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள், பன்னாட்டுச் சதுரங்கக் கூட்டமைப்பினர் (FIDE) கொண்ட உயர்மட்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுப் பணிகள் கண்காணிக்கப்பட்டுச் சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

44ஆவது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான ஜோதி ஏற்றப்பட்டு நாடு முழுவதும் வலம் வரவுள்ளது. தமிழ்நாடு அரசின் சார்பில் இப்போட்டி குறித்த விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் மாணவ, மாணவியர்களிடையே செஸ் போட்டிகள் நடத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பேருந்துகள், இரயில்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களில் இச்சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி குறித்து விளம்பரம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வண்ண விளக்குகளால் ஒளிரூட்டப்பட்ட 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான இலச்சினை (Logo) மற்றும் “தம்பி” என்கிற சின்னத்தினையும் (Mascot) அறிமுகப்படுத்தினார்.

தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான 50 நாள் கவுண்ட் டவுன் (Countdown) பொதுமக்களின் பார்வைக்காக ஒளிப்படக் காட்சியாக ரிப்பன் கட்டடத்தில் தொடங்கிவைத்தார். மேலும், “#CHESS CHENNAI 2022” என்ற HashTag–யை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, அகில இந்தியச் சதுரங்க கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் சஞ்சய் கபூர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.







செங்கல்பட்டு மாவட்டம்





# கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டப்பணிகள் ஆய்வு






**செ**ங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சிப் பகுதிகளில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடைபெற்றுவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை அரசு தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு இ.ஆ.ப., அவர்கள் 05.06.2022 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அனகாபுத்தூர் மற்றும் பம்மல் பகுதிகளில் அமைக்கப்பட்டுவரும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து அனகாபுத்தூர் அடையாறு ஆற்றங்கரை ஓரத்தில் மரக்கன்று வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மரக் கன்றினை நட்டு வைத்தார்.

கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் புதிய தினசரி அங்காடி கட்டும் பணியினையும், பம்மல் பகுதியில், கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.99.50 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பனந்தாள் ஏரி புனரமைப்புப் பணியினையும், சித்தாலப்பாக்கம் சாலையில் G.D.நாயுடு தெருவில் மூடிய வடிகால் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சியில் சேகரிக்கப்படும் குப்பைக் கழிவுகளைத் தரம் பிரிப்பதற்காகச் செம்பாக்கத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த நுண்ணுயிர் உரமாக்கும் மையத்தில் கழிவுகளைத் தரம் பிரித்து உரமாக்கும் பணியினையும், சேலையூர் சுடுகாடு வளாகத்தில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் எரிவாயு தகனமேடை அமைக்கும் பணியினையும் அரசு தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணிகளைத் தொய்வின்றி விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

# தமிழ்நாடு நாள் முன்னேற்பாட்டுப் பணிகள் ஆய்வுக் கூட்டம்



10.06.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், ஜூலை 18 அன்று தமிழ்நாடு நாள் கொண்டாடப்படுவதையொட்டி, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்துத் தொடர்புடைய துறைகளின் அரசுச் செயலாளர்கள் மற்றும் துறைத்தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.


# குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுவதற்கான உறுதிமொழி ஏற்பு



செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 10.06.2022 அன்று தலைமைச் செயலகத்தில், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதிமொழி ஏற்றனர்.

# “யாதும் ஊரே யாவரும் கேளிர்”

– முத்தமிழறிஞர் **கலைஞர்**



**மூ**ன்று கூறாக ஆவதற்கு முன்பிருந்த
முகவைப் பெரு மாவட்டத்தில் மூதறிஞர் பண்டிதமணி
கதிரேசன் செட்டியார் பிறந்தார் எனக் கேள்வியுற்றுக்
களிப்புடனே மகிபாலன்பட்டிக்குச் சென்றிருந்தபோது
பூங்குன்றமெனப் பழையநாள் இலக்கியமாம்
புறநானூற்றுக் குறிப்பில் இருந்த ஊரின் பெயர்தான்
மகிபாலன் பட்டியாக
மாறிற்றென்று, பெரும்புலவர்
மாணிக்கனார் உரைக்கக் கேட்டு
மகிழ்ச்சியிலே திளைத்துப் போனேன்.

கணியன் பூங்குன்றனார் எனும் அவ்வூர்க் கவிஞன்
கற்குகையொன்றில் செதுக்கியுள்ள கவிதையினைக்
காண வாரீர் என அழைத்திடவே; சென்று கண்டேன்! – அந்தப்
பழம்புலவன் கரங்கொண்டு செதுக்கியதோ – அன்றி
பார்புகழும் அப்பாட்டைப் பின்வந்தோர் செதுக்கியதோ?
யார் செயலாய் இருந்திடினும் அப்பாட்டில்
“யாதும் ஊரே யாவரும் கேளிர்” எனும்
அறைகூவல்தனை அற்றைநாளில் ஒரு தமிழன்
நிறைகுடமாய்த் திகழும் தன் நெஞ்சத்தைத் திறந்துகாட்டி
விரிகடல்சூழ் உலக முழுதும் நம் ஊரே என்றும்
விழியும் ஒளியும் போல் மக்கள் எலாம் நம் உறவே என்றும் – புதிய

வெளிச்சத்தால் பொல்லாத இருள் கிழித்து
வேற்றுமையின் வேரறுத்துப் புரட்சி செய்தான்!
பூந்தமிழில் வண்டாகப் புணர்ந்து கலந்து–இந்தப்
பூமிக்கே பொதுக்கவிதை கனியொன்றைத் தந்த கவிஞன்
பூங்குன்றந்தனில் பிறந்த புலவன் கணியன்தான் என்கின்றபோது

புல்லரித்துப் பூரித்துப் போகுதம்மா; நம் எண்சாண் உடம்பு!
அந்நாளில் புலவரெல்லாம் அகிலத்தை ஆளுகின்ற
அரசர்களின் அவைக்களத்தில் அரிய தமிழ்க் கவிகள்பாடி
ஆனையென்றும் சேனையென்றும் ஆயிரம் பொற்கிழிகள் என்றும்
மானியங்கள் மற்றும் பல பரிசில் என்றும் மலைமலையாய்ப்
பெற்றிடுவர்!



இந்நாளில் சில புலவர்போல் வாழ்வார்க்கு வாழ்த்துரைத்து
இன்னலுற்று அவர் தாழ்வாராயின் அக்கணமே சிறகடித்து
அற்றகுளத்துப் பறவைபோல அடுத்தகுளம் பார்க்கின்ற
இயல்புடையார் அப்போதும் சிலர் இருந்திடத்தான் செய்தார்கள்!
கணியூர்ப் பூங்குன்றனோ; அவர்கண்டு கவலைமிகக்
கொண்டதனால்
அணிமணிகள் தமிழில் செய்து அரசர்க்கும் வள்ளல்கட்கும்
பூட்டி மகிழ்வதிலே ஆர்வமொரு கடுகளவும் காட்டாமல்
இருந்திடவே;
நீட்டி முழக்கிச் சிலபேர்; “அரசை அணுகிப் பரிசு பெறப்
பாடல்களை இயற்றிடுக!” எனக் கேட்டபோது – கணியன்;
பக்குவமாய் விடையளித்து அவர் விருப்பமதைத் தட்டிக்
கழித்தான்!

“நாடு பற்றிப் பாடுகின்றீர் – நன்று! நன்று!
நாடாளும் மன்னர் பற்றிப் பாடுகின்றீர் – அதுவும் நன்று!
நாடுதனை மீட்பதற்கும் புதிதாகப் பறிப்பதற்கும்
கேடுகளைச் சுமந்து விழுப்புண்கள் ஏந்துகின்ற
பீடுநடை வீரர் பற்றிப் பாடுகின்றீர் – மிகவும் நன்று!
ஏடுகொள்ளா இலக்கியங்கள் காதலையும்
களம்புகுவோர் காதையையும்
எடுத்தியம்பும் காரணத்தால் என்வழியைத்
தனிவழியாய் ஆக்கிக்கொண்டு

எல்லா ஊரும் எமது ஊரே
எல்லா மனிதரும் எமது உறவே – என
எழுதத் தொடங்குகின்றேன்” என்றான்!

நற்றிணையில் வருகின்ற காதல் பாட்டொன்றைக் கூடக்
கற்றறிவாளன் கணியன் பூங்குன்றன் எழுதுங்கால்
“மருந்துக்கு உதவுகின்ற மரத்தின் பட்டைகளை
மட்டுமன்றி – அந்த
மரத்தையே வேரோடு பிடுங்குவதோ?” எனக்கேட்டு,
பயன்படுவன எதனையும் பாதுகாக்க வேண்டுமெனப்
பாங்காக அறிவுரையைப் பகருகின்றான் உலகிற்கு!

‘ஒரே உலகம்’ எனும் கொள்கைதனை –
மனிதரெல்லாம்
‘ஒரே குலம்’ எனும் தத்துவத்தைப் புவியில்,
கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு
முன் தோன்றிய மூத்த குடிப்பிறந்த தமிழ்க்
கணியன் பூங்குன்றன், கவிதை நடைச்
சொல்லூன்றி நிலைநாட்டுகின்றான்!

விதிப்பயனே எல்லாம் என்றுரைத்துச் சோர்ந்து
கதியற்றுக் கன்னத்தில் கைவைப்போர்தனைப் பார்த்து
“நன்மைக்கும் தீமைக்கும் காரணங்கள்
நமது செயல்களேயன்றி பிறரல்ல” என்று
நயம்பட உரைக்கின்றான் அந்த நற்றமிழ்ப்புலவன்!

அம்மட்டோ?

வேதனைகள் விரைந்து தொடர்வதும் – அவை
விலகித் தொலைந்து போவதும் கூட
நாம் ஏற்றிடும் செயல்களால் என்றே
நன்கு கணித்து நவில்கின்றான் கணியன்!
‘பிறந்த உயிர்கள் இந்த மண்ணில்
இறந்து மறைதல் புதிதுமல்ல;
இன்பமொன்றுக்காகவே வாழ்க்கை என்பதும்
துன்பம் வந்திடின் வாழ்வை வெறுப்பதும்
உறுதி கொண்ட மாந்தர்தம்
உளத்திற்கேற்ற உயரிய செயலுமல்ல!
ஆற்றொடு போகும் தெப்பம் போல்
ஆடியும் அசைந்தும் அமைதி கண்டும்
ஆருயிர்ப் பயணம் அவனியில் நடக்கும்! எனவே
ஆன்றோர் காட்டிய அரிய வினைகளைத் தொடர்க!
செழிப்பில் திளைத்தோர்க்கு சிரம் தாழ்த்தலுமில்லை;
சிறியோர் எனப்படுவோரை இகழ்ந்துரைத்தலுமில்லை!’

இவ்வாறு;

உலக ஒற்றுமை, ஒரு குலக் கொள்கை,
உயிரின் தன்மை, உயரிய வினைகள் – வாழ்வில்
உற்ற துன்பமும் உவகையின்பமும் ஒன்றெனக்
கருதுதல்,
உயர்ந்துள்ள செல்வர்க்குப் பணியாமை –வீணில்
உழன்றிடும் சிறியோரை இகழாமை; எனப் பல
வண்ணமிகு மலர்கள் கொண்டு – உயர்
எண்ணங்களைத் தொடுத்தளிக்கும் பெரும்
உள்ளம் காணுகின்றோம் இந்தக் கவிதையினில்; புது
வெள்ளம் போல் இக்கருத்து பரவட்டும் காசினியில்!

ஆனால் ஒன்று;
ஊரெல்லாம் இணைந்து ஒருலகாய் ஆவதென்பதும்
உறவுகொண்டே மனிதக் குலம் ஒன்றே எனத் திகழ்வதும்
உயரிய குறிக்கோளாம் என்றுரைத்த புலவன் கூட
தனது ஊரை மறவாமல் பூங்குன்றமென இணைத்தே
கணியன் பூங்குன்றன் எனும்
கவிஞனாய் உலவியதைக் கவனமுடன்
எண்ணிப் பார்த்தால் – அந்த மாமனிதனையும்
மண்ணின் பற்று விடவில்லை என்பதுதான்
உண்மையன்றோ?

***

“யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
இன்னாது என்றலும் இலமே; ‘மின்னொடு
வானம் தண்துளி தலைஇ, ஆறாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே.”

(புறநானூறு–பாடல்: 192,
பாடியவர்: கணியன் பூங்குன்றன்)

பொருள் விளக்கம்:
கேளிர் = உறவினர். புதுவதன்று = புதியதல்ல.
முனிவின் = வெறுப்பின் காரணமாக. புணை =
தெப்பம். திறவோர் = ஆன்றோர்.
இலம் = இல்லாமை. (இல்லையென்ற பொருளில்
இங்கு வரும்)

– **கலைஞரின்** சங்கத்தமிழ் நூலிலிருந்து...





# சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் ஆதாரங்கள்

## செங்குன்றம் ஏரி

செங்குன்றம் ஏரியானது கொசஸ்தலையாற்றின் கடைநிலை ஏரியாகும். சென்னைக் குடிநீருக்காக 1882ஆம் ஆண்டு தாமரைப்பாக்கத்தில் கொசஸ்தலையாற்றின் குறுக்கே அணைக்கட்டு ஒன்று சென்னைக் குடிநீர் மற்றும் பாசனத் திட்டத்தில் உருவாக்கப்பட்டு மேல்வரத்துக்கால்வாயின் மூலம் சோழவரம் ஏரிக்கு நீர் கொண்டு செல்லப்பட்டுக் கீழ்வரத்துக்கால்வாய் மூலம் செங்குன்றம் ஏரிக்கு நீர் பெறப்படுகிறது.

இந்த ஏரியானது 500 மில்லியன் கன அடி தாங்கும் சக்தி கொண்ட மிகச் சிறிய ஏரியாக இருந்தது. 1875–1876ஆம் ஆண்டு சென்னைக் குடிநீர் மற்றும் பாசனத்திற்காக 700 மில்லியன் கன அடி கொள்ளுமளவுக்கு 15 அடி உயரமாகக் கரை உயர்த்தப்பட்டது.

இந்த ஏரியானது ஐந்தாயிரம் மக்கள் தொகைக் குடிநீர் வசதி பெறுவதற்கு அப்போது வடிவமைக்கப்பட்டது. இந்த ஏரியின் பாசன உரிமம் 1962ஆம் ஆண்டு ஜூன் 13ஆம் தேதி அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் 1969–1972ஆம் ஆண்டு மேலும் இரண்டு அடி உயரம் கரையை உயர்த்திக் கூடுதலாக 453 மில்லியன் கன அடி கொள்ளளவு தாங்கும் சக்தி கொண்டதாக உருவாக்கப்பட்டது.

செங்குன்றம் ஏரியில் பம்மதுகுளம் மற்றும் பொத்தூர் ஏரியின் உபரிநீரும் வந்தடைகிறது. மேலும் கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தின் நீரானது பூண்டி ஏரியின் வழியாகக் கிருஷ்ணா கால்வாயின் மூலம் செங்குன்றம் ஏரி வந்து சேர்கின்றது. மேலும், பேபி கால்வாய் மூலம் பூண்டி ஏரியிலிருந்து சோழவரம் ஏரியின் வழியாகச் செங்குன்றம் ஏரிக்குக் கிருஷ்ணா நீர் பெறப்படுகிறது.

கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தின் மூலம் செங்குன்றம் ஏரியின் கொள்ளளவு 3,300 மில்லியன் கன அடியாகவும், கரையின் உயரத்தை 21.20 அடி கொண்டதாகவும் மாற்றியமைக்கப்பட்டது. இந்த ஏரியிலிருந்து மூன்று இடங்களில் பூமிக்கு அடியில் குழாய் அமைத்து கீழ்ப்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் சென்று சுத்திகரிக்கப்பட்டு சென்னைக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சென்னைக் குடிநீர் வழங்கும் ஏரிகளுள் முதன்மையான ஏரியாக இது திகழ்கிறது.

இந்த ஏரியானது மழைக்காலங்களில் 21.20 அடி தண்ணீர் தேக்கி வைக்கும் அளவுக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஏரியின் உபரிநீர் செல்வதற்குத் தகுந்த வடிகால்கள் அமைக்கப்பட்டு மணலி, சடையாங்குப்பம் வழியாக எண்ணூர் கழிமுகத்துவாரம் சென்று கடலில் கலக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## சோழவரம் ஏரி

சோழவரம் ஏரியானது 1871க்கு முன்பே, குறைந்த கொள்ளளவுடன் அமைக்கப்பட்டது. சென்னைக் குடிநீருக்காக, தாமரைப்பாக்கம் அணைக்கட்டு அமைக்கப்படும் பொழுது அதன் ஒரு பகுதிப் பணியாக ஏரியின் மட்ட அளவு 60.12 அடி கொண்டதாக அமைக்கப்பட்டது. அதன் பிறகு அதன் மட்ட அளவு 60.50 அடி உயர்த்தப்பட்டது. சோழவரம் ஏரியானது, செங்குன்றம் ஏரிக்கும் தாமரைப்பாக்கம் அணைக்கட்டிற்கும் சமநிலை ஏரியாகச் செயல்படுகிறது. 1962இல் பாசன வசதியை, சென்னைக் குடிநீருக்காக அரசால் விலை கொடுத்து எடுத்துக்கொள்ளப்பட்டது. கொசஸ்தலையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தாமரைப்பாக்கம் அணையிலிருந்து மேல்வரத்துக் கால்வாயின் மூலம் தண்ணீர் சோழவரம் நீர்த்தேக்கத்திற்கும், சோழவரம்



நீர்த்தேக்கத்திலிருந்து கீழ்வரத்துக்கால்வாய் மூலம் செங்குன்றம் நீர்த்தேக்கத்திற்கும் தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. சோழவரம் நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 881 மில்லியன் கன அடி ஆகும். ஏரியிலிருந்து உபரிநீர் செல்ல வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன.



### செம்பரம்பாக்கம் ஏரி

செம்பரம்பாக்கம் ஏரியானது தமிழ்நாட்டிலுள்ள மிகப்பெரிய ஏரிகளுள் ஒன்றாகும். இது சென்னை–பெங்களூர் செல்லும் நெடுஞ்சாலைக்குத் தெற்கில் அமைந்துள்ளது. இந்த ஏரி சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் பல்லவர் காலத்தில் சிறு ஏரியாக அமைக்கப்பட்டதாகும். இந்த ஏரிக்குப் பாலாறு அணைக்கட்டின் வடிநிலக் கடைசி ஏரியான திருப்பெரும்புதூர் ஏரியிலிருந்து உபரிநீர் சௌத்திரிக்கால் வாய்க்கால் மூலமாக வந்தடைகிறது. மேலும், கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கொரட்டூர் அணைக்கட்டிலிருந்து புதிய பங்காரு கால்வாய் மூலமாகவும் நீர்வரத்துப் பெறப்படுகிறது. இந்த ஏரியிலிருந்து வெளியேறும் மிகைநீர் அடையாறு ஆற்றில் திருநீர்மலை அருகில் விழுந்து தென்சென்னை அடையாறு முகத்துவாரத்தின் மூலம் வங்கக் கடலில் கலக்கிறது.

இந்த ஏரி, சென்னை மாநகரத்திற்கு முக்கியமான ஏரியாகையால் பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து இணைப்புக் கால்வாய் மூலமாகக் கிருஷ்ணா நீரைக் கொண்டு வருவதற்கு ஏதுவாக இந்த ஏரி பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஏரி சென்னைக்குக் குடிநீர் வழங்கும் இரண்டாவது கடைநிலை ஏரியாகும். இதன் மொத்தக் கொள்ளளவு 3,120 மில்லியன் கனஅடியாகும். கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தின்படி இந்த ஏரியின் முழு கொள்ளளவு இரண்டடிக்கு உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், தற்பொழுது சுமார் 7,226 ஏக்கர் பரப்பளவிற்குப் பாசனம் நடைபெற்று வருகிறது. இப்பாசனத்திற்குப் பாதிப்பு இல்லாத வகையில் சென்னை மாநகர குடிநீருக்காகவும் இந்த ஏரி பயன்பெற்று வருகிறது.

மேலும், தற்பொழுது புதியதாகக் கட்டப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 675 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுப்பதற்கு உள்வாங்கிக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து சென்னைப் பெருநகரக் குடிநீரின் பயன்பாட்டிற்காக நாளொன்றுக்கு 600 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுப்பதற்கும், சிப்காட் தொழிற்சாலைகளுக்கு நாளொன்றுக்கு 75 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### பூண்டி நீர்த்தேக்கம் (சத்தியமூர்த்தி சாகர்)

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டத்தில் பூண்டி நீர்த்தேக்கக் கட்டுமானப் பணிகள் 1940ஆம் ஆண்டு துவங்கப்பட்டு 1944ஆம் ஆண்டில் பூண்டி அருகே கொசஸ்தலையாற்றின் குறுக்கே கட்டி முடிக்கப்பட்டுப் பூண்டி சத்தியமூர்த்தி சாகர் என்று அழைக்கப்படுகிறது. இதற்கான மதிப்பீட்டுச் செலவினம் சென்னை மாநகராட்சி மூலம் நிதி ஒதுக்கீடு ரூ.65 இலட்சம் பெறப்பட்டுச் சென்னைக்குக் குடிநீர் வழங்குவதற்கு மட்டுமே கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. இந்நீர்த்தேக்கமானது சென்னையிலிருந்து 57 கி.மீ. தூரத்திலும் திருவள்ளூரிலிருந்து 12 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

1996க்கு முன்புவரை பூண்டி நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 2,521 மில்லியன் கன அடியாக இருந்தது. இந்தக் கொள்ளளவு சென்னைக் குடிநீர்த் தேவைக்குக் குறைவாக இருந்ததால் கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் இந்நீர்த்தேக்கத்தின் கொள்ளளவை அதிகப்படுத்தி முழுநீர் மட்டத்தினை 2 அடி உயர்த்தி அதற்கேற்ப கரையையும் உயர்த்தி பலப்படுத்தி அதன் கொள்ளளவை 3,231 மி.க.அடியாக உயர்த்தப்பட்டது.

சென்னை மாநகரப் பெருகிவரும் குடிநீரின் தேவைக்காகக் கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் வருடத்திற்கு 15 டி.எம்.சி. அளவுக்கு நீர்பெறும் வண்ணம் பூண்டி நீர்த்தேக்கத்துடன் செம்பரம்பாக்கம் ஏரி மற்றும் புழல் ஏரிகளின் நீர்க்கொள்ளளவு உயர்த்தப்பட்டது.

அது தவிர செம்பரம்பாக்கம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டு செல்லும் வகையில் ஓர் இணைப்புக் கால்வாயும், அதிலிருந்து புழல் ஏரிக்குத் தண்ணீர் கொண்டு செல்ல 31 கி.மீ. நீளக் கால்வாயும் உள்ளது. இந்த நீர்த்தேக்கமும் அதனைச் சார்ந்த கட்டமைப்புகளும், திருவள்ளூரில் இயங்கும் நீர்வளத்துறையின்கீழ் கொசஸ்தலையார் வடிநிலக் கோட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

### புதிய வீராணம் திட்டம்

தமிழ்நாட்டின் மிகப் பெரிய ஏரிகளில் ஒன்றான வீராணம் ஏரி பராந்தகச் சோழமன்னரால் கி.பி. 900இல் கட்டப்பட்டது. கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் அமைந்துள்ள இந்த ஏரி, சிதம்பரம் நகரிலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்த ஏரியின் பாசனப் பரப்பு 44,856 ஏக்கர்; இதன் கொள்ளளவு 1,465 மி.கன அடி; நீர்ப்பிடிப்புப் பரப்பு 423 சதுர கி.மீ. ஆகும்.

கீழணையிலிருந்து வடவாறு மூலமாக வீராணம் ஏரிக்குப் பாசன நீர் பெறப்படுகிறது. வடவாற்றில் உள்ள 24 வாய்க்கால்கள் மூலம் நேரடியாக 11,178 ஏக்கர் பாசனம் நடைபெறுகின்றது. அதன் பின்பு வடவார் வீராணம் ஏரியில் கலக்கின்றது. வீராணம் ஏரியிலிருந்து 34 வாய்க்கால்கள் மூலம் 44,856 ஏக்கர் பாசனம் நடைபெறுகின்றது. வெள்ளாற்றின் வடிநிலப் பரப்பிலிருந்து நீர்வரத்து வரும் வரை சேத்தியாதோப்பு அணைக்கட்டுப் பாசனம் பகுதிகளுக்கு 44,000 ஏக்கருக்குப் பாசன நீர் வழங்கப்படுகிறது.



சென்னைப் பெருநகரின் குடிநீர் தேவையைக் கருதி வீராணம் ஏரியின் உபரிநீரைச் சென்னைக்குக் கொண்டு செல்ல திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு, சென்னை மாநகராட்சிக் குடிநீர் தேவையை ஈடு செய்து வருகிறது.

### கண்ணன்கோட்டை–தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கம்

ஏற்கெனவே உள்ள பூண்டி, புழல், சோழவரம், செம்பரம்பாக்கம் ஆகிய நான்கு நீர்த்தேக்கங்களுடன் 5ஆவது நீர்த்தேக்கமாகக் கண்ணன்கோட்டை–தேர்வாய்க்கண்டிகை நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது. ரூ.380 கோடி மதிப்பில் அமையப்பெற்றுள்ள இந்நீர்த்தேக்கத்தின் மூலம் புதியதாக ஏற்கெனவே பாசன வசதி பெற்ற கண்ணன்கோட்டை, இராஜனேரி மற்றும் தேர்வாய்க்கண்டிகை பெரிய ஏரிகளின் நஞ்சை நிலங்களான 700 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற 5 மதகுகள் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன. சென்னைக் குடிநீருக்காக உள்வாங்கிக் கோபுரம் அமைக்கப்பட்டுச் சேமிப்பு நீரினை நாள் ஒன்றுக்கு 66 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் கண்டலேறு–பூண்டி கால்வாயின் தொலைக்கல் 2,200 மீட்டரில் 8,600 மீட்டர் நீளத்திற்கு புதிய கால்வாய் அமைக்கப்பட்டு நீர்த்தேக்கத்திற்குக் கிருஷ்ணா நதிநீரைக் கொண்டு செல்லும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நீர்த்தேக்கத்தில் 500 மில்லியன் கனஅடி நீரை 1,100 ஏக்கர் பரப்பளவில் இரண்டு நிரப்புதல் மூலம் வருடத்திற்கு 1,000 மில்லியன் கனஅடி (1 டி.எம்.சி. ) நீரினைச் சேமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நீர்த்தேக்கம் சுற்றுவட்டாரப் பகுதிகளுக்குச் சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு மையமாக அமையப்பெறும். மேலும், நீர்த்தேக்கத்தின் ஒரு பகுதியில் பத்தாயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டு அடர்வனம் அமைக்கப்பட்டுள்ளது. நீர்த்தேக்கத்தின் மூலம் மீன்வளமும் பெருக வாய்ப்புள்ளது.

இந்த நீர்த்தேக்கத்தினால் நீர்த்தேக்கம் அமைந்துள்ள கிராமங்கள் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் நிலத்தடி நீர் உயரும். 2021 வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் பெய்த பருவ மழையினால் நீர்த்தேக்கத்தில் 138 மில்லியன் கன அடி நீர் சேமிக்கப்பட்டுள்ளது. தற்போது சென்னை மாநகரத்திற்கு மாதம் ஒன்றிற்கு 1 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படுகிறது. குடிநீர் வழங்கும் நான்கு நீர்த்தேக்கங்கள் மூலம் 11 டி.எம்.சி. நீர் என்பது இப்பொழுது 11.75 டி.எம்.சி.ஆக உயர்ந்துள்ளது.

### காட்டூர் தத்தமஞ்சி நீர்த்தேக்கம்

சென்னை மாநகர மக்களுக்குச் சராசரியாக மாதம் ஒன்றிற்கு 1 டி.எம்.சி.க்கு மேல் குடிநீர் விநியோகிக்க வேண்டியுள்ளது. எனவே, சென்னை மாநகரக் குடிநீர்த் தேவைக்காகப் புதியதாக மேலும், ஓர் நீர்த்தேக்கம் அமைக்க வேண்டியுள்ளது. இதற்காகத் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் மீஞ்சூர் அருகே காட்டூர், தத்தமஞ்சி ஆகிய இரண்டு ஏரிகளை இணைத்து 6ஆவது புதிய நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் நபார்டு வங்கி மூலம் ரூ.62.36 கோடி நிதி உதவி பெற்றுச் செயல்படுத்தப்படுகிறது. கடல் நீர் உட்புகுதலைத் தடுக்கச் சுவரும், 15 இடங்களில் செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. இப்பணிகள் ஜூலை 2022க்குள் முடித்துப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட உள்ளது.

### கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம்

சென்னைக் குடிநீர்த் தேவைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாகக் கிருஷ்ணா படுகையில் இருந்து மகாராஷ்டிரம், கருநாடகம் மற்றும் தெலுங்கானா உள்ளிட்ட ஆந்திர மாநிலங்கள் தலா 5 டி.எம்.சி. அடி நீர் தமிழ்நாட்டிற்கு வழங்கிடும் வகையில், 14.04.1976 அன்று ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி, மேற்கண்ட மூன்று மாநிலங்களும் அளிக்கும் நீரை ஆந்திர மாநிலம் வழியாகச் சென்னைக்குக் கொண்டு செல்ல ஒப்புக் கொள்ளப்பட்டது. இதனை ஒட்டி, தமிழ்நாடு – ஆந்திர முதல்வர்களிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, அதன் முடிவாக 18.04.1983 அன்று, இருமாநிலங்களுக்கிடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது,

இத்திட்ட ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களின்படி, சென்னைக் குடிநீர் தேவைக்காக, தண்ணீர் இழப்பாக 3 டி.எம்.சி. அடி தண்ணீர் போக, மீதமுள்ள 12 டி.எம்.சி. அடி தண்ணீரை ஒவ்வொரு ஆண்டும், ஆந்திர அரசு பின்வருமாறு தமிழ்நாடு எல்லையில் வழங்க வேண்டும்.

❖ ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை – 4 டி.எம்.சி.யும்

❖ ஜூலை முதல் அக்டோபர் மாதம் வரை – 8 டி.எம்.சி.யும்

❖ இழப்பிற்காக (ஆவியாகுதல் மற்றும் வாய்க்காலில் கொண்டு செல்லும்பொழுது) – 3 டி.எம்.சி.யும்

ஆக மொத்தம் 15 டி.எம்.சி. ஸ்ரீசைலத்திலிருந்து பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1983ஆம் ஆண்டு இரு மாநிலங்களிலும் துவக்கப்பட்டுச் செப்டம்பர் 1996இல் சென்னைக்குக் கிருஷ்ணா நீர் வந்து சேர்ந்தது. 1996 முதல் 28.01.2022 வரை மொத்தம் 101.991 டி.எம்.சி. அடி தண்ணீர் தமிழ்நாடு எல்லையில் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடிகிறது.

***– நீர்வளத்துறை***

# “தமிழ் மொழிப் பற்றாளர்”



“இந்தித் திணிப்பு எதிர்ப்பு – தமிழ் இந்தியாவின் ஆட்சி மொழி – மத நல்லிணக்கம் – சிறுபான்மை மக்களின் கல்வி வளர்ச்சி எனத் தமிழ்ச் சமூகத்துக்கும் இந்தியச் சிறுபான்மையினருக்கும் கலங்கரை விளக்கமாகத் திகழும் ‘கண்ணியத் தென்றல்’ காயிதே மில்லத் பிறந்தநாளில் அவர்தம் தொண்டை நினைவுகூர்கிறேன்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு

இந்தியத் திருநாட்டிலே குறிப்பாகவும், சிறப்பாகவும் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டத்தக்க வகையிலே தமிழ்நாட்டில் மதவேறுபாடுகளைக் களையவும், அதன் காரணமாக வருகின்ற பூசல்களுக்குத் தடுப்புச் சுவர் எழுப்பவும் பாடுபட்ட ஏந்தல் என்ற காரணத்தால்தான் பெரியாரை, அண்ணாவை எண்ணுகிற நேரத்தில் தொடர்ந்து எண்ணப்படுகின்ற ஒரு பெயராகக் காயிதே மில்லத் அவர்களின் பெயரும் இருந்து வருகின்றது. சகிப்புத் தன்மையின் மறுவடிவமாகத் திகழ்ந்தவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள். எளிமையின் திருவுருவமாகத் திகழ்ந்தவர் காயிதே மில்லத் அவர்கள். இனிய இயல்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்தவர் காயிதே மில்லத் அவர்கள்.


எனக்கிருக்கின்ற ஆறுதல் எல்லாம் அவர் வாழ்ந்த காலத்திலே வாழ்ந்தது மாத்திரமல்ல, வாழ்ந்து கொண்டிருப்பது மாத்திரமல்ல, அவரோடு நெருங்கிப் பழகுகின்ற, அளவளாவுகின்ற நிலைமைகள் பலமுறை ஏற்பட்டதுதான் எனக்கிருக்கின்ற ஆறுதல், மனமகிழ்ச்சி.

தலைசிறந்த தேசப் பக்தர் காயிதே மில்லத் அவர்கள். ஆனால், வானத்திலே இருக்கின்ற சூரியனைப் பார்த்துச் சில நேரங்களில் பூமியிலே இருக்கின்ற ஓணான்கள் அண்ணாந்து பார்த்துப் பழிப்பதுண்டு. சூரியனுக்கு அருகே சென்றால் என்னவாகுமென்று அதற்குத் தெரியாது. நமக்குத் தெரியும். அதைப்போல காயிதே மில்லத் அவர்களின் தேசப் பக்தியைக் கேலி செய்கின்ற, விமர்சனம் செய்கின்ற சிலர், அவர் மறைந்த பிறகும்கூட இன்றைக்கும் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது வேதனையே மிஞ்சுகின்றது. ஏனென்றால், அவர் தலைசிறந்த தேசப் பக்தர் என்பதற்கு வேறு எடுத்துக்காட்டுகள் தேவையில்லை. பாராளுமன்றத்திலே அவர் ஆற்றிய உரை ஒன்றே போதுமானது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின்போது, பாகிஸ்தான் போராட்டத்தின்போது, இந்திய இராணுவத்தில் என்னுடைய மகனைச் சேர்த்துப் போருக்கு அனுப்ப நான் தயாராக இருக்கிறேன் என்று சொன்ன உரை ஒன்றே அவர் எத்தகைய தேசப் பக்தர் என்பதற்குச் சரியான சான்றாகும்.

அப்படிப்பட்ட தேசப் பக்தர், நாட்டுப் பற்றாளர், மொழிப் பற்றாளரும்கூட! தமிழ்மொழி இந்தியாவின் பொது மொழியாக, தேசிய மொழியாக ஆக்க வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெளிவாகத் தெரிவித்தவர். இந்தியாவின் பொது மொழியாக எது இருப்பது என்ற சர்ச்சை அரசியல் நிர்ணயச் சபையிலே எழுந்த நேரத்தில், இலக்கிய ரீதியாக, இலக்கண ரீதியாக, வரலாற்று ரீதியாக, வளம் பொருந்திய ஒரே மொழி தமிழ் மொழிதான், அந்த மொழிதான் இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டுமென்று எடுத்துக்கூறித் தமிழ் மொழிப் பற்றாளர் என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

*– முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் 95ஆவது பிறந்தநாளையொட்டி அவரது நினைவிடத்திற்குச் சென்று மலரஞ்சலி செலுத்தி ஆற்றிய உரையிலிருந்து...*

ஜூன் 26: ம.பொ.சி. அவர்களின் பிறந்தநாள்



# 'சிலம்புச் செல்வர்'

இந்திய விடுதலைப் போராட்ட வீரர், சிறந்த தமிழ் அறிஞர், சிலப்பதிகாரத்தின் மீது ஆளுமை கொண்டிருந்தமையால் 'சிலம்புச் செல்வர்' என அனைவராலும் அறியப்பட்டவர், முன்னாள் மேலவைத் தலைவர் திரு.ம.பொ. சிவஞானம் அவர்கள். மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம் அவர்கள், சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியிலுள்ள சால்வன்குப்பத்தில் 26.06.1906 அன்று பொன்னுசாமி – சிவகாமி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். குடும்பத்தின் ஏழ்மை நிலை காரணமாக ம.பொ.சி அவர்கள் மூன்றாம் வகுப்பிற்கு மேல் பள்ளிப்படிப்பினைத் தொடர இயலாமல் குழந்தைப் பருவத்திலேயே நெசவு மற்றும் அச்சுக்கோர்க்கும் பணியினைச் செய்துவந்தார். பின்னர், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைவாசம் சென்றார். எழுநூறு நாட்களுக்கு மேல் சிறையில் இருந்த ம.பொ.சி. அவர்கள் தன் சிறைவாசத்தைச் சிலப்பதிகாரத்தைக் கற்றுக்கொள்ளப் பயன்படுத்தினார். 1945ஆம் ஆண்டு ம.பொ.சி அவர்கள் 'தமிழ் முரசு' எனும் இதழைத் துவக்கி நடத்திவந்தார்.

ம.பொ. சிவஞானம் அவர்கள் மெட்ராஸ் ஸ்டேட் என்பதைத் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யத் தீவிரமாகப் போராடினார். மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது, அதனை எதிர்த்து, 'தலை கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' என முழக்கமிட்டுப் போராடித் தமிழகத்தின் தலைநகராகச் சென்னை தொடர வேண்டும் என வலியுறுத்தினார். திருவேங்கடத்தைத் (திருப்பதி) தமிழகத்துடன் இணைக்கப் போராடி, அதில் வெற்றியடையாவிடினும், அப்போராட்டத்தின்மூலம் திருத்தணியைத் தமிழகத்திற்குப் பெற்றுத்தந்தார். மேலும், ம.பொ.சி அவர்களின் போராட்டத்தால் குமரியும் செங்கோட்டையும் தமிழகத்திற்குக் கிடைத்தது. சிலம்புச்செல்வர் என அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்ட ம.பொ.சி அவர்கள் தனது 89ஆவது வயதில் 03.10.1995 அன்று இயற்கை எய்தினார்.

ஜூன் 24: கவியரசு கண்ணதாசன் அவர்களின் பிறந்தநாள்

# 'கவியரசர்'



கவியரசு கண்ணதாசன் அவர்கள், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரை அடுத்த சிறுகூடல்பட்டி கிராமத்தில் சாத்தப்பன்–விசாலாட்சி இணையருக்கு 24.06.1927 அன்று மகனாகப் பிறந்தார். இந்து மதத்தில் பிறந்தவராயினும் மதவேற்றுமை கருதாமல் இயேசு காவியம் பாடியவர். கம்பரின் செய்யுளிலும், பாரதியாரின் பாடல்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

கவியரசு கண்ணதாசன் அவர்கள் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்கள், நவீனங்கள், கட்டுரைகள் எழுதியவர். திருமகள், திரை ஒலி, மேதாவி, சண்ட மாருதம், தென்றல் கண்ணதாசன் மாத இதழ், கடிதம் ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்துள்ளார். இவரது ஆட்டனத்தி ஆதிமந்தி செய்யுள் தமிழ்நாடு அரசு பாடநூலில் இடம்பெற்றுள்ளது.

கவியரசு கண்ணதாசன் அவர்கள், 1970ஆம் ஆண்டு மத்திய, மாநில அரசின் சிறந்த பாடலாசிரியர் விருதுபெற்றார். தமிழ்நாடு அரசின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர். 1979ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது பெற்ற கவியரசு கண்ணதாசன் அவர்கள் 17.10.1981 அன்று இயற்கை எய்தினார்.



# “அனைத்தும் சாத்தியம்”
# மாற்றுத்திறனாளிகளுக்கான அருங்காட்சியகம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 06.06.2022 அன்று சென்னை, காமராஜர் சாலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், ரூ.1 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள “அனைத்தும் சாத்தியம்” என்ற மாற்றுத்திறனாளிகளுக்கான அருங்காட்சியகத்தைத் திறந்துவைத்து, மாற்றுத்திறனாளிகள் தாங்கள் பயன்படுத்த விரும்பும் உதவி உபகரணங்கள் வகை மற்றும் மாதிரியின் தேர்வினை வழங்கும் வகையில் நேரடி மானியம் வழங்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாற்றுத்திறனாளிகளின் நலனை பேணிக் காத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதல்முறையாக மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்விற்காகத் தனித் துறையை உருவாக்கினார். மேலும், அவர்கள் உரிய மரியாதையுடன் அழைக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் “மாற்றுத்திறனாளிகள்” என்ற சொல்லையும் அறிமுகப்படுத்தினார். மாற்றுத்திறனாளிகளின் வாழ்வினை மேம்படுத்தும் வகையில், அவர்களது கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அதிகக் கவனம் செலுத்தி வருவதோடு, மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் சுயமரியாதையுடனும், சம உரிமையுடனும் வாழப் பல்வேறு திட்டங்களையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.04.2022 அன்று சட்டப்பேரவையில் பேசும்போது, “மாற்றுத்திறனாளிகளுக்கென்று அமைக்கப்பட்டுள்ள ஆணையரகத்திற்கு நானே நேரடியாகச் சென்று, சம்பந்தப்பட்ட அமைப்புகளுடைய நிருவாகிகளை அழைத்து, இதில் என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன; என்னென்ன பிரச்சினைகளையெல்லாம் நாங்கள் தீர்த்து வைத்திருக்கின்றோம்; அதனால் நீங்கள் பெற்றிருக்கக்கூடிய நன்மைகள் என்ன; இன்னும் மீண்டும் என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி ஆலோசிப்பதற்காக மிக விரைவிலே ஒரு பெரிய ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, நிச்சயமாக அதற்குரிய பரிகாரத்தை இந்த அரசு காணும்” என்று தெரிவித்தார்.

அதன் அடிப்படையில், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் செயல்பாடுகள் குறித்தும், அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் புதிய அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, தென்னிந்தியாவிலேயே முதன்முறையாக “அனைத்தும் சாத்தியம்” என்ற பெயரில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான அருங்காட்சியகத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்துப் பார்வையிட்டார். இந்த அருங்காட்சியகம், மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான உபகரணங்கள், தொழில்நுட்பச் சாதனங்கள் போன்றவற்றை காட்சியகப்படுத்தும் வகையில் செயல் விளக்க மையமாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மாற்றுத்திறனாளிக் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரையிலும், பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், மாற்றுத்திறனாளிகள் அனைவரும் தாங்கள் எதிர்கொள்ளும் தடைகளைக் கடந்து தீர்வுகளைக் காணவும் இந்த அருங்காட்சியகம் வழிவகை செய்கிறது.

இந்த அருங்காட்சியகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்குத் தடையற்ற சூழலுடன் வசிக்கக்கூடிய “மாதிரி இல்லம்” வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த அருங்காட்சியகமானது பயனாளிகள், படைப்பாளிகள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களின் சமூகத்துடனான தொடர்புகளை ஊக்குவிக்கவும், ஆராய்ச்சிகள்





மேற்கொண்டு மாற்றுத்திறனாளிகள் எந்தவிதத் தடையுமின்றி வாழும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் 21 வகையான மாற்றுத்திறன் கொண்ட நபர்கள் தங்களின் திறமையை வெளிப்படுத்தவும், ஒன்றுகூடி வாழவும், தொழில்நுட்பத் தகவல்கள் மற்றும் உதவி உபகரணங்களை உபயோகப்படுத்தப் பயிற்சியுடன் கூடிய வழிகாட்டுதலையும் பெற இந்த அருங்காட்சியகம் உதவுகிறது.

அதனைத் தொடர்ந்து, இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகள் தாங்கள் பயன்படுத்த விரும்பும் உதவி உபகரணங்கள் வகை மற்றும் மாதிரியின் தேர்வினை வழங்கும் வகையில் நேரடி மானியம் வழங்கும் திட்டத்தை (Choice Based System of providing assistive devices) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, முதற்கட்டமாக ரூ.9.50 கோடி மதிப்பில் 7,219 நபர்கள் பயன்பெறும் வகையில், மூன்றுச் சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள், காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள், மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகள் ஆகிய 5 வகையான உபகரணங்களில், 36 மாதிரிகளைப் பயனாளிகள் விருப்பத் தேர்வு முறைக்கு அறிமுகப்படுத்தி, 6 பயனாளிகளுக்கு உதவி உபகரணங்களை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நலவாரியம் மறுசீரமைக்கப்பட்டுப் புதியதாக நியமிக்கப்பட்ட அலுவல் சாரா உறுப்பினர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். மேலும், மாற்றுத்திறனாளிகளின் நலனிற்காகத் தமிழ்நாடு அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்து வருவதற்காகவும், வாரியத்தின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றி வருவதற்காகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சைகை மொழிபெயர்ப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருவதற்காகவும் நன்றி தெரிவித்து, கோரிக்கை மனுக்களை அளித்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை**

எத்தனையோ துறைகள் இருந்தாலும், நான் என் கையில் வைத்திருக்கக்கூடிய துறை இந்த மாற்றுத்திறனாளிகள் துறை என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இந்தத் துறையை நான் வைத்துக் கொண்டு இருக்கிறேன் என்று சொன்னால்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய துறையை நான் வைத்துக்கொண்டிருக்கிறேன் என்று பொருள். தலைவர் கலைஞர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் மீது நீங்காத பற்றும், பாசமும் கொண்டவர். உடல் ஊனமுற்றோர் என்ற சொல்லே, அவர்களை நோகடிக்கும் சொல்லாக இருந்த காரணத்தால்தான், அதனை மாற்றி, மாற்றுத்திறனாளிகள் என்ற தன்னம்பிக்கைச் சொல்லை உருவாக்கிக் கொடுத்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

இந்தியாவிலேயே முதன்முறையாக மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்விற்காகத் தனித் துறையை உருவாக்கினார். உருவாக்கியது மட்டுமல்ல, தன்னுடைய நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்துப் பல்வேறு திட்டங்களை அதற்காக உருவாக்கித் தந்திருக்கிறார்.

- ✪ தொழுநோய் இரவலர் மறுவாழ்வுத் திட்டம்,
- ✪ கண்ணொளி வழங்கும் திட்டம்,
- ✪ மூன்று சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலிகள், அலுமினியத் தாங்கிகள் உள்ளிட்ட கருவிகள் வழங்கும் திட்டம்,
- ✪ மாத ஓய்வூதியத் திட்டம்,
- ✪ பராமரிப்பு உதவித்தொகை,
- ✪ திருமண உதவித்தொகை,
- ✪ அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை,
- ✪ கல்வி உதவித்தொகை,
- ✪ கல்லூரிகளில் கல்விக் கட்டணம்,
- ✪ சிறப்புக் கட்டணம்,
- ✪ தேர்வுக் கட்டணம் ரத்து

இப்படிப் பல்வேறு திட்டங்கள் இன்று அமலில் இருக்கிறது என்று சொன்னால், இவை அனைத்தையும் உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அந்த வகையில் இன்னும் சிறப்புக் கவனம் எடுத்து, நாம் நல்ல முன்னெடுப்புகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம்.

இந்த ஆட்சி அமைந்த போது கொரோனா என்ற பெருந்தொற்றுப் பரவி இருந்தது. அந்தச் சூழலில், மாற்றுத்திறனாளிகளுக்குத் தடுப்பூசி போடுவதற்காகத் தடுப்பூசி மையங்களில் தனியாக ஒரு பிரிவு, தனி வரிசை, சாய்வுதள வசதி உருவாக்கித் தடுப்பூசி முகாம்களை நடத்தியிருக்கிறோம். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், வீட்டிற்கே சென்று தடுப்பூசியைச் செலுத்தி, கொரோனா பெருந்தொற்று நேரத்தில் இந்த அரசு மாற்றுத்திறனாளிகளின் பாதுகாப்பிற்கு மிகப்பெரிய நம்பிக்கையைக் கொடுத்தது.

பன்னிரெண்டாம் வகுப்புத் துணைத் தேர்வுகளைத் தனித் தேர்வர்களாக எழுத விண்ணப்பித்த மாற்றுத்திறனாளி மாணவர்கள் அனைவருக்கும் தேர்வு எழுதுவதில் இருந்து விலக்கு அளித்திருக்கிறோம். அது மட்டுமில்லாமல், அனைவரும் வெற்றி பெற்றதாக அறிவித்தோம். அவர்களுக்கு உயர் கல்வி நம்பிக்கையை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். கொரோனா தொற்று நேரத்தில், மாற்றுத்திறனாளிகளின் வீட்டிற்கே சென்று அத்தியாவசியப் பொருட்களையெல்லாம் வழங்கியிருக்கிறோம்.

அரசினுடைய ரிக்கார்டுகளில் பதிவு செய்தவர்களுக்கு மட்டுமின்றி, பதிவு செய்யப்படாத மாற்றுத்திறனாளிகளுக்கும் வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்தின்மீது மிகப்பெரிய நம்பிக்கையை ஏற்படுத்திய அரசுதான் இந்த அரசு.

இதனுடைய தொடர்ச்சியாக இந்த ஓராண்டுக் காலத்தில், எத்தனையோ அரிய பணிகள் மாற்றுத்திறனாளிகளின் நன்மைக்காக நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

✪ உதவி உபகரணங்கள் வேண்டி விண்ணப்பித்துக் காத்திருப்போர் பட்டியலிலுள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் உதவி உபகரணங்கள் வழங்க ரூ.62.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என நான் அறிவிப்பு செய்தேன்.

✪ ரூ.70.76 கோடியில், 37,660 மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

✪ 1,228 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.

✪ ரூ.360.21 கோடி அளவுக்கு 2,11,505 பயனாளிகளுக்குப் பராமரிப்பு உதவித்தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

✪ மாற்றுத்திறனாளிகளுடன் செல்லும் ஒரு உதவியாளர், அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் சாதாரணப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.



✪ மாற்றுத்திறனாளிகளின் நலனுக்கென, நமது நாட்டில் மட்டுமின்றி, உலகிலேயே முன்மாதிரித் திட்டமாக ரூ.1,709 கோடி செலவில் "RIGHTS" – அதாவது "உரிமைகள்" என்ற திட்டம் செயல்படுத்தப்படத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

✪ மாற்றுத்திறனாளிகளின் நலனிற்காகச் சிறப்பான முறையில் சேவையாற்றியவர்களுக்கு மாநில அளவிலான விருதும் வழங்கப்படுகிறது.

✪ தொழுநோயால் பாதிப்படைந்தவர்களின் மறுவாழ்விற்கான மல்லவாடி அரசு மறுவாழ்வு இல்லத்தில், ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட உள்ளது.

✪ அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், நூல் கட்டுநர் மற்றும் நூல் கட்டும் உதவியாளர் பணியிடங்களுக்குப் பார்வைக் குறைவுடைய 31 நபர்கள் சிறப்பு நேர்வாகப் பணி நியமனம் செய்யப்பட்டு உள்ளார்கள்.

✪ அறநிலையத்துறையின்கீழ் உள்ள திருக்கோயில்கள் மற்றும் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு இலவசத் திருமணத் திட்டம் அறிவிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகிறது.

இப்படி ஓராண்டில், மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்திடப் பல்வேறு நலத்திட்டங்களை நாம் அறிவித்து இருக்கிறோம்.

தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையைத் தன்னுடைய கையில் வைத்துக்கொண்டு எவ்வாறு பணியாற்றினாரோ, அதே வழியில் நின்று, நானும், இந்த அரசும் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

இந்தியாவில் மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறப்பான சேவை வழங்கியமைக்காக, தமிழ்நாடு முதல் மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களால், சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமான 03.12.2021 அன்று தமிழ்நாடு அரசுக்கு விருது வழங்கப்பட்டிருக்கிறது.



மாற்றுத்திறனாளிகளுக்கு மறுவாழ்வு வழங்கிய வகையில் இந்தியாவிலேயே சேலம் மாவட்டம் சிறந்த மாவட்டமாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

சிறப்பாகச் செயல் புரிந்தமைக்காக இந்திய அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற விருதுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 மாற்றுத்திறனாளிகளுக்கு விருது

என இந்த ''முப்பெரும் விருதுகளை'' குடியரசுத் தலைவர் அவர்களின் கையால் பெற்ற மாநிலம்தான் நம்முடைய மாநிலம்.

மாநிலத்திற்கான விருதைப் பெற்று, சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கோட்டைக்கு வந்து என்னிடத்தில் அதை வழங்கினார். அந்த விருதைப் பெறும்போது, மிகப் பெருமையாக எனக்கு இருந்தது. இத்தோடு நிற்காமல் மேலும், நாம் முன்னேற்றம் காண வேண்டும் என்று தோன்றியது. நாம் ஒவ்வொரு வருடமும் இந்த விருதுகளைப் பெறவேண்டும், அதுதான் என்னுடைய விருப்பம்.

இந்தத் துறையானது ஸ்கூட்டர் கொடுத்தோம், கருவிகளைக் கொடுத்தோம், நிதி கொடுத்தோம் என்று மட்டும் சொல்லாமல், நம்பிக்கையும் கொடுத்தோம் என்று சொல்லும் அந்த அளவுக்கு இந்தத் துறை செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அத்தகைய நம்பிக்கையை உருவாக்குவது சாதாரணமான காரியம் அல்ல, அதற்கு இந்தத் துறையில் பணியாற்றக்கூடிய அதிகாரிகள் முதல் சாதாரண அலுவலர் வரைக்கும் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியை ஆற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

துறையை நோக்கி வருபவர்கள் சிலர்தான். அந்தச் சிலரது கோரிக்கைகளைச் செவி மடுத்துக் கேட்க வேண்டும். உடனடியாக நிறைவேற்ற முடியாவிட்டாலும், சில வாரங்களுக்குள்ளாவது நிறைவேற்றித் தர வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு நம்பிக்கை இந்த அரசாங்கம்தான். அந்த நம்பிக்கையைத் துறை அதிகாரிகளும், அலுவலர்களும்தான் காப்பாற்ற வேண்டும்.

இன்றைக்கு இந்தத் துறையில் சிலவற்றில் நாம் இன்னும் அதிகக் கவனம் செலுத்தி, மாற்றுத்திறனாளிகளின் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும் என்று நான் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

UDID அட்டைகள் வழங்குவதில் கொஞ்சம் சுணக்கம் தெரிகிறது. அது உடனடியாக நீக்கப்பட்டு, கார்டு வழங்குவது விரைவுபடுத்தப்பட வேண்டும்.

அனைத்துத் திட்டங்களின் பயன்களும் மாற்றுத்திறனாளிகளுக்குத் தங்குதடையின்றிச் சென்றிட, ஆங்காங்கே முகாம்கள் நடத்தப்பட வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான சேவை அளிப்பதில் சுகாதாரம், குழந்தைகள் நலத்துறை, கல்வித்துறை ஆகியவை ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

நலத்திட்டங்களைக் கொடுப்பதோடு, மாற்றுத்திறனாளிகளுக்கு உரிய வேலைவாய்ப்பை வழங்கிட வேண்டும்.

பின்னடைவுப் பணியிடங்களை விரைந்து நிரப்புவதோடு, தனியார் நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு நல்ல வேலை கிடைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்காக நல வாரியம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில அளவிலான ஆலோசனை வாரியம் போன்றவற்றின் கூட்டங்களை அடிக்கடி நடத்தி, மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தை இதுவரை எந்த அரசும் உருவாக்காத அத்தியாயத்தை உருவாக்கிட வேண்டும் என்று இத்துறையின் அமைச்சர் என்ற முறையிலும் நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், மாற்றுத்திறனாளிகளைக் கை தூக்கி விடும் துறையாக இந்தத் துறை செயல்பட வேண்டும்.

அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மக்களின் வளர்ச்சி என்ற திராவிட மாடலுக்குள் இது போன்ற விளிம்பு நிலை மக்களின் வளர்ச்சியும், மகிழ்ச்சியும்தான் அடங்கி இருக்கிறது.

அவர்களது அனைத்துக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட வேண்டும். அவர்களது மகிழ்ச்சியில்தான், என்னுடைய மகிழ்ச்சி, இந்த அரசாங்கத்தினுடைய மகிழ்ச்சி இருக்கிறது. ஏன், இந்தத் துறையில் பணியாற்றும் அனைவரின் மகிழ்ச்சியும் இருக்கிறது என்று கூறி, இந்த அளவோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.





திரு. **சு.சிவராசு,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்

# "மியாவாக்கி அடர் வனக் காடுகள்"

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பதவியேற்றப் பின்னர், தமிழ்நாட்டில் பசுமைப்போர்வையை அதிகரித்திடும் அரசின் கொள்கையின்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், பசுமைப் போர்வையை உருவாக்கிச் சுற்றுச்சூழலை மேம்படுத்திடும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், மியாவாக்கி என்கிற அடர்வனம் உருவாக்கும் பணி கடந்த ஓர் ஆண்டில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மியாவாக்கி முறை என்பது அகிரா மியாவாக்கி என்கிற ஜப்பானியத் தாவரவியலாளரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஜப்பானிய முறையாகும். குறைந்த நிலப்பகுதியில் உரிய நடவு முறைகளுடன் அடர்த்தியாக மரங்களை நட்டு வளர்ப்பது இதன் சிறப்பாகும்.

முன்பெல்லாம் காடு வளர்ப்பு என்றால் மரப்பொருள்கள் உற்பத்திக்காக மேற்கொள்ளும் வருமானம் தரும் ஒரு செயலாகவே கருதப்பட்டது. ஆனால் கடந்த சில ஆண்டுகளில் காடு வளர்ப்பு மனிதர்களின் வாழ்வியலுக்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் எவ்வளவு இன்றியமையாதது என்பதை மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர்.



அடர் வனம் உருவாக்குவதன் மூலம் அடர்காட்டில் சுத்தமான காற்றினைச் சுவாசித்து நடைப்பயிற்சி மேற்கொள்ளும் அரிய வாய்ப்பினைப் பொதுமக்களுக்கு ஏற்படுத்துதல். வாகனங்களால் ஏற்படும் காற்று மாசு தவிர்த்துச் சுத்தமான காற்றினை மக்கள் சுவாசித்தல். மரங்கள் 10 மடங்கு வேகமாகவும், 30 மடங்கு அடர்த்தியாகவும் வளருதல், நெருக்கமான மரங்களால் பூமியில் வெப்பம் குறைதல், பறவைகள், புழு, பூச்சிகள், தேனீக்கள் அதிகளவு பெருகி வாழும் சூழல் உருவாகுதல் மற்றும் உயிர்ச்சூழல் மேம்படுதல், நிலத்தடி நீர் மட்டம் நிலை நிறுத்தப்படுதல், குறைந்த செலவில் அதிக மரங்கள் நடவு செய்து வளருதல் ஆகியன இதன் சிறப்பம்சங்களாகும். மேலும், இரண்டாண்டுகளுக்குப் பிறகு இதற்குப் பராமரிப்புத் தேவையில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அடர்வனம் உருவாக்கும் திட்டத்தினை ஊக்குவித்துச் சிறந்த வழிகாட்டுதல்களையும் வழங்கி, அடர்வனம் உருவாக்கும் பணியாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தினை முன்னிட்டு இலால்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்லபுரம் ஊராட்சியில் ஜூன்–2021 திங்களில் 9 ஏக்கர் பரப்பளவில் 1.25 இலட்சம் மரக்கன்றுகள் நடும் பணியினைத் தொடங்கிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து, பிச்சாண்டார் கோவில், தச்சங்குறிச்சி, பகளவாடி ஆகிய மூன்று ஊராட்சிகளில் 27.30 ஏக்கர் பரப்பளவில் 3.50 இலட்சம் மரக்கன்றுகளும், முசிறி நகராட்சியில் கடந்த செப்டம்பர்–2021 திங்களில் 7 ஏக்கர் பரப்பளவில் ஒரு இலட்சம் மரக்கன்றுகளும் நடவு செய்யப்பட்டன.

மேலும், இந்தியாவிலேயே மிகப்பெரிய மியாவாக்கி குறுங்காடு அடர்வனம் உருவாகுகின்ற வகையில் திருமணமேடு கொள்ளிடம் படுகைப் பகுதியில் 56 ஏக்கர்

பரப்பளவில் 8 இலட்சம் மரக்கன்றுகள் நடும் பணியானது மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு, இதுவரை 3 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 இலட்சம் மரக்கன்றுகள் நடும்பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஓராண்டில் மொத்தம் 99.30 ஏக்கர் பரப்பளவில், 8.75 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு முறையாகப் பராமரிப்புச் செய்தமையால் மரங்கள் அடர்த்தியாக வளர்ந்து பசுமையாகக் காட்சியளிக்கின்றன.

மியாவாக்கி முறையில் உருவாக்கப்பட்ட அடர்வனங்களில், நிழல் மற்றும் பிராணவாயு தருகின்ற மரங்களான வேம்பு, புங்கன், மகிழம், பாதாம், அரசு, ஆல், நாவல், வேங்கை, பாக்கு, புளி, பூவரசு, மகாகனி, மந்தாரை, சரக்கொன்றை உள்ளிட்ட 57 வகையிலான மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. இந்த அடர்வனம் அமைந்துள்ள சுற்றுப் பகுதிகளில் பூமியில் வெப்பம் குறைந்து, மக்களுக்குத் தேவையான சுத்தமான காற்றினைச் சுவாசித்திடவும், நிலத்தடி நீர் மட்டம் நிலை நிறுத்தப்படவும், பறவைகள் உள்ளிட்ட உயிரினங்கள் வாழும் உயிர்ச்சூழல் மேம்படவும் இதன்மூலம் வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.


மண்ணச்சநல்லூர் ஒன்றியம் பூனாம்பாளையத்தில் உருவாக்கப்பட்ட குறுங்காட்டில் பொதுமக்கள் நடைப்பயிற்சிக்சென்று உரிய நடைபாதை அமைப்பினை உருவாக்கி "காட்டில் நடப்போம்" என்கிற கருத்தினை மையமாகக் கொண்டு மக்கள் பயன்பாட்டிற்கு மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களால் ஜூலை 2021இல் திறந்து வைக்கப்பட்டது.

அடர்வனங்கள் உருவாக்கிட, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில், கம்பி வேலி அமைத்தல், நீர்ப்பாசன நடவடிக்கைகள், மரக்கன்றுகள் வாங்குதல், நிலத்தினைச் சமன்படுத்தும் பணி, ஆழ்துளைக் கிணறு அமைத்தல் ஆகியவற்றிற்காக மக்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பங்களிப்புடன் மொத்தம் ரூ.3 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி ஊராட்சி ஒன்றியம், பல்லபுரம் ஊராட்சியைச் சேர்ந்த பயனாளி திருமதி காந்திமதி அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது,



திருமதி **காந்திமதி**
திருச்சிராப்பள்ளி மாவட்டம்



மதிப்பிற்குரிய மாண்புமிகு தமிழக
முதலமைச்சர் அவர்களுக்கு பு. காந்திமதி ஆகிய
புண்ணியமூர்த்தி [illegible] நான் எனது அன்பான
வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்
திருச்சிராப்பள்ளி மாவட்டம் இலால்குடி
[illegible] இலால்குடி ஊராட்சி ஒன்றிய
பல்லபுரம் ஊராட்சியை சேர்ந்த நான் எங்களது
பல்லபுரம் ஊராட்சியில் அடர்வனக் காடுகள்
அமைக்கப்படுவதற்கு இடம் இருந்தது முன்பு பெரும்
கல் மண்ணு அவ்விடத்தில் [illegible] இருந்தன.
இதனால் கால்நடைகளுக்கு பாதுகாப்பு இல்லாமல்
இருந்தது.
தற்போது அங்கு அடர்வனக்காடுகள்
அமைந்துள்ளதால் பசுமையாகவும், பூக்கள் மலர்ந்தும்
மிக அழகாக உள்ளது. வெயிலின் தாக்கம்
குறைந்துள்ளது. இதமான காற்று வீசுகிறது.
இந்த அடர்வனக்காடுகள் கிடைக்க
பெற்றதற்கு பல்லபுரம் ஊராட்சி பொதுமக்கள்
மற்றும் எனது சார்பாக மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களுக்கு கோடான கோடி நன்றியையும்
பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.
தங்கள் உண்மையுள்ள
பு. காந்திமதி
100 நாள் வேலை திட்ட பயனாளி
பல்லபுரம் ஊராட்சி



டாக்டர் **மா. ஆர்த்தி,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்

# முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டம்

**வே**ளாண்மைத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்திடும் வகையில் தமிழக வரலாற்றில் முதன்முறையாக, விவசாயப் பெருமக்களை அழைத்து, அவர்களது கருத்துக்களைக் கேட்டறிந்து வேளாண்மைத்துறைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கை கடந்த 14.08.2021 அன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத்திட்டத்தில் அன்றாடத் தேவைக்கான நஞ்சில்லாக் காய்கறிகளை மகளிர், தங்களது இல்லங்களிலேயே உற்பத்திச் செய்வதற்கும், குழந்தைகள் தாவரங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், ஊரகப்பகுதிகளில் 12 வகை காய்கறி விதைகள் அடங்கிய 2 இலட்சம் விதைத்தளைகள் மானியத்தில் வழங்கப்படும் என்றும், நகர்ப்புறங்களில் 6 வகை காய்கறி விதைகள் கொண்ட 1 இலட்சம் மாடித்தோட்டத் தளைகள் மானியத்தில் வழங்கப்படும் என்றும், நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்த ஊட்டச்சத்துத் தளைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 8 வகை செடிகள் கொண்ட 2 இலட்சம் ஊட்டச்சத்துத் தளைகள் மானியத்தில் வழங்கப்படும் என்றும், காய்கறி பயிரிடும் விவசாயிகளுக்கு ரூ.15 ஆயிரம் மதிப்பிலான ஊக்கத்தொகை இடுபொருட்கள் காய்கறி குறைவாகச் சாகுபடி செய்யக் கூடிய 2 ஆயிரம் கிராமங்களில் 1,250 ஹெக்டேர் பரப்பளவில் மண்வளத்தை மேம்படுத்த இடுபொருட்கள், 638 ஹெக்டேர் பரப்பளவில் பந்தல் அமைப்பதற்கான மானியம், 1,000 ஹெக்டேர் பரப்பளவில் கீரைச் சாகுபடிக்கான மானியம் உள்ளிட்ட ரூ.95 கோடி மதிப்பீட்டிலான திட்டங்கள் செயல்படுத்த அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத்திட்டத்தின்கீழ் ரூ.6.75 கோடி செலவில் நகரப் பகுதிகளில் ரூ.900 மதிப்புடைய 6 வகையான காய்கறி விதைகள், 6 எண்ணிக்கையிலான செடி



வளர்க்கும் பைகள், 6 எண்ணிக்கையிலான இரண்டு கிலோ அளவிலான தென்னை நார்கட்டிகள், 400 கிராம் உயிர் உரங்கள், 200 கிராம் உயிரிக் கட்டுப்பாட்டுக் காரணி, 100 மி.லி. இயற்கை பூச்சிக்கொல்லி மருந்து, சாகுபடி முறைகளை விளக்கும் கையேடு ஆகியவை அடங்கிய மாடித்தோட்டத் தளைகள் ரூ.225 என்ற மானிய விலையில் தமிழ்நாடு முதலமைச்சர் பயனாளிகளுக்கு வழங்கினார். இத்திட்டத்தின்கீழ் ஒருவருக்கு அதிகபட்சமாக இரண்டு மாடித்தோட்டத்தளைகள் வரை வழங்கப்படும்.

அதேபோன்று, ஊரகப் பகுதிகளில் காய்கறித் தோட்டம் அமைப்பதை ஊக்குவிப்பதற்காக ரூ.90 இலட்சம் செலவில் ரூ.15க்கு கத்திரிக்காய், மிளகாய், வெண்டைக்காய், தக்காளி, அவரை, பீர்க்கன், புடலை, பாகல், சுரைக்காய், கொத்தவரை, சாம்பல்பூசணி, கீரைகள் ஆகிய 12 வகை காய்கறி விதைத்தளைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார். இக்காய்கறி விதைத்தளையினை இரண்டு தொகுப்புகள் வரை ஒருவர் பெற்றுக்கொள்ளலாம்.


நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்த ஊட்டச்சத்துத்தளைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், மூலிகைச் செடிகள் மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தியுடைய பழங்கள் மற்றும் காய்கறிகளை வளர்த்துப் பயன்பெற ரூ.1.50 கோடி செலவில் ரூ.25க்குப் பப்பாளி, எலுமிச்சை, முருங்கை, கறிவேப்பிலை, திப்பிலி, கற்பூரவல்லி, புதினா, சோற்றுக்கற்றாழை ஆகிய 8 செடிகள் அடங்கிய ஊட்டச்சத்துத்தளைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார். ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக ஒரு தொகுப்பு வழங்கப்படும்.

அதன்படி,காஞ்சிபுரம்மாவட்டத்தில் 4,000 எண்ணிக்கையிலான மாடித் தோட்டத்தளைகள் ரூ.27 இலட்சம், 6,200 எண்ணிக்கையிலான காய்கறி விதைத்தளைகள் ரூ.2.79 இலட்சம், 6,200 எண்ணிக்கையிலான ஊட்டச் சத்துத்தளைகள் ரூ.4.65 இலட்சம் மதிப்பில் என மொத்தம் ரூ.34.44 இலட்சம் மதிப்பில் மானியமாக வழங்கப்பட்டது.

முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் திட்டத்தின்கீழ்ப் பயன்பெற்ற காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி சு.கோமதி அவர்கள் தெரிவித்ததாவது,



திருமதி **சு.கோமதி**
காஞ்சிபுரம் மாவட்டம்



அனுப்புநர்,

சு.கோமதி w/o சுரேஷ்,
12-3-5, பிள்ளையார் கோவில் தெரு,
காஞ்சிபுரம் - 631501

பெறுநர்,

மாண்புமிகு முதல்வர் அவர்கள்,
தமிழ்நாடு,
சென்னை-9

மதிப்பிற்குரிய ஐயா,

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். தங்களது ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தோட்டக்கலைத் துறையின் மூலம் தொடங்கப்பட்ட முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறி தோட்டம் திட்டமானது தொடங்கப்பட்டது. இத்தகைய திட்டத்தின் மூலம் மானிய விலையில் [illegible] தோட்டம் எனக்கு [illegible] நிறைவான காய்கறி ஊட்டம் தரும் காய்கறிகள் உற்பத்தி செய்வது மட்டுமில்லாமல், தங்களது [illegible] காய்கறிகளை குறைந்த செலவில் உற்பத்தி செய்து குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் [illegible] தேவைகளை பூர்த்தி செய்ய மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இது போன்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு அரசுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு
உங்கள் உண்மையுள்ள,
சு.கோமதி.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள், காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள விவசாயப் பெருமக்கள் குறுவைச் சாகுபடி செய்ய மேட்டூர் அணையிலிருந்து 24.05.2022 அன்று தண்ணீர் திறந்து வைத்து மலர் தூவினார்.

# தமிழரசு

**R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023**
**& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023**

***Date of Publication : 2nd week of every month***
***Date of Posting : 27th - 30th of every month***




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் 05.06.2022 அன்று, கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் 127ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அரசின் சார்பில் சென்னை, திருவல்லிக்கேணி, வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் மலர்போர்வை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.


Published by Dr.V.P. JEYASEELAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JEYASEELAN, I.A.S.,